ஸ்ரீ தமிழ்
உண்மை நின்றிட வேண்டும்

**ஆசிரியர் – பதிப்பாளர் :**
இல. பத்மப்ரியா

**பொறுப்பாசிரியர் :**
வெ. ஜெயராமன்

**துணை ஆசிரியர்கள் :**
நா. பாஸ்கரன்
சி. பாண்டிக்குமார்

**வடிவமைப்பு :**
ஸ்ரீஸ்வயம்

**சட்ட ஆலோசகர்கள் :**
இல. ஸ்ரீராம்
த. பாஸ்கர்

**அலுவலக முகவரி:**
ஸ்ரீ தமிழ்
77/6, 10வது அவென்யூ,
அசோக்நகர்,
சென்னை -600 083

70102 81932

http://www.shreetv.tv
facebook.com/shreetv
x.com/Shreetv media
youtube com/ShreeTV
shreemedia.news@gmail.com

Press and Registration of Books Act-ன்படி எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டவை.

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு ஸ்ரீ தமிழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகளின் கருத்துகள் படைப்பாளர்களின் சொந்தக் கருத்துகளே!

**தனி பிரதி: ரூ 30/-**
**ஆண்டு சந்தா: ரூ 600/-**

# தீரா விடம் என்று தெரிந்தும் தவறு செய்யும் தேசியக் கட்சிகள்

தமிழக சட்டமன்றத் தேர்தல் கூட்டணிப் பேச்சு வார்த்தைகள் முடிவடைந்து, கூட்டணிகளில் கட்சிகளுக்குள் தொகுதிப் பங்கீடுகளும் செய்து முடித்துவிட்டனர். மாநிலக் கட்சிகள் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டு, களப்பணியைத் தொடங்கிவிட்டனர். தேசியக் கட்சிகள் இன்னும் வேட்பாளர்களை அறிவிக்கவில்லை.

40 தொகுதிகள் என்று ஏலத்தைத் தொடங்கிய காங்கிரஸ், 28ல் பணிந்தது. பா.ஜ.க 27ல் பணிந்தது. தி.மு.க அரசின் மீது கடுமையான அதிருப்தி நிலவுகிறது. கூட்டணி பலமின்றி ஆட்சி அமைக்க முடியாத சூழலே நிலவுகிறது. இதை தி.மு.க கூட்டணியிலுள்ள காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சியினரே வெளிப்படையாகத் தெரிவித்துள்ளனர்.

இப்படி பலவீனமாக இருக்கும் தி.மு.கவிடமிருந்து, கேட்கும் தொகுதிகளைக் காங்கிரஸ் கட்சியால் பெறமுடியாவிட்டால், தி.மு.க பலமடைந்தால் காங்கிரஸ் என்னவாகும். தி.மு.கவும், தொகுதிப் பங்கீட்டில் வலுவான தொகுதிகளைக் காங்கிரஸுக்குக் கொடுக்கவில்லை. இன்று காங்கிரஸ் வேட்பாளர் பட்டியலை அறிவிக்க முடியாமல் திணறி வருகிறது.

அ.தி.மு.க விற்கு சின்னத்தைப் பெற்றுத் தந்தது பா.ஜ.க. 18% ஓட்டில்லாத அ.தி.மு.கவிற்கு, அதுவும் 40 வயதிற்குக் கீழ் தொண்டர்களே இல்லாத அ.தி.மு.க விடமிருந்து, தொகுதி எண்ணிக்கை மட்டுமல்ல, வெற்றி பெறும் சாத்தியக்கூறுகள் உள்ள தொகுதிகளைக்கூட பெற முடியாமல் தன் நிலை இழந்து தவிக்கிறது.

அ.தி.மு.கவிலிருந்துச் சென்ற சமுதாய வாக்குகளை மீட்டுக் கொண்டுவர, அ.ம.மு.கவைக் கூட்டணிக்குள் கொண்டு வந்தது பா.ஜ.க. இன்று அ.தி.மு.க என்ற கட்சிக்கு உயிர் கொடுத்த பா.ஜ.க, அ.தி.மு.கவிடம் சரணடைந்ததால், உட்கட்சிப் பூசல் அதிகரித்து, தொண்டர்களின் கோபத்திற்கு ஆளாகி தவித்துக் கொண்டிருக்கிறது.

இரண்டு தேசியக் கட்சிகளின் பலமில்லாமல் ஆட்சி அமைக்க முடியாத திராவிடக் கட்சிகள், தேசியக் கட்சிகளின் தலைவர்களின் சுயநலத்தினாலும், அலட்சியத்தினாலும், அறிவிலித்தனத்தினாலும் திராவிடக் கட்சிகளுக்கு உயிர்கொடுத்து தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டுள்ளனர். கட்சிக்காகவும், கொள்கைக்காகவும் அரசியல் களம் காணும் தொண்டர்கள் மனமுடைந்து ஒதுங்குகின்றனர்.

இதனால் அரசியல் மேலும் வியாபாரமாகும். இது ஜனநாயகத்திற்கு ஆபத்து என்பதைவிட நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் ஆபத்து என்பதை உணர வேண்டும். கொள்கையில்லா சுயநல அரசியல் வளர்ந்தால், லஞ்ச லாவண்யம் பெருகும். மக்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்படுவர். அரசுக்கும், ஆட்சியாளர்களுக்கும் எதிரான மனநிலை மேம்படும். இதை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கும் எதிரி நாடுகள், இந்த சந்தர்ப்பத்திற்காக காத்திருக்கின்றனர். சுயநலத்தை தேசியம் வெல்லுமா?




# தேர்தல் களத்தின் நாடித்துடிப்பு 2026

ஸ்ரீ டிவி 2026 தமிழக சட்டமன்றத் தேர்தலையொட்டி 234 தொகுதிகளுக்கும் நேரடியாக களத்திற்குச் செய்தியாளர்களை அனுப்பி கள ஆய்வு செய்து வருகிறது. 234 தொகுதிகளிலும் பலதரப்பட்ட வாக்காளர்களை சந்தித்து, திமுக அரசு செயல்படுத்திய திட்டங்கள் எந்தளவிற்குச் சென்று சேர்ந்துள்ளது? அது ஓட்டுகளாக மாறுகிறதா? NDA கூட்டணிக்கு ஆதரவு எப்படியுள்ளது? பெண்கள், இளைஞர்கள் வாக்கு யாருக்கு? தவெக விஜயின் தாக்கம் எந்தளவிற்கு உள்ளது? சீமான் வாக்கு சதவீதம் உயருகிறதா? மோடி வெறுப்பு தமிழகத்தில் இன்னும் இருக்கிறதா? மத்திய அரசின் திட்டங்கள் மக்களுக்கு போய் சேர்ந்துள்ளதா? தொகுதியில் திமுக அரசு நிறைவேற்றிய வாக்குறுதிகள், நீண்டகால கோரிக்கைகள் என்னென்ன? என பல்வேறு கேள்விகளை கேட்டு செய்தியாளர்கள் தரவுகளை திரட்டி வருகின்றனர்.

குறிப்பாக, தொகுதியில் இருக்கும் பல்வேறு சமூகங்களைச் சார்ந்த மக்களை சந்தித்து எந்தக் கட்சிக்கு ஆதரவாக அச்சமூகம் உள்ளது, மத சிறுபான்மையினரின் ஆதரவு எதன் அடிப்பையில் கட்சியினருக்குப் போகிறது போன்ற தரவுகளையும் இந்த கருத்துக் கணிப்பில் கேட்டறிந்துள்ளனர் ஸ்ரீடிவி செய்தியாளர்கள். இந்த கருத்துக் கணிப்பு மூன்று கட்டங்களாக நடத்தப்படுகிறது. வேட்பாளர்கள் அறிவிப்புக்கு முன்பு, வேட்பாளர் பிரச்சாரம் தொடங்கிய பின் மற்றும் கடைசி கட்டமாக களம் யாருக்கு மாற இருக்கிறது? என மூன்று சுற்றுகளில் நடப்பதால் ஓரளவு தொகுதி குறித்த முப்பரிமாண ஸ்கேன் ரிப்போர்ட்டாக ஸ்ரீ டிவியால் முழுமையாக வழங்க முடியும் என்ற நம்பிக்கையுள்ளது. அதன் மூலம் எந்த கூட்டணிக்கு முன்னிலை, யாருக்கு பாதகம்? என்பதையும் நாம் தரும் தரவுகளின் உண்மைத் தன்மையின் அடிப்படையில் அரசியல் கட்சிகள் தங்கள் வியூகங்களை சரியாக செயல்படுத்திட உதவும் ஒரு கருவியாக இந்த கருத்துக் கணிப்பு இருக்கும் என நம்புகிறோம்.

**இதோ முதற்கட்ட கருத்துக் கணிப்பு முடிவுகள்.**

**சட்டமன்றத் தொகுதி: திட்டக்குடி ( தனித் தொகுதி)**
**மாவட்டம்: கடலூர்**

இளைஞர்கள் மாற்றத்தை விரும்புகின்றனர். கல்லூரி மாணவர்கள் திராவிட கட்சிகளிடம் ஈர்ப்பு குறைந்துள்ளது. பெண்கள் திட்டம் போய் சேர்ந்துள்ளதால் வரவேற்பு. அமைச்சர் சிவி கணேசன் மீது அதிருப்தி இல்லை. உள்ளாட்சி பிரதிநிதிகள் மீது கோபம். பட்டியல் சமூக வாக்குகள் குறிப்பிட்ட அளவில் விஜய்க்கு செல்கிறது. தோராயமாக 35 ஆயிரம் வாக்குகள் செல்ல வாய்ப்புள்ளது.

**முடிவு:** தவெகவுக்கு பிரியும் வாக்குகள் வெற்றி திமுகவா? அதிமுகவா என்பதை முடிவு செய்கிறது.

**சட்டமன்றத் தொகுதி: விருத்தாச்சலம்**
**மாவட்டம்: கடலூர்**

இங்கு தான் விஜயகாந்த் வெற்றி பெற்றார். வன்னியர் கோட்டையில் ஓட்டை போட்ட தேமுதிக என சொல்லப்பட்டது. காங்கிரஸ் எம் எல் ஏ ராதாகிருஷ்ணன் மீது அதிருப்தி. ஏற்கனவே 862 வாக்குகள் வித்தியாசத்தில் தான் வெற்றி பெற்றிருந்தார். தேமுதிகவிற்கு ஆதரவு குறைந்துள்ளது. தனி மாவட்டம் கொடுக்காதது தொகுதியில் திமுகவிற்கு மிகப்பெரிய எதிர்ப்பு. பல தரப்பட்ட இளைஞர்களிடையே தவெக விஜய்க்கு பெரிய ஆதரவு உள்ளது.

**முடிவு:** திமுக கூட்டணிக்கு பின்னடைவு

**சட்டமன்றத் தொகுதி: ஜோலார்பேட்டை**
**மாவட்டம்: திருப்பத்தூர்**

இரண்டு முனை போட்டி, அதிமுக கே.சி. வீரமணிக்கு ஆதரவு குறையவில்லை. சென்ற முறை திமுகவின் தேவராஜ் 1000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி. தற்போது அவர்மீது அதிருப்தி. விஜயின்

தாக்கம் குறைவு. நாதக வாக்கு சதவீதம் குறையும்.
**முடிவு:** 48% அதிமுகவிற்கும் 42% திமுகவிற்கு கிடைக்க வாய்ப்பு.

**சட்டமன்றத் தொகுதி: வாணியம்பாடி**
**மாவட்டம்: திருப்பத்தூர்**

வன்னியர்கள், முஸ்லீம்கள் அதிகமுள்ள தொகுதி. நகர்ப்புறங்களில் திமுக ஆதரவு. சின்னம் தான் வெற்றியைத் தீர்மானிக்கிறது. 5000 மகளிர் உரிமைத் தொகை நல்ல தாக்கம். திமுக கூட்டணி, அதிமுகவிடையே கடுமையான போட்டி இருக்கும்.
**முடிவு:** IUML உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டால் வெற்றிக்கு வாய்ப்பு. முடிவை மதம் தீர்மானிக்கிறது.

**சட்டமன்றத் தொகுதி: ஜெயங்கொண்டம்:**
**மாவட்டம்: அரியலூர்**

6 முறை அதிமுக வெற்றி பெற்ற தொகுதி. வன்னியர்கள் வாக்கு அதிகம். மகளிர் உரிமைத் தொகை பலருக்குச் சென்று சேரவில்லை. எம்.எல்.ஏ பெயர் பல கிராமங்களில் தெரியவில்லை. திமுக மீது அதிருப்தி அதிகம். விசிக வாக்கு விஜய்க்கு மாறவில்லை. கிறிஸ்தவர்கள் ஆதரவு விஜய்க்கு. நீட் அரசியல் இங்கு எடுபடவில்லை. PMK கட்சியை உடைத்தது திமுக என்ற கோபம் வன்னியர்கள் மத்தியில் நிலவுகிறது.
**முடிவு:** அதிமுகவிற்கு 65% ஆதரவு. சிவசங்கரின் உட்கட்சி அரசியல் விளையாட்டு அதிமுகவிற்கு சாதகம்.

**சட்டமன்றத் தொகுதி: திருப்பத்தூர்**
**மாவட்டம்: திருப்பத்தூர்**

9 முறை திமுக வெற்றி பெற்ற தொகுதி. நல்லதம்பி மீது ஆதரவும், எதிர்ப்பும் கலந்தே உள்ளது. விடியல் பயணத்தால் பெண்கள் காத்திருப்பு. இளைஞர்கள் பெரும்பாலும் வெளிமாநிலத்தில் வேலை செய்கிறார்கள். பெண்கள் மத்தியில் விஜய்க்கு ஆதரவு. வன்னியர்கள் மத்தியில் தவெகவுக்கு 10-15% ஆதரவு.
**முடிவு:** அமமுக நிற்பதால் திமுகவுக்கே வாய்ப்பு அதிகம்

**சட்டமன்றத் தொகுதி: பாபநாசம்**
**மாவட்டம்: தஞ்சாவூர்**

ஹிந்துக்கள் பகுதியில் விஜயின் தாக்கம் உள்ளது. சென்ற முறை அமமுக தனியாக போட்டியிட்டதால் ஜவாஹிருல்லா வெற்றி பெற்றார். தொகுதியில் அவர்மீது அதிருப்தி. தற்போது IUMLக்கு இந்த தொகுதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது( சர்வேயின் போது தொகுதி ஒதுக்கீடு நடைபெறவில்லை) அதிமுக கூட்டணியில் பாமக, அமமுக போட்டியிடுவது கூடுதல் பலம்.
**முடிவு:** அதிமுக முன்னிலை

**சட்டமன்றத் தொகுதி: திருவள்ளூர்**
**மாவட்டம்: திருவள்ளூர்**

திமுக எம்.எல்.ஏ வி.ஜி.ராஜேந்திரன் மீது அதிருப்தி. 10 ஆண்டுகளில் பல பகுதிகளுக்கு இவர் சென்று பார்க்கவேயில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. கமெண்டோ பாஸ்கர் தவெக சார்பில் நின்றிருந்தால் போட்டி கடுமையாக இருந்திருக்கும். ரமணாவிற்கு குறையாத செல்வாக்கு.
**முடிவு:** அதிமுகவிற்கு சிறியளவில் முன்னிலை

**சட்டமன்றத் தொகுதி: திண்டுக்கல்**
**மாவட்டம்: திண்டுக்கல்**

பழங்குடியினர், முஸ்லீம்கள் வாக்குகள் அதிகமுள்ள தொகுதி. நாயுடுக்களின் ஓட்டுகளும் கணிசமாக உள்ளது. பாஜகவின் ஓட்டு சதவீதமும் வளர்ந்துள்ள தொகுதி. திருப்பரங்குன்றம் தீபத் தூண் விவகாரத்தில் திமுக மீது கோபம். ஐ.பெரியசாமி மகன் பழனி எம்.எல்.ஏ ஐ.பெ.செந்தில்குமார் போட்டியிடுகிறார் (சர்வேயின் போது அறிவிக்கப்படவில்லை)
**முடிவு:** கடும் போட்டி

**சட்டமன்றத் தொகுதி: திருத்தணி**
**மாவட்டம் : திருவள்ளூர்**

முதலியார்கள், வன்னியர், நாயுடு, ரெட்டியார்,ஆந்திராவை ஒட்டியுள்ள பகுதிகளில் ராஜுலு சமூகம் அதிகமுள்ள தொகுதி. திமுக எம்.எல்.ஏ சந்திரன் மீது அதிருப்தி. பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த ப்ரியா என்ற நிர்வாகியை காழ்ப்புணர்ச்சி காரணமாக ஓரங்கட்டுவதாக குற்றச்சாட்டு. தேமுதிகவிற்கு இத்தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. 40 ஆயிரம் வாக்குகள் விஜய்க்கு கிடைக்க வாய்ப்பு.
**முடிவு:** விஜய் பிரிக்கும் வாக்கு அதிமுகவுக்கு சாதகம்

**சட்டமன்றத் தொகுதி: ஓமலூர்**
**மாவட்டம்: சேலம்**

கடந்த 3 முறை அதிமுக வெற்றி பெற்றுள்ளது. வன்னியர்கள், பட்டியல் சமூகம், கொங்கு வேளாளர்கள் அதிகமுள்ள தொகுதி. விசிகவின் 20%, பாமக 5%, அதிமுக 10% வாக்குகள் விஜய்க்கு போக வாய்ப்புள்ளது. நாதகவிற்கு ஆதரவில்லை. அதிமுக எம்.எல்.ஏ ஆர்.மணி மீது அதிருப்தி இல்லை. கனிமவளக் கொள்ளை மிகப் பெரிய தாக்கம்.
**முடிவு:** அதிமுகவுக்கு பிரகாசமான வாய்ப்பு ( விஜய் பிரிக்கும் வாக்கு வெற்றி வித்தியாசத்தைக் குறைக்கும் )

**சட்டமன்றத் தொகுதி: ஆம்பூர்**



**மாவட்டம்: திருப்பத்தூர்**

தோல் தொழிற்சாலை அதிகமுள்ள தொகுதி. முதலாளிகளை நம்பியுள்ள தொழிலாளிகள் அவர்கள் சொல்வதைக் கேட்டு வாக்களிக்கும் போக்கு. மத்திய அரசின் திட்டங்கள் போய் சேர்ந்துள்ளது. இளைஞர்கள் மத்தியில் விஜய்க்கு ஈர்ப்பு உள்ளது. திமுகவின் வில்வநாதன் மீது அதிருப்தி. முஸ்லீம்களுக்கு இந்த தொகுதி ஒதுக்காத நிலையில் அவர்களின் வாக்கு குறைந்தளவாவது பிரியும் வாய்ப்புள்ளது. நாதகவின் வாக்கு சதவீதம் குறையும்.

**முடிவு:** திமுகவிற்கு சற்றே பின்னடைவு

**சட்டமன்றத் தொகுதி: தர்மபுரி**
**மாவட்டம்: தர்மபுரி**

சில பகுதிகளில் திமுகவின் இலவச திட்டங்களுக்கு கிராம புறத்தில் ஆதரவும், நகர் புறத்தில் ஆதரவு குறைவாகவும் உள்ளது. இளைஞர்கள் மத்தியில் தவெகவுக்கு ஆதரவு அதிகரித்துள்ளது. பாமகவுக்கும் சாதிரீதியாக இளைஞர் மத்தியில் ஆதரவு உள்ளது. தவெகவினால் விசிகவின் பெருமளவு வாக்கு சதவீதம் குறைய வாய்ப்பு.

**முடிவு:** விஜய் பிரிக்கும் வாக்குகளால் அதிமுகவிற்கு முன்னிலை

**சட்டமன்றத் தொகுதி: குன்னம்**
**மாவட்டம்; பெரம்பலூர்**

அமைச்சர் சிவசங்கருக்கு தொகுதி முழுவதும் ஆதரவு இருக்கிறது. பெண்களின் வாக்குகளை குறிவைத்து அதிகப்படியான இலவச பேருந்து சேவை அதிகளவில் செயல்படுத்தப்படுகிறது. ஆனால் வன்னியர் சிறப்பு இடஒதுக்கீடுக்கு எதிராக குரல் கொடுத்த சிவசங்கர் மீது அதே சமூகம் கடும் அதிருப்தி அச்சமூகத்தில் நிலவுகிறது. உடையார் சமூகம் வெற்றியைத் தீர்மானிக்கும் நிலையில் இருப்பதால் சிவசங்கரை எதிர்கொள்ள உடையார் வேட்பாளரை அதிமுக நிறுத்தலாம் அல்லது ஐஜேகேவுக்கு ஒதுக்கலாம் என நமது கருத்து கணிப்பில் சொல்லியிருந்தோம். அதன் அடிப்படையில் அதிமுக பச்சைமுத்துவின் ஐஜேகேவுக்கு இத்தொகுதியை ஒதுக்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவு:** விஜய் பிரிக்கும் வாக்கு, உடையார் சமூகத்தின் வாக்கு பிரிவது சிவசங்கருக்கு அதிர்ச்சியைத் தரும்.

**சட்டமன்ற தொகுதி: எடப்பாடி**
**மாவட்டம்: சேலம்**

முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி போட்டியிடுவதால் இது ஒரு ஸ்டார் தொகுதி. இந்த தொகுதி முழுவதும் உட்கட்டமைப்பை மிகப் பெரியளவில் EPS உருவாக்கி உள்ளார். அனைத்து சமூகம், கட்சியினரிடையே மிகப் பெரிய ஆதரவு EPSக்கு உள்ளது. வன்னியர், கொங்கு வேளாளர்கள் வாக்கு அதிமுகவுக்கு சாதகமாக உள்ளது. தவெகவுக்கு 15% வாக்கு, நாதகவுக்கு 10% வாக்கு கிடைக்கும்.

**முடிவு:** வாக்கு வித்தியாசம் குறைந்தாலும் எடப்பாடி பழனிசாமி வெற்றி உறுதி.

**சட்டமன்றத் தொகுதி: சேலம் ( மேற்கு )**
**மாவட்டம்: சேலம்**

எங்கெங்கும் கிடைக்கும் கஞ்சா, போதைப் பொருட்களால் அரசு பள்ளிக்கு அனுப்பவே பெண்கள் அச்சம். பெண்கள், இளைஞர்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புகிறார்கள். 20% வாக்குகள் தவெகவுக்குச் செல்ல வாய்ப்பு. அருள் எம்.எல்.ஏ மீது மக்களுக்கு அதிருப்தி இல்லை, நன்மதிப்பு இருக்கிறது. தொகுதிக்குள் தேர்தலில் வாக்குறுதியாக சொல்லாததையும் செய்து தந்திருக்கிறார். ஆனால் தற்போது Dr.ராமதாஸ் பக்கம் நிற்கிறார். பாமக அன்புமணி தரப்புக்கு மாம்பலம் சின்னம் என்பதால் அருள் வெற்றி பெறுவது கடினம்.

**முடிவு:** அதிமுக கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு

**சட்டமன்றத் தொகுதி: திருவண்ணாமலை**
**மாவட்டம் : திருவண்ணாமலை**

திமுகவின் பவர்புல் அமைச்சர் எ.வ.வேலு போட்டியிடும் தொகுதி. இந்தத் தொகுதியை பாஜகவிற்கு ஏன் ஒதுக்கினார்கள் என்பது புரியாமல் இருக்கிறார்கள். உள்ளூர் பக்தர்கள் கோயிலில் தரிசனம் செய்ய முடியாத நிலையும், தொடர்ந்து ஹிந்து மதத்தை இழிவுபடுத்தும் திமுக மீது ஆன்மிக அன்பர்களுக்கு அதிருப்தி. கிரிவலத்திற்கு கூடும்





லட்சக்கணக்கான பக்தர்களுக்கு ஏற்ற வகையில் கட்டமைப்பை உருவாக்காதது குற்றச்சாட்டு. வலிமையான திமுக வேட்பாளருக்கு எதிராக அதிமுக நிற்காமல் இருப்பது செட்டிங்கா என அப்பகுதிகள் கேட்க ஆரம்பித்துள்ளனர்.

***முடிவு:*** ஏ.வ.வேலு நிச்சயமாக வெற்றி பெறுவார். எதிர்த்து நிற்பவரும் வளம் பெறுவார்.

**சட்டமன்றத் தொகுதி: திருவிடைமருதூர் (தனித் தொகுதி )**
**மாவட்டம்: தஞ்சாவூர்**

திமுக சட்டமன்ற உறுப்பினரும், உயர் கல்வித்துறை அமைச்சருமான கோவி.செழியன் மீது அதிருப்தி இல்லை, ஆதரவு அலை வீசுகிறது. மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம் தாக்கம் இருக்கிறது. இளைஞர்கள் வாக்கு விஜய் பக்கம் இருக்கு. பெரும்பாலும் பட்டியல் சமூகத்தில் வாக்கு தவெகவுக்குச் செல்கிறது. அதிமுகவிடம் வலுவான வேட்பாளர் இல்லாதது மைனஸ்.

***முடிவு:*** விஜய் பிரிக்கும் வாக்கு, ம.க.ஸ்டாலின் தாக்கம், அதிமுகவுக்கு பின்னடைவு. தற்போதைய சூழலில் கோவி.செழியன் முன்னிலை.

**சட்டமன்றத் தொகுதி: கும்பகோணம்**
**மாவட்டம்: தஞ்சாவூர்**

மகளிர் உரிமைத் தொகை, விடியல் பேருந்து பெண்களிடம் தாக்கம். சாக்கோட்டை அன்பழகன் மீது எதிர்ப்பு இல்லை. ஆனால் மாநகராட்சி செயல்பாடுகளால் மக்களிடம் கடும் அதிருப்தி. திமுக கட்சியில் உட்கட்சிப் பூசல். NDA கூட்டணியில் தமாகவிற்கு இந்த தொகுதி ஒதுக்கப்பட்டிருப்பதோடு, அக்கட்சி தாமரைச் சின்னத்தில் போட்டியிடுவதால், அதிமுக முழுவீச்சில் இணைந்து செயல்படுமா என்பது கேள்விக்குறி. தவெக விஜய்க்கு இளைஞர்கள் மத்தியில் ஈர்ப்பு.

***முடிவு:***தமாக சாக்கோட்டை அன்பழகனை சமாளிக்குமா? மதில்மேல் பூனை

**சட்டமன்றத் தொகுதி: திருவையாறு**
**மாவட்டம்: தஞ்சாவூர்**

தேவேந்திர குல வேளாளர்கள் அதிகம் இருக்கும் தொகுதி. இதில் இளைஞர்கள் தவெகவுக்குச் செல்ல வாய்ப்பு. அமுமக கூட்டணியில் இருப்பதால் அதிமுகவிற்கு லாபம். திமுக எம்.எல்.ஏவை பார்த்ததே இல்லை என தொகுதியில் குற்றச்சாட்டு. ஒரு சில பகுதியில் ஒன்னுமே செய்யல, இருந்தாலும் ஓட்டு போடுகிறோம் என்று சொல்கிறார்கள். விவசாயிகள் மத்தியில் கிஸான் நிதிக்கு வரவேற்பு.

***முடிவு:*** அமமுக போட்டியிடுவதால் சற்றே முன்னிலை.

**சட்டமன்றத் தொகுதி: நத்தம்**
**மாவட்டம்: திண்டுக்கல்**

முத்தரையர் சமூகம் அதிகமாக உள்ள தொகுதி. நத்தம் விஸ்வநாதனுக்கு குறையாத மக்கள் செல்வாக்கு. தொகுதியின் அடிப்படை வசதிகளை கொண்டு வந்ததே விஸ்வநாதன் தான் என்று பெரும்பாலான மக்கள் கூறுகிறார்கள். தவெக பிரிக்கும் வாக்கு வெற்றி சதவீதம் குறையும். மத்திய அரசின் திட்டங்கள் அனைத்து கிராமத்திற்கும் சென்று சேர்ந்துள்ளது. ஆனால் அதை திமுக ஸ்டிக்கர் ஒட்டியுள்ளது. உதயநிதியின் எய்ம்ஸ் பிரச்சாரம் எடுபடாது.

***முடிவு:*** நத்தம் விஸ்வநாதன் வெற்றி பெற வாய்ப்பு. ஆனால் எளிதல்ல.

**சட்டமன்றத் தொகுதி: குளச்சல்**
**மாவட்டம்: கன்னியாகுமரி**

தொடர்ந்து போட்டியிடும் காங்கிரஸ் கட்சியின் JJ பிரின்ஸ் மீது அதிருப்தி. இந்தத் தொகுதியில் தாரகை கத்பட் நிற்க முயற்சி செய்வதாக பேச்சு. விஜயின் தாக்கம் கடற்புறங்களை விட இங்கு சற்று குறைவாக உள்ளது. மதரீதியாக வாக்களிக்கும் போக்கு என்பதால் காங்கிரஸுக்கு ஆதரவு. கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லீம்கள் திமுக, காங்கிரஸ்க்கு ஆதரவு. பாஜக, காங் வேட்பாளர்கள் இப்போது வரை அறிவிக்கப்படவில்லை.

***முடிவு:*** வேட்பாளர்கள் பொறுத்து களம் மாறலாம்.

**சட்டமன்றத் தொகுதி: கன்னியாகுமரி**
**மாவட்டம்: கன்னியாகுமரி**






கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தளவில் அனைத்து சமூகங்களிலிருந்தும் விஜயின் தவெகவுக்கு ஓட்டுக்கள் பிரிகின்றன. அவருக்கு 10% வரை வாக்கு கிடைக்கலாம். தொகுதி எம்.எல்.ஏ தளவாய் சுந்தரம் மீது மக்களிடம் அதிருப்தி இல்லை. ஆனால் சமீபமாக அதிமுக கட்சிக்குள் சாதி சார்ந்து எழும்பியுள்ள பிரச்சினை எந்தளவிற்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் என தெரியவில்லை.

**முடிவு:** NDAவுக்கு ஆதரவான தொகுதி

**சட்டமன்றத் தொகுதி: சங்கராபுரம்**
**மாவட்டம் : கள்ளக்குறிச்சி**

வன்னியர், பிள்ளைமார்,முதலியார், செட்டியார், பட்டியல் சமூகம் இருக்கும் தொகுதி. சின்ன சேலம், கச்சிராபாளையம் பகுதிகளில் திமுகவுக்கு நல்ல ஆதரவு, அண்ணாமலையால் பாஜகவுக்கு வளர்ச்சி. இரண்டு முறை தேர்வான உதயசூரியன் எம் எல் ஏ மீது சில பகுதிகளில் அதிருப்தி. கச்சிராபாளையத்தில் அதிகளவில் போதை கிடைப்பதால் பெண்கள் அச்சம். முடிவு: சற்று முனைந்தால் NDA கூட்டணி வெல்ல வாய்ப்பு

**சட்டமன்றத் தொகுதி: பெரம்பூர்**
**மாவட்டம்: சென்னை**

விஜய் இத்தொகுதியில் போட்டியிடுவார் என பொதுமக்கள் கருதுவதாக நமது கள ஆய்வில் தெரிவித்தது போலவே தவெக சார்பில் களம் காண்கிறார் விஜய். பட்டியல் சமூகம், வன்னியர், நாயுடு, செட்டியார், யாதவர்கள், நாடார்கள் உள்ள தொகுதி. ஆங்கிலோ இந்தியர்கள் உள்ள தொகுதி. கிறிஸ்தவர்கள், இளம் பெண்கள், இளைஞர்கள் ஆதரவு அதிகளவில் விஜய்க்கு உள்ளது. மாநகராட்சி செயல்பாட்டில் அதிருப்தி. இத்தொகுதியில் சேகர் பாபு நின்றால் திமுகவுக்கு ஆதரவு. தற்போதைய திமுக எம் எல் ஏ ஆர்.டி.சேகர் மீது அதிருப்தி.

**முடிவு:** வயதானவர்கள் திமுக, இளைஞர்கள் விஜய்க்கு பெருகும் ஆதரவு. கடும் போட்டி.

**சட்டமன்றத் தொகுதி: நிலக்கோட்டை**
**மாவட்டம்: திண்டுக்கல்**

நிலக்கோட்டை ஒரு தனித்தொகுதி. பாஜகவிற்கு இங்கு நல்ல வளர்ச்சி இருப்பதாக கள ஆய்வில் தெரிய வந்துள்ளது. அதிமுகவும் வலுவாக உள்ளது. மத்திய அரசின் திட்டங்கள் எல்லா கிரமங்களுக்கும் போய் சேர்ந்துள்ளது. சட்டம் - ஒழுங்கு, பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை குறித்து பெண்கள் அச்சப்படுகிறார்கள். திமுக எதிர்ப்பு மக்களிடம் உள்ளது.

**முடிவு:** அதிமுக தேன்மொழி தொடர்ந்து போட்டியிடும் தொகுதி. அவருக்கு வெற்றி வாய்ப்பு அதிகம்.

**சட்டமன்றத் தொகுதி: அரியலூர்**
**மாவட்டம்: அரியலூர்**

வன்னியர்கள், உடையார், மூப்பனார்,பிள்ளைமார், முதலியார், பட்டியல் சமூகம் அதிகமுள்ள தொகுதி. திருமானூரில் முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் கணிசமாக உள்ளனர். உடையார்கள் வெற்றியைத் தீர்மானிக்கிறார்கள். விசிக வலுவாக உள்ள தொகுதி. அரியலூர் நகரத்தில் உள்ள இளைஞர்கள் விஜய் பக்கம் உள்ளனர். மதிமுக மீது திமுகவினருக்கு அதிருப்தி கிராமங்களில் இருப்போர் பாமக, விசிகவில் உள்ளனர். அதிமுகவின் கொறடா ராஜேந்திரனுக்கு நன்மதிப்பு உள்ளது.

**முடிவு:** அதிமுக நிச்சயம் வெல்லும் தொகுதி

**சட்டமன்றத் தொகுதி: செய்யூர்**
**மாவட்டம்: செங்கல்பட்டு**

விசிக எம்.எல்.ஏ பனையூர் பாபு வெற்றி பெற்ற தொகுதி. வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை தான் அதிமுக, விசிக நிறுத்துகிறார்கள் என்ற ஆதங்கம் அப்பகுதி மக்களுக்கு உள்ளது. பனையூர் பாபு மீது பொதுமக்கள், விசிக கட்சியினரிடையே அதிருப்தி உள்ளது. பட்டியல் சமூக இளைஞர்கள் பெரியளவில் தவெக விஜய்க்கு ஆதரவாக உள்ளனர். வன்னியர்களும் அதிகமுள்ள தொகுதி. மீனவர்கள் விஜய் மற்றும் அதிமுகவுக்கு ஆதரவாக உள்ளனர். விசிக சார்பாக உள்ளூர் நிர்வாகிகளைத் தவிர்த்து சிந்தனை செல்வனை நிறுத்தி உள்ளது. தங்களுக்கு இத்தொகுதி வழங்கப்படாததால் விசிகவுக்கு



ஆதரவளிப்பதில் திமுக நிர்வாகிகள் தயக்கம்.

**முடிவு:** தவெக பிரிக்கும் வாக்கு வெற்றியைத் தீர்மானிக்கும்.

**சட்டமன்றத் தொகுதி: ஆவடி**
**மாவட்டம்: திருவள்ளூர்**

அமைச்சர் நாசர் மீது தொகுதி மக்களுக்கு பெரியளவில் அதிருப்தி இல்லையென்றாலும் அவரது மகன் மற்றும் கஅவால் அவருடைய நற்பெயர் கட்சியினரிடையேயும், மக்களிடையேயும் கெட்டுள்ளது. அதிமுக சார்பாக இஸ்லாமிய வேட்பாளரை நிறுத்தியிருந்தால் கடும் போட்டி நிலவும் என கள ஆய்வில் தெரிய வந்துள்ள நிலையில் பாஜகவிற்கு இத்தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**முடிவு:** பாஜகவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளதால் திமுக வெற்றி பெறுவது எளிதாகிறது.

**சட்டமன்றத் தொகுதி: கும்மிடிப்பூண்டி**
**மாவட்டம்: திருவள்ளூர்**

திமுக எம்.எல்.ஏ டி.ஜி. கோவிந்தராஜ் மீது தொகுதி மக்களிடையே பெரியளவில் அதிருப்தி இல்லை. தொகுதிகளுக்கு நன்கு அறிமுகமானவர் என்பதுடன் கல்வி நிறுவனங்களை நடத்தி வரும் பிரமுகர். போதைப் பொருட்கள், சட்டம் ஒழுங்கு பிரச்சினை குறித்து மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். எதிர்க்கட்சிகள் வலுவான வேட்பாளரை நிறுத்துவதை பொறுத்துக் களம் மாறும். பாமகவுக்கு ஆதரவு இருக்கும் தொகுதியில் தற்போது டாக்டர்.ராமதாஸ் பிரிவு சார்பில் வேட்பாளர் நிறுத்தி இருப்பதால்



வாக்குகள் பிரிய வாய்ப்பு.

**முடிவு:** முதற்கட்ட கள ஆய்வில் திமுகவுக்கே சாதகம்

**சட்டமன்றத் தொகுதி: பொன்னேரி**
**மாவட்டம்: திருவள்ளூர்**

வன்னியர், பட்டியல் சமூகம், நாயுடு, மீனவர்கள் என பலதரப்பட்ட மக்களும் உள்ள தொகுதி. பல ஆண்டுகளாக தனித்தொகுதியாக இருப்பது மற்ற சமூகங்களுக்குள்ளே வருத்தம் உள்ளது. காங்கிரஸ் துரை.சந்திரசேகர் மீது தொகுதியில் அதிருப்தி. தனியார் கல்லூரிகளில் தேர்தல் பிரச்சாரம் தொடங்கி விட்டது. அங்கு பயிலும் மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள் அந்த கல்லூரியை நடத்தும் அரசியல் பிரமுகர் சார்ந்த கட்சிக்கு வாக்களிக்கும் சூழல் உள்ளது. அதிமுக வலுவாக உள்ள தொகுதி. நாதக, தவெக கட்சிகள் பெரியளவில் இளைஞர்களின் ஓட்டுகளை இத்தொகுதியில் பிரிக்கவில்லை என்பது தற்போதைய கள நிலவரம்.

**முடிவு:**காங்கிரஸ்எம்.எல்.ஏமீதுஅதிருப்திஇருப்பதால் அதிமுகவின் பலராமன் வெற்றி பெற வாய்ப்பு.

**சட்டமன்றத் தொகுதி: பாலகோடு**
**மாவட்டம்: தர்மபுரி**

வன்னியர்கள், பட்டியல் சமூகம், வேளாள கௌண்டர்கள், மலைவாழ் மக்கள் இருக்கும் பகுதி. அதிமுகவிற்கு ஆதரவான தொகுதி. சர்க்கரை ஆலை மூடப்பட்டு இருப்பது மக்களிடையே அதிருப்தி. தவெக விஜய், நாதக பிரிக்கும் வாக்குகளால் அதிமுக, திமுக இடையே கடும் போட்டி நிலவுகிறது. அதிமுகவின் கே.பி.அன்பழகன் தொடர்ந்து வெற்றி பெற்றுவரும் இத்தொகுதியில் கொஞ்சம் அலட்சியம் காட்டினாலும் தோல்வியடைய வாய்ப்பு.

**முடிவு:** அதிமுக, திமுக இடையே கடும்போட்டி 50;50

**சட்டமன்றத் தொகுதி: ஆத்தூர்**
**மாவட்டம்: திண்டுக்கல்**

ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் தனிப்பெரும் தலைவராக தொடர்ந்து வெற்றி பெற்று வருபவர் அமைச்சர் ஐ.பெரியசாமி. தொகுதிக்கு தேவையான அனைத்து நலத்திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளார். ஆள்பலம், படைபலம், பணபலம் என அனைத்து பலமும் பொருந்திய ஐ.பியை எதிர்கொள்வது அதிமுகவுக்கு சவாலாக உள்ளது. இரட்டை இலை நேரடியாக களமாடும் நிலையில் போட்டி சற்று கடுமையாக இருக்கலாம்.

**முடிவு:** ஐ.பெரியசாமிக்கு சாதகம்

# சுகி சிவத்தின் திருப்பரங்குன்றத் திருட்டுத்தனம்

ப்ரியா வெங்கட்



> **சமணர்களுக்கு முன்னே தமிழகத்தில் ஹிந்து மதம் இருக்கிறது. சமணம் பின்நாளில் தோன்றியது என்பது அடிப்படை வரலாறு தெரிந்தவனுக்கே தெரியும்,**

வழக்கறிஞர் வாஞ்சிநாதன் எழுதிய "திருப்பரங்குன்றம் தீர்ப்புகளும் வரலாற்று உண்மைகளும்" என்ற நூலின் வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது. இதில் நீதியரசர் ஹரி பரந்தாமன், உலகத் தமிழ் ஆய்வு மையத்தின் தலைவர் பாலகிருஷ்ணன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் பேசிய மேடைப் பேச்சாளர் சுகி. சிவம், வட இந்தியாவில் முருகப் பெருமானை கார்த்திகேயன் என்று அழைப்பார்கள். அங்கு அவர் திருமணமாகாத ப்ரம்மச்சாரி. தமிழகத்திலோ அவர் வள்ளி, தெய்வானையுடன் மணக்கோலத்தில் இருக்கிறார். ஆகவே, வட பாரதத்திலுள்ள கார்த்திகேயன் வேறு, தமிழகத்திலுள்ள முருகன் வேறு. இதை ஒத்துக்கொண்டால் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று, வடக்கு-தெற்கு அரசியலையும் பேசி தனது வாய் விபசாரத்தை, தற்குறிக் கூட்டத்தின் கைத்தட்டலைப் பெற திறம்படப் பேசினார். அவர் வழிக்கே வருவோம்! பழனியில் பாலதண்டாயுதபாணியாக ஸ்வாமி இருக்கிறார் என்பதால், பழனியில் இருக்கும் முருகப்பெருமானுக்கும், திருத்தணியிலும், திருப்பரங்குன்றத்திலும், பழமுதிற்சோலையிலும் இருக்கும் முருக பெருமானுக்கும் தொடர்பில்லை என்று அறுபடை வீடுகளிலும் பிரிவினை அரசியல் செய்வாரா?

பிரம்மச்சாரியாக ஐயப்பன் அருளும் கோயில்கள் பல. அதில் சபரிமலையும் ஒன்று. அதனால் மாதவிடாய் விலக்கு வயதில் இருக்கும் பெண்கள் சபரிமலை செல்வதில்லை. ஆனால் பல திருக்கோயில்களில் ஐயப்பன் பூர்ண புஷ்கலையுடன் அருளுகிறார். எனவே அந்த ஐயப்பன் வேறு, சபரி ஐயப்பன் வேறு என்று சொல்லுவாரோ! குளத்துப்புழையில் பாலனாக ஐயப்பன் இருப்பதால் அவரை ஏற்க முடியாது என்று சொன்னாலும் சொல்லுவார் சுகி.சிவம். தொடர்பே இல்லாமல், வடக்கு- தெற்கு பிரிவினைவாதம் பேச வேண்டும் என்பதற்காக இப்படி ஒரு பொய்.

இதைவிட பெரிய பித்தலாட்டம் என்னவென்றால், இப்போது ஹிந்துக்கள் தீபம் ஏற்ற முயலும் தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்று வீரத்துறவி இராம.கோபாலன் அவர்கள் சொல்லவில்லை என்று பேசியுள்ளார். இதே இடத்தில் தீபம் ஏற்ற வேண்டும் என்று நீதியரசர் திரு.கனகராஜ் அவர்கள் தீர்ப்பு வழங்கிய வழக்கில், இந்த இடத்தில் தீபம் ஏற்ற வேண்டும் என்று கோரியவர், வீரத்துறவி.இராம.கோபாலன் அவர்கள். இந்த வழக்கில் வீரத்துறவிக்காக, முன்னாள் பஞ்சாப்-ஹரியானா நீதிபதியாக இருந்த திரு.கண்ணன் அவர்கள் வாதாடினார். இந்த வழக்கிற்கான அடிப்படை வேலைகளைச் செய்தவர் வழக்கறிஞர் திரு.வெங்கடகிருஷ்ணன் அவர்கள். இப்படி, நீதிமன்ற ஆவணம் இருக்கும்போதே புருடா விடுகிறார் என்றால், இவர் ஒரு ஹேபிச்சுவல் அபண்டராகத்தான் இருக்க வேண்டும். ஒரு பொய்யைச் சொல்வது என தீர்மானித்து விட்டால் வாழ்நாள் முழுவதும் பொய் சொல்ல வேண்டிய சூழல் ஏற்படும் என்று இந்தக் கூட்டத்தில் சுகி சிவம் பேசியிருப்பது அவரை உணர்ந்து பேசிய வார்த்தைகள்!

சமய விஷயங்களுடன் இவர் தன் பேச்சை நிறுத்தாமல், வரலாற்றையும் ஒரு கை பார்த்துள்ளார் சுகி.சிவம். இந்த மலைக்கு உரிய சமணர்கள்

மவுனமாக உள்ளனர். காரணம் அவர்கள் வாக்கு அளித்து யாரும் ஆட்சியை பிடிக்கப் போவதில்லை என்று ஹிந்துக்களுக்கும்-சமணர்களுக்கும் இடையே பிளவை ஏற்படுத்த முயற்சிக்கிறார். மிகவும் தொன்மையானதே வரலாற்றுக் காலங்களில் உறுதியானது என்பது கூட, திருப்பரங்குன்றம் மலைக்காகப் போராடும் ஹிந்துக்களுக்குத் தெரியவில்லை என்று, ஹிந்துக்களை அறிவிலிகள் என்று முத்திரை குத்தும் விதமாகப் பேசி தன் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டார்.

சமணர்களுக்கு முன்னே தமிழகத்தில் ஹிந்து மதம் இருக்கிறது. சமணம் பின்நாளில் தோன்றியது என்பது அடிப்படை வரலாறு தெரிந்தவனுக்கே தெரியும், காசுக்குக் வரலாறு பேசுபவருக்குத் தெரியாமல் இல்லை, காசு அவரை இப்படி பேச வைத்திருக்கிறது. இந்த ஆதங்கத்தை இதே மேடையில் வெளிப்படுத்தியுள்ளார் சுகி.சிவம். என்னை 200 ரூபாய் உ.பி என்கிறார்கள் என்றார். 200 கோடி என்று சொல்லக் கூடாதா என்று கேள்வியும் கேட்டார். இவர் ஒர்த் அவ்வளவு இல்லை 200 தான் என்று தி.மு.க நினைத்துவிட்டதோ என்று இப்போது நமக்குத் தோன்றுகிறது. சங்க இலக்கியமான திருமுருகாற்றுப்படையிலிருந்து தேவாரம் உள்ளிட்ட பக்தி இலக்கியங்கள் திருப்பரங்குன்றத்தை விவரிக்கின்றன. இவைகள், முருகனையும், சிவனையும், குறித்தே பேசுகின்றன. இது தவிர புராணங்களும் இம்மலையின் பெருமையை விவரிக்கின்றன.

இந்த மண்ணை ஆண்ட பாண்டியர்கள், நாயகர்கள், இசுலாமியர்கள், ஆங்கிலேயர்கள் என ஒவ்வொருவரும் தங்கள் சுவடை விட்டு சென்றுள்ளார்கள் என்று பேசியுள்ளார். இந்தப் பேச்சிலும், விஷமத்தனம் தென்படுகிறது. பாண்டியர்களும், நாயக்கர்களும் என்று பிரிப்பதன் நோக்கம் என்ன? மொழியின் அடிப்படையில் ஹிந்துக்களைப் பிரிக்க வேண்டும், நாயக்கர்களை ஆக்கிரமிப்பாளர்களாகச் சித்தரிக்கும் சதி, இந்தப் பேச்சில் உள்ளது. இதே பேச்சை ஓங்கோல் குடும்பமும் தமிழகத்தை ஆண்டுள்ளது என்று பேசுவாரா?

நாயக்கர்களும், பாண்டியர்களும் முருகனுக்கு ஆலயத் திருப்பணி செய்தனர், ஆங்கிலேய கிறிஸ்தவரும், இஸ்லாமியரும் என்ன செய்தனர்? கோவிலைக் கொள்ளை அடித்தும், இடிக்கவும் தானே செய்தனர். இந்தக் கோயிலைக் காக்க உயிர் தியாகம் செய்த குட்டி பட்டர் மற்றும் எல்லப்ப முதலி ஆகியோரின் கல்வெட்டுகள் இருப்பதை வாஞ்சிநாதன் ஏன் மறைத்தார் என்று இவர் கேட்பாரா? இவர் வீட்டில் திருடன் வந்து, அவன் செருப்பை விட்டுச் சென்றால், அவன் இவர் வீட்டிற்கு சொந்தக்காரனாகி விடுவானா? ஹிந்துக் கோயிலை தகர்க்க வந்தவனை, மலைக்குச் சொந்தக்காரனாக்கும் வரலாற்றுத் திரிபே இந்த வாதம். வரலாற்றை திரிக்க நினைப்பவர்கள் தான் எப்போதும் பிரச்னையை ஏற்படுத்திக்கொண்டு இருப்பார்கள் என்று இதே நிகழ்ச்சியில் பேசிய சுகி.சிவம், நூல் ஆசிரியர் வாஞ்சிநாதனுக்குப் பொறுந்தும்படியாக இப்படி பேசியுள்ளாரோ!

திருப்பரங்குன்றம் விவகாரம் ஆன்மீகவாதிகள் மட்டுமே பேசி இருக்க வேண்டிய விவகாரம்; அது பல பேரிடம் சென்றதுதான் சிக்கல் என்கிறார் சுகி.சிவம். அரசுக்கு எதிரான வழக்கில், முஸ்லீம்களிடம் கருத்துக் கேட்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் வாதாடிய தி.மு.க அரசு தானே இதை சிக்கலாக்கியது. 2007ஆம் ஆண்டு, ஹிந்துக்கள் தர்காவிலிருந்து 50 மீட்டர்களுக்கு அப்பால் எங்கு வேண்டுமென்றாலும் தீபம் ஏற்றலாம் என்ற தீர்ப்பை நடைமுறைப்படுத்த நீதியரசர் ஜி.ஆர். ஸ்வாமிநாதன் அவர்கள் உத்தரவிட்ட பின்னரும், தீபம் ஏற்றத் தடுத்ததே அரசியல் என்று பேசுவாரா? 2025 ஆம் ஆண்டு, ஆடு வெட்டச் செல்கிறோம் என்று பிரச்சினையைத் தொடங்கிய முஸ்லீம்களையும், ஹிந்துக்களைப் புண்படுத்தவும், மலையைச் சொந்தம் கொண்டாடவும் மலை மீது ஏறிச் சென்று பிரியாணி சாப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அத்திமீறியபோது சுகி.சிவம் என்ன செய்து கொண்டிருந்தார்? பிரச்சினையை ஏற்படுத்தியவர்களே முஸ்லீம்கள் தானே. இதில் யார் ஆன்மிகவாதி? முஸ்லீம்களா, நாத்திக தி.மு.க அரசா?

பல நீதிமன்றத் தீர்ப்புகளுக்குப் பின்னும், உரிமையை இழந்து தவிக்கும் ஹிந்துக்களை, வில்லன்களாகச் சித்தரிக்கும் இழிச் செயலை செய்ய ஒரு புத்தகம்! இதை வெளியிட்டு, ஆக்கிரமிப்பாளனை நிரபராதியாக்கி, பாதிக்கப்பட்ட ஹிந்துவை குற்றவாளியாக்குவதற்கு ஒரு வாடகைப் பேச்சாளர்!

இந்த நிகழ்ச்சியில் பேசிய சுகி.சிவம், ஆலய ஆகமங்களைக் கண்டறியும் குழுவில் அவர் இடம் பெற்றிருந்தார், அதை நீதிமன்றத்தின் வாயிலாகத் தடை பெற்றுவிட்டனர். உண்மையைத் தெரிந்து கொள்ளக் கூட விடுவதில்லை என்றும் பேசியுள்ளார். இந்தக் குழு தயாரித்த கேள்விகள் என்ன தெரியுமா? எந்த தமிழ் ஆகமம் இங்கே பின்பற்றப்படுகிறது? எவ்வளவு காலமாக இது உள்ளது? என்று கேள்வி. எந்த ஆகமம் என்ற கேள்வியில்லை. எந்தத் தமிழ் ஆகமம் என்று கேட்டால், அங்கே இருப்பது தமிழ் ஆகமம் மட்டுமே என்று, தீர்ப்பே சொல்லிவிட்டீர்களே.! இப்படிப்பட்ட நாணயமற்ற குழுவைத் தடுக்காமல் என்ன செய்வார்கள்? பதவிக்காகவும், பணத்திற்காகவும், புகழிற்காகவும் மக்களின் பக்தியை வைத்து பிழைப்பு நடத்தும் ஈனர்களுக்குத் தர்ம நியாயத்தைப் பற்றி என்ன கவலை?

# பண்பாட்டையும், வளர்ச்சியையும், நாட்டையும் அழிக்கும் இலவச அரசியல்

ரகுபதி

அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் இலவச குளிர்சாதனப் பெட்டி வழங்கப்படும் என்று அதிமுக வாக்குறுதி அளித்த நிலையில், ஆளுங்கட்சியான திமுக புதன்கிழமை தனது தேர்தல் அறிக்கையில், வருமான வரி செலுத்தாத பெண்களுக்கு ரூ. 8,000 மதிப்பிலான கூப்பன் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது. இதன் மூலம் குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம், தொலைக்காட்சி, மிக்ஸி, மைக்ரோவேவ் ஓவன் அல்லது இண்டக்ஷன் அடுப்பு எனத் தங்கள் குடும்பத்திற்குத் தேவையான எந்தவொரு வீட்டு உபயோகப் பொருளையும் அவர்கள் வாங்கிக்கொள்ளலாம். இந்த இலவச கூப்பன் ஹைலைட், ஆனால் மக்களிடம் சென்றடைந்த திட்டங்களை விரிவுபடுத்தினால் விளம்பரப்படுத்த எளிதாக இருக்கும் என்று, நடைமுறையில் இருக்கும் திட்டங்களை விரிவாக்கம் செய்துள்ளது தி.மு.க. குடும்பத் தலைவிகளுக்கான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மாதம் ரூ. 1,000-லிருந்து ரூ. 2,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 8-ஆம் வகுப்பு வரை விரிவாக்கம், சமூக பாதுகாப்பு ஓய்வூதியம் ரூ. 2,000-ஆக அதிகரிப்பு, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி 2000 ஆக உயர்வு, 35 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி என்று அறிவித்துள்ளது.

எடப்பாடி கே.பழனிசாமி தனது கட்சியின் தேர்தல் அறிக்கையில், சுமார் 2.22கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச குளிர்சாதனப் பெட்டி என்பதற்கு மேலாக, குடும்பங்களுக்கு ஒருமுறை ரூ.10,000 நிவாரணத் தொகை வழங்கப்படும் என்று தி.மு.க வழங்கிய 5000ஐ மிஞ்சினார். பெண்களுக்கு மட்டும் தானா, ஆண்களுக்கு இலவசப் பேருந்து பயணம், ஆண்டுக்கு மூன்று இலவச எரிவாயு சிலிண்டர்கள், என்று வாக்குறுதிகளை அள்ளி வீசியுள்ளார்.



இந்தத் தேர்தலில் புதிதாகக் களம் காணும் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகமும் தன் பங்கிற்கு வாக்குறுதிகளை அள்ளி வீசியுள்ளது. மகளிர் தின விழாவில் பங்கேற்ற விஜய், மகளிருக்கு மாதம்தோறும் ரூ. 2500, தாலிக்குத் தங்கம், பட்டுப்புடவை, குழந்தைக்கு மோதிரம், வேலையில்லா பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.4000, டிப்ளமோ படித்தவர்களுக்கு ரூ.2,500 என்று அறிவித்தார்.

இந்த இலவசங்கள் தமிழகத் தேர்தல் களத்தின் அடையாளமாகவே மாறிவிட்டன. 2006-ல் திமுகவின் வண்ணத் தொலைக்காட்சித் திட்டம் தேர்தல் கால அன்பளிப்புகளின் மிகச்சிறந்த அடையாளமாக மாறியது. 2011-ல் ஜெயலலிதா அதற்குப் போட்டியாக கிரைண்டர், மிக்ஸி, மின்விசிறி மற்றும் மடிக்கணினிகளை வழங்கினார். 2016-ல் அதிமுக இலவச கைபேசிகள், இலவச மின்சாரம், திருமணத்திற்குத் தங்கம், பெண்களுக்கு ஸ்கூட்டர்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டம் போன்ற வாக்குறுதிகளை அளித்தது. 2021-ல் அனைவருக்கும் வீடு, இல்லத்தரசிகளுக்கு மாதம் ரூ.1,500 உதவித்தொகை, ஆறு இலவச எரிவாயு சிலிண்டர்கள், சூரிய சக்தி சமையலறைகள், அம்மா சலவை இயந்திரங்கள், இலவச டேட்டா மற்றும் கல்விக்கடன் தள்ளுபடி ஆகியவற்றை அதிமுக வாக்குறுதி அளித்தது. அந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற திமுக, பெண்களுக்கு ரூ. 1,000 உரிமைத் தொகை, பெண்கள் மற்றும் திருநங்கைகளுக்கு இலவசப் போக்குவரத்து, காலை உணவுத் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்தியும் வருகிறது.

இலவசமாக ஒரு பொருளை வாங்குவதை அவமானமாகக் கருதும் எண்ணம் போனது மட்டுமின்றி, கை ஏந்துவதை உரிமையாகக் கருதும் மனநிலை வந்துவிட்டது. அரசியல்வாதி சம்பாதிக்கிறான், நமக்கும் கொடுக்கட்டும் என்று வெளிப்படையாகப் பேசும் நிலை வந்துவிட்டது. பொது வாழ்வில் தூய்மை அவசியம் என்ற நிலை மாறி, நேர்மையானவர்களைப் பிழைக்கத் தெரியாதவன் என்று ஏளனம் செய்யும் நிலையே உள்ளது. இந்த இலவசங்களின் நீட்சியே, தேர்தல் நேரத்தில் வாக்காளர்களை மகிழ்விக்கவரும் பணமும், பரிசுப்



பொருட்களும்.!

அரசின் செலவில் இலவசங்கள் பெற்றாலும், ரொக்கத்திற்குத் தான் ஓட்டு என்ற நிலையிருப்பதால், பொருட்களிலிருந்து நோட்டுகளை நோக்கி அறிவிப்புகள் பாயத் தொடங்கியுள்ளன. இந்த அறிவிப்புகளால் அரசியல் கட்சிகளுக்கு லாபம் ஏற்படுகிறது. ஓட்டுக்குக் கொடுக்கும் காசு, அரசு கஜானாவிலிருந்து போகிறது! இதையும் மீறி மக்கள் ஓட்டுக்கு தனியாக எதிர்பார்ப்பதால், வங்கிக் கணக்கில் செலுத்தும் முறையைத் தவிர்த்து, நேரடியாக, கட்சிக்காரர்களின் வாயிலாக பணத்தைக் கொடுக்க தி.மு.க அரசு முடிவு செய்து செயல்படுத்தியது. இருப்பினும் மக்களுக்கு திருப்தியுமில்லை, அரசுக்கு நற்பெயரும் இல்லையென்றால் நிர்வாகம் எவ்வளவு சீர்கெட்டிருக்க வேண்டும்!

பெண்களுக்கு இலவச பஸ் பயணம் என்று அறிவித்தது அரசு. இன்று பேருந்து நடத்துனர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் கலெக்ஷனிலிருந்து எடுத்துக் கொள்ளச் சொல்கிறார்கள். பேருந்துப் பயணம் இலவசம் என்பதால், தேவையே இல்லாமல் சில பெண்கள் பேருந்துப் பயணம் மேற்கொள்கிறார்கள். இவர்களால் பேருந்து நிரம்புவதால், நடத்துனர்கள் ஊதியத்திற்குத் தேவைப்படும் பணத்தை எட்டுவதே பெரும்பாடாகியுள்ளது. பேருந்துகளைச் செப்பனிட நிதியின்றி, கரணம் தப்பினால் மரணம் என்ற நிலையில் பல பேருந்துகள் இயங்குகின்றன. சில பேருந்து ஓட்டுநர்கள், ஹெட்லைட்டை அவர்கள் செலவில் வாங்கி, அவர்கள் பணியிலிருக்கும் போது அதை பயன்படுத்திவிட்டு, பின்னர் கழற்றிச் செல்கிறார்கள்.

தமிழகத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் குழந்தைகளை மனிதவளமாக மாற்றும் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வில்லை. பணியிடங்கள் நிரப்பப்படுவதில்லை. அரசு மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்களோ, செவிலியர்களோ, மருந்தோ இல்லை. டிஸ்போஸிபிள் கப்பை வைத்து ஆக்சிஜன் ஏற்றும் அவலம் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். இந்தப் பிரச்சினைகளை கரென்சி நோட்டுகளால் சமாளிக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. ஒரு சமுதாயத்தின் பொது ஒழுக்கத்தினை இந்த இலவசங்கள் அழித்துவிட்டன.

தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற வேண்டுமென்றால், அவர் கோடீஸ்வரனாக இருக்கவேண்டும். இன்னும் சொல்லப்போனால், இன்று சாமானியத் தொண்டனுக்கு, தேர்தல் ஒரு எட்டாக்கனியாகிவிட்டது. இந்த இலவசங்களில் அரசியல்வாதிகள் பெரும் லாபத்தை ஈட்டும் முகாந்திரமாகிவிட்டது. இலவசப் பொருட்களைக் கொள்முதல் செய்வதிலிருந்து, வினியோகிப்பது வரை கமிஷன் என்று பணம் காய்க்கும் மரமாகிவிட்டன திட்டங்கள். கொள்முதல் செய்யும் காண்ட்ராக்ட், வினியோகிப்பதில் முறைகேடு என்று கொள்ளையடித்ததைவிட, கூப்பன் முறையில் முறைகேடுகள் நடத்த சாத்தியக்கூறுகள் அதிகம். இதிலும் தி.மு.க வழிகாட்டியாகியுள்ளது.

இந்த இலவசப் போட்டியின் விளைவு, இன்று தமிழகம் 10 லட்சம் கோடி கடன்பட்டுள்ளது. அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த நிதி ஆதாரமில்லை. அரசு இயங்க, மதுபான விற்பனையை நம்பியிருக்கவேண்டிய அவலமே உள்ளது. கொள்கை அடிப்படையிலும், நிர்வாகத்திறனின் அடிப்படையிலும், மக்கள் சேவையின் அடிப்படையிலும் வெற்றி பெற முடியாது என்ற நிலையை இந்த இலவசங்கள் ஏற்படுத்திவிட்டன. ஊழல் செய்தாலும், அடாவடிதனத்தினாலும், பணத்தைக் கொடுத்து எதையும் சாதித்துவிட முடியும் என்ற நிலை ஏற்பட்டதால், நம் நாட்டின் வளர்ச்சி கேள்விக்குறியாகிவிட்டது. மக்களின் அடிப்படை ஒழுக்கம் கெடுவதால், தேச பக்தியும், நேர்மையும் குன்றி, நம் நாடு அன்னியர்களுக்கு அடிமைப்படும் நிலையை நோக்கி நகர்கிறது. இந்நிலையில், இலவசம் கொடுக்க மாட்டேன் என்று தேர்தல் களமாடும் சீமானின் நிலைபாடு வரவேற்கத்தக்கது.

**தேர்தல் ஆணையமும், நீதிமன்றங்களும் இந்த இலவசங்களை ஒழிக்க வேண்டும் என்று பலமுறை கடிந்தபின்னும், அரசுகளும், அரசியல் கட்சிகளும் இலவசங்களைத் தொடர்வது கவலையளிப்பதாகவே உள்ளது.**

தேர்தல் ஆணையமும், நீதிமன்றங்களும் இந்த இலவசங்களை ஒழிக்க வேண்டும் என்று பலமுறை கடிந்தபின்னும், அரசுகளும், அரசியல் கட்சிகளும் இலவசங்களைத் தொடர்வது கவலையளிப்பதாகவே உள்ளது. இதுபோன்ற அறிவிப்புகளை வத்து ஓட்டுக் கேட்கும் கட்சிகளின் அங்கீகாரம் ரத்து செய்யப்படவேண்டும். அரசியலும், அதிகார மையங்களும் தூய்மையாக வேண்டும். இந்த மாற்றத்தை ஏற்படுத்தும் கடமை வாக்காளர்களாகிய நமக்கும் உள்ளது என்று உணர்ந்து, இந்த இலவச அரசியலை நாம் வலுவாக எதிர்க்க வேண்டும்.

# அரசியல் உலா


**- கரிகாலன்**

**“நம்பினோர் கெடுவதில்லை!”**

இருள் விலகத் தொடங்கியிருந்த நேரம் இங்குமங்குமாக சிலர் நடந்து கொண்டிருந்தனர் எப்போதும் சந்திக்கும் இடத்தில் நான் காத்திருந்தேன். உடன் நடப்பவர்கள் (கதைப்பவர்கள்) சிலர் இன்னும் வந்து சேரவில்லை. வீதியில் செல்பவர்களை வேடிக்கை பார்க்க தொடங்கினேன். பெரும் கூட்டம் ஒன்று எங்களை நோக்கி வந்தது.

“பாருங்க, அவங்க எவ்ளோ வித்தியாசமா இருந்தாலும் ஒரே மாதிரி ஒரே நிறத்தில உடுப்புப் போட்டு வராங்க. பாக்கவே எவ்ளோ நல்லா இருக்கு, அவங்ககிட்ட இருக்குற ஒத்துமை நம்ம கிட்ட இல்லையே!”, ஆதங்கத்தை வெளிப்படுத்தினார் அருகில் இருந்தவர்.

கூட்டத்தின் ஒரு பகுதி எங்களைக் கடந்தது, பெரும்பாலான பகுதி இன்னும் பின்னால் நடந்து கொண்டிருந்தது. பலம் என்பது கூட்டத்தில் இல்லை, உருவ ஒற்றுமையில் இல்லை,. ஏதோ ஒரு விஷயத்தில் அது அவர்களிடம் இல்லை.



“அதாவது எண்ணிக்கை முக்கியமில்ல, எண்ணம் தான் முக்கியம்னு சொல்றீங்க அதானே!”

சிரித்தபடியே மீண்டும் வேடிக்கைப் பார்க்கத் தொடங்கினேன். நம்மவர் இன்னொருவர் தாமதமாக வந்து சேர்ந்தார். இப்பொழுது அவரோடும் சேர்ந்து வேடிக்கைப் பார்ப்பது தொடர்ந்தது. அவர் பங்குக்கு அவர் பேசத் தொடங்கினார் இதோ அவரது கேள்வி.

“எல்லாம் மேல இருக்கறவன் பாத்துப்பான்னு சொன்னீங்களே, நிறைய ஊர்ல ஆர்ப்பாட்டம் நடக்குது, அதையும் பாத்துட்டு தான் இருப்பாரா?”

இந்தக் கேள்வியும் புதிதில்லை, ஏற்கனவே பலமுறை பலரால் எழுப்பப்பட்டது தான். இப்பொழுது மிகுந்த சலிப்புடன் திரும்பி எழுகிறது.

“அங்க பாருங்க அதுவும் தேசியக் கட்சின்னு தான் சொல்லிக்குது, நம்மள விட குறைஞ்ச வாக்கு சதவீதம். பத்து கூட தேறாது, ஆனா அதிக தொகுதி வாங்கிட்டாங்களே!”, அருகில் இருந்தவர் அங்கலாய்த்தார்.

இடது பக்கம் இருந்தவர் இடைமறித்தார், “ஒரு சதவீதம் கூடத் தேறாத தேமுதிகவைப் பாருங்க, பத்து இடம் வாங்கிடுச்சு. பத்தாக் குறைக்கு ஒரு ராஜ்ய சபாவுல ஒன்னு!”

“அது மட்டும் இல்ல புது அடிமைக்கு இவ்ளோ பவுசான்னு பழைய அடிமைங்கல்லாம் புலம்பிட்டு இருக்காங்க!”

“ஜோசப் விஜய பாருங்க, அங்க இங்கனு கடன் வாங்கி எல்லாத் தொகுதிக்கும் வேட்பாளர்களை அறிவிச்சிட்டாரு!”

“ஜோசப் எங்க பேசினாலும் தவெகவுக்கும் திமுகவுக்கும் தான் போட்டினு சொல்றாரே, அவரு திமுகவோட வாக்கைப் பிரிப்பாரா? திமுகவுக்கு எதிரான வாக்கைப் பிரிப்பாரா?”

”சீமான் கிட்ட பிராமண கடப்பாறை ஆறு இருக்குதாமே, அது யாரைத் தாக்கும்னு நினைக்கிறீங்க?”

“சங்க நிகழ்ச்சிக்கெல்லாம் சென்ற புதிய தமிழகம் கிருஷ்ணசாமியை கூட்டணியில ஏன் சேக்க மாட்டேங்கறாங்க?”

“அட அதை விடுப்பா, எந்த அடிப்படையில ஜான்பாண்டியன் பொண்டாட்டிக்குத் தொகுதி ஒதுக்கினாங்க?”

எல்லாருடைய கேள்விக்கும் அர்த்தம் ஒன்னு தான். அதையும் ஒருத்தர் நேரடியாகவேக் கேட்டார்.

“பாஜகவுக்கு எதனால இடங்கள் குறைஞ்சது? என்ன நோக்கத்துல வெறும் 27 இடம் வாங்கினாங்க?”

“தமிழ்நாட்டுல இருக்குற மொத்த 234 தொகுதில தானே பாஜகவாங்கின இந்த 27ம் இருக்கு?”, எதிர்க் கேள்வி எழுப்பிய பின் நான் மேலும் பேசுவேன் எனஎல்லோரும் எதிர்பார்த்தார்கள்.

“தோல்வி பயத்துல திமுக தகுதி இல்லாத கட்சிங்களுக்குக் கூட இஷ்டத்துக்கு வாரி வழங்கிருக்கு. எண்ணிக்கையில மட்டும் தான் பலத்த காட்டுது. ஆனா ஜெயிக்காது!”

“நம்ம எல்லாருக்கும் ஒத்த நோக்கம் திமுகவை வீழ்த்தி, தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியை அமைக்கிறது. இந்த எண்ணம் தான் நமக்கு பலம் சேக்குது. அதனால நோக்கம் நிறைவேறும்!”

***ஜனநாயகத்தைக் காப்பாற்ற***
***மக்களை நோக்கிச் செல்வோம்!***

**நம் கூட்டணிக்கு வாக்களிக்க**
**மக்களை நோக்கிச் சொல்வோம்!**

**"தாமரைக் கனவுகள்"**

தொகுதிப் பேச்சுவார்த்தை முடிந்து விட்டது. பலரும் பழையபடி தங்களுக்குத் தெரிந்த வழியில் அரசியலைத் தொடர்கின்றனர், தேர்தல் கனவில் இருக்கும் சிலர் இன்னமும் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள், இதுவரை உறங்கிக் கொண்டிருந்த சிலர் இப்பொழுது விழித்துக் கொண்டார்கள்.

சிலரது கனவுகளுக்கு சிறிய இடைவேளை, சிலருக்கு பெரிய இடைவெளி, இன்னும் சிலருக்கோ கனவுகள் கலைக்கப்பட்டன. சிதறிப்போன கனவுகளோடு சிறகொடிந்த பறவைகளாய் சுற்றித் தருகிறார்கள் சிலர்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தொகுதிப் பங்கீடு முடிந்த பிறகு பாஜக தொண்டர்கள் சிலர் மத்தியில் ஒருவித சலசலப்பு எழுந்தது. அதோடு கூடவே அதிமுகவிடம் ஒரு சில தொகுதிகளை விட்டுக் கொடுத்து அதற்கேற்ற வேறு சில தொகுதிகளைக் கேட்டுப் பெறலாம் என்ற யூகங்களும் செய்தியாகக் கசியத் தொடங்கின.

தொகுதியை மாற்றித் தருவார்கள், இந்தத் தொகுதியில் அவர் தான் போட்டியிடுவார், இந்தத் தொகுதி இவருக்குக் கொடுக்கவே மாட்டார்கள் என்றெல்லாம் இன்னமும் பல வதந்திகள் உலாப் போகின்றன. அந்த வதந்திகளை எல்லாம் பொய்யாக்க வேண்டிய ஒரு நேரம் வந்தது, அதுவும் கூடத் தாமதமாகத்தான் வந்தது.



அத்தனைக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக அதிமுக அடுத்தடுத்த கட்டங்களில் தங்களுக்கான அனைத்துத் தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்து விட்டது. இனிமேல் அந்தத் தொகுதிகளை அதிமுகவால் விட்டுத் தரவோ, பாஜகவால் கேட்டுப் பெறவோ முடியாத நிலைக்குக் கொண்டு வந்து விட்டார்கள்.

எல்லாக் கட்சிகளும் வேட்பாளர்களை அறிவித்து விட்ட பிறகும், வேட்புமனுத் தாக்கல் கூட தொடங்கி விட்ட பிறகும் இன்னும் (மார்ச் 31 இரவு வரை) இரு தேசியக் கட்சிகள் தங்கள் வேட்பாளர்களை அறிவிக்கவில்லை. வேட்பு மனுத் தாக்கல் செய்ய ஆறாம் தேதி வரை அவகாசம் இருக்கிறது என்பது என்னவோ உண்மைதான், ஆனால் அதுவரை குழப்பம் நீடிக்கத் தேவையில்லை.

நெடுங்காலமாகவே பல தொகுதிகளில் பலமான பிரச்சாரம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அந்தத் தொடர் முயற்சியின் பலன்களை அறுவடை செய்யும் விதமாக தகுதி வாய்ந்த வேட்பாளர்களை இந்த முறை களம் இறக்குவதன் மூலம் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றிக்கு பாரதிய ஜனதா கட்சி பெரும் பங்காற்ற இயலும்.

இரு திராவிட கட்சிகளைப் பொறுத்த வரையிலும் வேட்பாளர் யார் என்பதைப் பொருட்படுத்தாமல் பெரும்பாலான மக்கள் சின்னத்திற்காகவே வாக்களிக்கின்றனர். தாமரைக்கு அப்படிப்பட்டத் தகுதி எந்த அளவு வாய்த்திருக்கிறது என்பது இந்தத் தேர்தலில் தெரியப்போகிறது. தாமதமான வேட்பாளர் அறிவிப்பால் இப்படிப்பட்ட நல்லது ஒன்றும் நடக்கப்போகிறது.



இந்தப் பத்திரிகை வாசகர்கள் கைகளில் தவழும் பொழுது வேட்பாளர்களின் பெயர்கள் வெளியாகி இருக்கும். தீவிர பிரச்சாரம் நடந்து கொண்டிருக்கும். இனி வரும் 21 நாட்கள் தான் இந்த மாநிலத்தின் தலைவிதியை மாற்றி எழுதுவதற்கான நல்ல வாய்ப்பு. வாக்காளப் பெருமக்கள் அதை முறைப்படிப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புவோம்.

பெட்டிச் செய்தி:

ஒன்னே ஒன்னு கண்ணே கண்ணு என்று சென்னையில் பாஜக பெற்ற ஒரே தொகுதி மயிலாப்பூர். அதில் யார் வேட்பாளராக வர வேண்டும் என முகநூலில் தினம்தோறும் கருத்துக்கணிப்பு நடக்கிறது. யார் வந்து விடக் கூடாது என்ற வாசகர்களின் ஏகோபித்த முடிவை அங்கு அறிய முடிகிறது. தேசியத் தலைமை அதைக் கவனத்தில் கொண்டால் மயிலையில் தாமரை மலரக் கூடும். இல்லாவிட்டால் மலராமலே தீரும்.

# தொகுதிப் பங்கீடுகள், கூட்டாளியான முன்னாள் இந்நாள் தமிழக ஆளும் கட்சிகள்...

- காளமாடசாமி

தமிழகத்தில் இரண்டு பெரிய கட்சிகளும் தங்கள் கூட்டணிக் கட்சிகள் உடனான தொகுதி பங்கீட்டை நிறைவு செய்துள்ளதோடு பெரும்பாலும் வேட்பாளர்கள் பட்டியலும் அறிவிக்கப்பட்டு விட்டது.

அகில இந்திய அளவில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணிக்கு இண்டி கூட்டணி என்று பெயர் வைக்கப்பட்டிருந்தாலும் தமிழகத்தில் அதற்கு Secular Progressive Alliance (SPA) என்றே பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் மட்டும் ஏன் இந்த மாற்றம் என்பதற்கு சொல்லிக் கொள்ளும்படியான பதில் காங்கிரஸ் திமுக தரப்பிலிருந்து இன்னும் வரவில்லை.

**இந்தக் கூட்டணியில் 28 கட்சிகள் இடம் பெறுவதாக கூறப்படுகிறது.**

கூட்டணியில் முக்கியக் கட்சிகள் என்று திமுக, காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்,
விடுதலை சிறுத்தைகள்,
இந்திய யூனியன் முஸ்லிம் லீக்,
மனிதநேய மக்கள் கட்சி,
மக்கள் நீதி மய்யம்,
தேசிய முற்போக்கு திராவிட கழகம் ஆகியவற்றை குறிப்பிட்டாலும் காங்கிரஸ் கட்சியைத் தவிர இதில் உள்ள எந்த கட்சியும் ஒன்னு, ஒன்றரை சதவீதத்துக்கு மேல் ஓட்டு வாங்கிய கட்சிகள் இல்லை. காங்கிரஸ் கட்சிக்கும் கூட 3 சதவிகித ஓட்டுக்கு மேல் இருக்காது என்பதே யதார்த்தம்.

ஒரு தொலைக்காட்சி விவாதத்தின் போது, திமுகவின் அண்ணாதுரை சரவணனை பார்த்து அதிமுகவின் கோவை சத்யன் நக்கலாக , "பலமான கூட்டணியா, எங்கே 28 கட்சிகளின் பெயரைச் சொல்லுங்கள்" என்று கேட்க வழக்கம் போல சரவணன் வாங்கியது பல்ப். இதில் உள்ள பெரும்பாலான கூட்டணி கட்சி எண்ணுக்கு முன்னால் வரும் பூஜ்யங்களே. இவற்றால் அந்த எண்ணுக்கு மதிப்பில்லை. பாவம், இந்தக் கட்சித் தலைவர்கள், உள்ளே அழுது கொண்டு வெளியே சிரித்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு கூட்டணி கட்சித் தலைவர்களின் பேச்சுகளே சான்று.

பாஜக நுழைந்து விடும் பாஜக நுழைந்து விடும் என்ற திமுகவின் மகுடி இசைக்கு ஏற்கனவே ஆட்டம் ஆடிவந்த அக்கட்சிகள், இப்போது திடீரென ஆட்டத்தை நிறுத்த முடியாமல் கூட்டணிக்கு கூடைக்குள் சென்று அடைந்திருக்கின்றன.

சர்வதேச அரசியலில் தொடங்கி - சந்து பொந்து அரசியல் வரை கர்ஜித்த வைகோ - 4 சீட்டில் முடங்கிப் போய் கிடக்கிறார்! அதிலும் 3 சீட் உதயசூரியன் சின்னத்தில்!

ஒரு கம்யூனிஸ்டு 4 ரவுண்டு பேச்சு நடத்தி 5 சீட்டுக்கு செட்டில் ஆனார்கள்.

மற்றொரு கம்யூனிஸ்டு ஐந்து முறை மாநிலக் குழுவைக் கூட்டி - இரட்டை இலக்கம் - குறைந்தது 6 சீட் என்று மிரட்டி உருட்டி, ஆகாத பட்சத்தில் அழுது புரண்டு தன்மானத்தை விட்டு 5 சீட் என்பதை ஒப்புக் கொண்டு விட்டது.

ஆட்சியில் பங்கு என்று கொக்கரித்த காங்கிரஸ், கொட்டம் அடங்கிப் போய் கௌரவப் பிச்சை எடுத்துத்தான் கெத்து காட்டி இருக்கிறார்கள். தமிழகத்தில் செய்ய முடியாத கலகத்தை பாண்டிச்சேரியில் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அடங்க மறு, அத்து மீறு சிறுத்தைகள் மடங்கிப் போய் பொறியில் சிக்கிய எலிகளாக அங்கும் இங்கும் மோதி மூக்கை உடைத்துக் கொண்டது தான் மிச்சம். பத்து எட்டவில்லை. எட்டு தான். எங்கு ஆரம்பித்தாலும் ஆரம்பித்த இடத்தில் வந்து நிற்கும் பயணம்!

இப்படி "திராவிட மாடல்" கூட்டணி கிழிந்து தொங்குவதை எந்த ஊடகமும் விவாதம் செய்வதில்லை. ஆனால் பாஜகவுக்கு 27 தானா என்று கேள்வி கேட்டு வந்து விடுகிறார்கள். அவர்களுக்கு என் டி ஏ வை கேள்வி கேட்க விண்ணளவு சுதந்திரம் உண்டு. ஆளும் கட்சியை கேள்வி கேட்டால் மண் அளவு இதுதான் என்று காண்பிக்கப்படும். இதுதான் திராவிட மாடல் ஆட்சியில் ஊடகங்களின் சுதந்திரம்.

திமுக, அதிமுக இரண்டு பிரதான கட்சிகளும் தாங்கள் போட்டியிடும் தொகுதிகள் என்று வரும் போது ப்ளஸ் ஆர் மைனஸ் 170 என்பதை உறுதி செய்து விட்டனர். அந்த வகையில் தனக்கான தொகுதிகளை குறைத்துக் கொள்ளாத அதிமுகவின் செயல்பாட்டால் தேசிய ஜனநாயக கூட்டணியில் தொகுதி ஒதுக்கீடு சர்ச்சையாக்கப்பட்டு வருகிறது.

அமித்ஷாவின் அடிமை எடப்பாடி என்று கூறிக் கூறியே பாஜகவிற்கான தொகுதிகளை ஒதுக்க விடாமல் செய்து முதல் சுற்றிலேயே திமுக வெற்றி பெற்று விட்டது. தான் தான் ஹீரோ என்று காட்டிக் கொள்ள எடப்பாடி செய்துள்ள இந்த செயல் (கூட்டணி இருக்கோமோ?) அவரை ஜீரோ

ஆகிவிட்டால்…என்ற கேள்வியும் எழாமல் இல்லை!

பாஜக 27, பாமக 18, அமமுக 11, தமாக 5 என்று பங்கீடுகள் பரவலான அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளன. அதிலும் குறிப்பாக பாஜகவுக்கு வெற்றி வாய்ப்புகள் உள்ள தொகுதிகள் இல்லாதது, அதன் முக்கிய பொறுப்பாளர்கள் எதிர்பார்த்த தொகுதிகள் இல்லாதது, தனக்கு வாக்குகளே இல்லாத மைனாரிட்டிகள் அதிகம் உள்ள தொகுதிகளை பாஜகவுக்கு தள்ளி விட்டது, வலுவான திமுக அமைச்சர்களின் தொகுதியை கூட்டணி கட்சிக்கு தள்ளிவிட்டது ஆகிய எடப்பாடியின் செயல்கள் கூட்டணிக்கு வலு சேர்ப்பதற்கு பதிலாக வலி சேர்த்திருக்கிறது என்றால் அதில் உண்மை இல்லாமல் இல்லை. அதே வேளையில் இதை பொதுவெளியில் உள்ளக் குமறலாக மாற்றாதா பாஜகவின் நடவடிக்கை பாராட்டுகளை பெறுகிறது.

தேசிய - தெய்வீக சக்திகள் வலுப்பெற வேண்டும் என்று விரும்பும் எவருக்கும் - பாஜக பேரியக்கம் எத்தனை அதிகம் தொகுதிகளில் போட்டியிட்டாலும் தாகம் அடங்கப் போவதில்லை. ஆனால் யதார்த்தம் என்பது வேறு. லட்சியக் கனவுக்கும் களத்தில் போரிடுவதற்குமுள்ள வித்தியாசம் என்பது வேறு.

**களநிலவரம் முக்கியம்,**

தீயசக்தி அகற்றப்பட வேண்டும், அதற்காக எந்த விட்டுக் கொடுத்தலுக்கும் தயார் என்ற செய்தியை இந்த எண்ணிக்கையை பெற்றுக் கொண்டதன் மூலம் பாஜக மக்கள் மன்றத்தில் முன் வைத்துள்ளது. அதன் காரணமாகவே தங்களுக்குள் எழுந்த முணுமுணுப்பு, உரசல், முட்டல், மோதல் ஆகியவற்றை மக்கள் மன்றத்தில் எடுத்து வரவில்லை தேசிய ஜனநாயகக் கூட்டணி.

ஏற்கனவே நாடாளுமன்றத் தேர்தலின் போது கூட்டணியை கோட்டை விட்டதால் முக்கியமான நேரத்தில் ஆட்சி அமைப்பதில் தங்களுக்கு பங்களிப்பு இல்லாமல் போய்விட்டது என்ற குற்ற உணர்வு தமிழக பாஜகவுக்கு உள்ளது. இப்போது தீய சக்தியை அகற்ற வேண்டிய முக்கிய சூழல்.. இப்போதும் ஒரு தவறு செய்து விடக்கூடாது என்பது தான் அவர்களின் முக்கிய நோக்கம்.

இவை அனைத்தையும் விட முக்கியமாக 2029 நாடாளுமன்ற தேர்தல் நடக்கும் பொழுது தமிழகத்தில் தங்களுக்கு ஆதரவான ஒரு கட்சி ஆட்சியில் இருக்க வேண்டும் என்று மத்திய பாஜக விரும்புகிறது. 2024 தேர்தலின் போது மாநிலத்தில் ஆட்சியில் இருந்த திமுக அரசு எந்திரங்களை தவறாகப் பயன்படுத்தியதால் ஏற்பட்டதாக சொல்லப்படும் பாதிப்புகள் மீண்டும் ஒரு முறை நிகழக் கூடாது என்பதில் மத்திய பாஜக தெளிவாக இருப்பதாக கூறப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

தென்மாநிலங்களில் கூட்டணி தவிர்க்க முடியாததாகி விட்டது என்பதே எதார்த்தம். அமைப்பு வலுவாக உள்ள கர்நாடகாவிலேயே கூட தேவகவுடாவின் மதசார்பற்ற ஜனதாவுடன் கூட்டணி தேவைப்பட்டது, இன்றும் தேவைப்படுகிறது.

ஆந்திராவில் சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம், பவன் கல்யாணின் ஜன சேனாவுடன் கூட்டணி. என்ன தான் அங்கு காங்கிரஸ் அகற்றப்பட்டு விட்டாலும் ஜெகன்மோகனின் கட்சிக்கும் காங்கிரசுக்கும் கொள்கை அளவில் வேறுபாடு இல்லை. எனவே கூட்டணி அவசியமாயிற்று.

முற்றிலும் இல்லாவிட்டாலும் ஓரளவு கோட்பாட்டு அளவில் பாதகம் இல்லாத கட்சியின் கூட்டணி தவிர்க்க முடியாதது ஆகிவிடுகிறது. அதே வகையில் பாஜகவுக்கு இருக்கும் தேசத்தின் மீதான அக்கறை, இந்து மக்கள் மீதான அக்கறை, பாதுகாப்பு போன்றவை அதிமுகவுக்கு இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கவும் முடியாது. எங்கோ ஓரிடத்தில் திராவிட கட்சிகள் என்ற பெயரில் அவர்களுக்குள் இருக்கும் ஒரு இணைப்புப் புள்ளி வலுவாகவே உள்ளதை எந்த அரசியல் நோக்கரும் மறுக்க முடியாது.

**தற்போதைய பார்வை,**

திமுக மீதான சமூகக் கோபத்தை வலுப்படுத்துவது, பரவலாக்குவது. யாருக்கும் இந்த ஆட்சி தொடர்வதில் விருப்பம் இல்லை. இன்றைய நிலையில் அதிமுக பாஜக கூட்டணி வலுவாக கண்ணில் படுவதால், திமுக எதிர்ப்பு ஓட்டுகள் சிதறக்கூடாது என்பதில் ஆர்வம் காட்டும் வாக்காளர்கள், அதே போல திமுகவுக்கு எதிராக வாக்களிக்கும் போது வெற்றி பெறும் கட்சிக்குத் தான் ஓட்டு என்று முடிவு செய்யும் வாக்காளர்கள்…

பாஜகவை பொறுத்த வரை போட்டி இடும் எண்ணிக்கையை விட வெற்றி பெறும் எண்ணிக்கை தான் முக்கியம்.

கூட்டணிக் கட்சிகளுடன் சேர்ந்து தாமரை சின்னம் 33 இடங்களில் போட்டி இடுவதால் இதில் 20 ப்ளஸ் வந்து விடவேண்டும் என்பது அதன் இலக்கு. இது அடைய முடியாத இலக்கு அல்ல.

தமிழக வெற்றிக் கழகம், நாம் தமிழர் கட்சிகள் 234 தொகுதிகளிலும் தனித்தே களம் காணும் நிலையில், வரும் முக்கிய தேர்தல் கணிப்புகள் என் டி ஏ கூட்டணி 113 முதல் 119 இடங்களை பெறும் என்று கூறுவதால் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் வெகு தொலைவில் இல்லை என்பதை தான் நமக்கு உணர்த்துகிறது.

ஆனால் இதை மீறி திமுக வெற்றி பெறும் என்றால் முதல் குற்றவாளி முன்னாள் அதிமுக முதல்வராகத் தான் இருப்பார். இரண்டாவது குற்றவாளி கூட்டணி வேண்டும் என்று அடம் பிடித்த பாஜக தலைவர்கள்! மாறாக வெற்றி பெற்றுவிட்டால் இவர்கள் ஒவ்வொருவரும் தங்களால் தான் வெற்றி என்று மார்தட்டிக் கொள்ளலாம்.

# PNG-ஐ வரவேற்போம்

ராயன்

விரிவடைந்து வரும் மேற்காசிய போரினால், நாட்டின் பல்வேறு பகுதிகளில் திரவ பெட்ரோலிய எரிவாயு (LPG) சிலிண்டர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த சமயத்தில் மத்திய அரசு, குழாய்வழி இயற்கை எரிவாயு நாடு எனப்படும் PNG கட்டமைப்பை நாடு முழுவதும் ஏற்படுத்த பெரும் முயற்சி செய்து வருகிறது. இந்த இரண்டு எரிபொருள்களில் LPG இறக்குமதியைச் சார்ந்திருகிறது, PNG நாட்டின் தேவையில் 50%மேல் உள் நாட்டிலேயே கிடைக்கிறது.

**LPG என்றால் என்ன?**

பலர் "Gas என்றால் எல்லாம் ஒன்றுதான்" என்று நினைப்பார்கள். ஆனால் LPG மற்றும் PNG இரண்டும் வேறு வேறு. LPG என்பது சிலிண்டர் gas. இதில் propane மற்றும் butane வாயுக் கலவைகள் அழுத்தப்பட்டு திரவ வடிவில் எரிபொருளாக உள்ளது. LPG கச்சா எண்ணையை சுத்திகரிக்கும் போது by-product ஆகக் கிடைக்கும். அதுவும் சுமார் 3%மட்டுமே கிடைக்கும். கத்தார் போன்ற நாடுகளில் நேரடியாக பூமியில் இருந்து LPG எரிவாயு கிடைக்கிறது. இந்தியாவில் பெரிய refineryகள் இருந்தாலும், 33 கோடி வீடுகளுக்கு தேவையான LPG-யை நாமே தயாரிக்க முடியாது. அதனால் LPG-க்கு நாம் எப்போதும் வெளிநாடுகளைச் சார்ந்து இருக்க வேண்டும். LPG தேவைகளில் சுமார் 90 சதவீத இறக்குமதிகள் ஹார்முஸ் நீரிணைப்பு வழியாகவே வருகின்றன. போர்ச்சூழலில் ஹார்முஸ் நீரிணைப்பு மூலம் நடைபெறும் கப்பல் போக்குவரத்து பாதிகப்பட்டுள்ளதால் LPG யின் உள் நாட்டு இறக்குமதி குறைந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையைச் சமாளிக்க, அரசாங்கம் வணிகரீதியான LPG விநியோகத்தைக் சுமார் 30 சதவீதம் கட்டுப்படுத்தி, உள்நாட்டு வீட்டு உபயோகத்திற்கு முன்னுரிமை அளித்துள்ளது.



> தற்போது 1.59 கோடி வீடுகள் கபீஏ இணைப்பு பெற்றுள்ளன. 2034-ஆம் ஆண்டுக்குள் இந்த இணைப்பை 12.63 கோடியாக விரிவுபடுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

**PNG என்றால் என்ன**

PNG (Piped Natural Gas) - இது மீத்தேன் அடிப்படையிலான ஒரு வாயு எரிபொருள். இது நம் நாட்டிலேயே கிடைக்கிறது. இந்தியாவின் தற்போதைய இயற்கை எரிவாயு நுகர்வு ஒரு நாளைக்குச் சுமார் 189 மில்லியன் மெட்ரிக் ஸ்டாண்டர்ட் கன மீட்டர் (MMSCMD) ஆகும். நாட்டின் எரிவாயு தேவையில் சுமார் 60% அளவிற்கு உள்நாட்டு PNG உற்பத்தி மூலமே ஈடு செய்து விடலாம். மேலும் உபரியாகத் தேவைப்படும் PNGஐ ரஷ்யா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற பல நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் வாய்ப்புள்ளதால் இந்த அணுகுமுறை எந்தவொரு குறிப்பிட்ட பிராந்தியத்தையும் சார்ந்திருப்பதைக் குறைக்கிறது. ஆனால் PNG ஐ LPG போல அழுத்தம் கொடுத்து சிலிண்டரில் அடைக்க முடியாது. அதைக் குழாய் வழியாகவே அனுப்ப முடியும். அதற்கான குழாய் வழியான கட்டமைப்பை ஏற்படுத்திய பிறகே உள்நாட்டில் உள்ள PNG வளத்தைப் பயன்படுத்த முடியும்.

**வருங்காலத் திட்டம்**

தற்போது, இந்தியாவில் 34 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் PNG வலையமைப்புகள் பரவியுள்ளன. தற்போது 1.59 கோடி வீடுகள் PNG இணைப்பு பெற்றுள்ளன. 2034-ஆம் ஆண்டுக்குள் இந்த இணைப்பை 12.63 கோடியாக விரிவுபடுத்த அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் முழுமை அடையும்போது நாடு முழுவதும் நகர்ப்புறங்கள் முழுவதும் PNG வலைப் பின்னலில் வந்து விடும். PNG குழாய் இணைப்பு ஏற்படுத்த இயலாத கிராமப் பகுதிகளில் மட்டும் LPG பயன்பாடு இருக்கும்.

**PNG ஐ வரவேற்போம்**

தற்போதைய LPG நெருக்கடியானது, PNG உள்கட்டமைப்பை விரைவாக விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

"நம்மிடம் இல்லாத LPG ஐ சார்ந்து இராமல், நம்மிடம் உள்ள PNG-ஐ பயன்படுத்துவோம்" மாற்றத்தை வரவேற்போம்.

# மதம் மாறினால் தாழ்த்தப்பட்டவர் அருகதை இல்லை - உச்ச நீதிமன்றம்

அருண்பிரபு

சிந்தடா ஆனந்த் என்பவர் ஆந்திராவில் மடிகா எனும் சமுதாயத்தில் பிறந்தவர். இந்த சமுதாயம் தாழ்த்தப்பட்ட சமுதாயமாக அங்கீகரிக்கப்பட்டது. இந்த ஆனந்த் பத்தாண்டுகளுக்கு முன் கிறிஸ்தவராக மாறிவிட்டார். பிறகு பாஸ்டர் ஆகி கிறிஸ்தவ மதப்பிரச்சாரமும் மதமாற்றமும் செய்துவந்தார். ஜனவரி 2021ல் இவர் உள்ளூரில் செல்வாக்கு மிக்க சாதியினர் தன்னை அடித்து உதைத்து சாதி சொல்லித் திட்டி குடும்பத்தைக் கொல்வதாக மிரட்டினார்கள் என்று புகாரளித்தார். காவல்துறை எஃப்ஐஆர் போட்டது. 16 சாட்சிகளின் அடிப்படையிலும் தாசில்தார் கொடுத்த மடிகா சாதிச்சான்றிதழ் அடிப்படையிலும் வழக்கு Scheduled Castes and Scheduled Tribes (Prevention of Atrocities) Act, 1989 சட்டத்தின் கீழ் பதியப்பட்டது.

ஆந்திர உயர்நீதிமன்றம் சாதி முறைகள் கிறிஸ்தவ மதத்துக்கு அந்நியமானவை என்று சொல்லி எஃப்ஐஆர் செல்லாது என்று இந்த Akkala Rami Reddy v State of Andhra Pradesh வழக்கில் தீர்ப்பளித்தது. இதை எதிர்த்து இந்த பாஸ்டர் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். அங்கே நீதிபதிகள் பிரசாந்த் குமார் மிஷ்ரா, மன்மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வின் முன் விசாரணைக்கு வந்தது.

விசாரித்த அமர்வு Constitution (Scheduled Castes) Order, 1950, என்பதன் அடிப்படையில் சாதி பிறப்பின் பாற்பட்டு வருவது. அது சமூக அங்கீகாரத்தின் அடிப்படையில் தொடர்வது. மதம் மாறுவதால் இந்த வரலாற்றுச் சேதாரங்கள் எதுவும்




ஈடு செய்யப்படாது என்ற வாதத்தை நிராகரித்தது. இந்த அரசியல் சாசன உத்தரவு இந்து, சீக்கிய, பௌத்த மதங்களைப் பின்பற்றுவோர் மட்டுமே சாதி அடிப்படையிலான அங்கீகாரங்களுக்கு தகுதியானவர்கள். மற்ற மதங்களுக்கு மாறினால் சாதி அடிப்படையிலான அங்கீகாரமோ சலுகையோ கொடுக்க அடிப்படையில்லை என்று சொல்கிறது.

இரண்டாவதாக 1977ல் "மதம் மாறினாலும் தாழ்த்தப்பட்டவர்கள் சமுதாயத்தின் அனைத்து விதமான ஏற்றத்தாழ்வுகளுக்கும் ஆட்படுகிறார்கள்" என்று சொல்லிப் பிறப்பிக்கப்பட்ட ஒரு அரசு உத்தரவைக் காட்டி இதனால் பாஸ்டரின் தாழ்த்தப்பட்ட சாதித்தகுதி தொடரும் என்ற வாதத்தை 2021ல் மக்களவையில் அரசு கொடுத்த மத்திய அரசுத் திட்டங்களுக்கும் மத்திய அரசின் சட்டப்பூர்வ சலுகைகளுக்கும் இந்த உத்தரவு பொருந்தாது என்ற அடிப்படையில் நிராகரித்தது.

மேலும் Punjabrao v D.P. Meshram (1964) என்ற வழக்கில் ஒரு மதத்தைப் பிரச்சாரம் செய்வதும் பொதுவில் ஊரறியப் பின்பற்றுவதும் சம்பந்தப்பட்ட மதத்தைச் சேர்ந்தவராகவே ஒருவரைக் குறிக்கும் என்ற தீர்ப்பினைக் காட்டி இந்த ஆனந்த் பத்தாண்டுகள் கிறிஸ்தவ பாஸ்டராக இருப்பதால் கிறிஸ்தவராகவே சட்டத்தில் அறிவிக்கப்படுவார் என்றும் அவருக்கு இந்து, சீக்கிய, பௌத்த மதச்சலுகைகள் செல்லாது என்றும் கூறிவிட்டது.

இந்நிலையில் காங்கிரஸ் இதைக் கண்டித்து அறிக்கை விட்டிருப்பது ஆச்சரியமில்லை. அப்பல்லோ ஆசுபத்திரியில் தாழ்த்தப்பட்ட மருத்துவர்கள் எத்தனை பேர் என்று கேட்ட இராகுல காந்தியார் என் தாயாருக்கு மருத்துவம் பார்க்க தாழ்த்தப்பட்ட டாக்டரைக் கூட்டி வாருங்கள் என்று கங்காராம் ஆசுபத்திரியில் முழங்கவில்லை. மாறாக "அடடே! இரவுப் பணி செய்யும் நர்சுகள் இரவில் தூங்குவதில்லையே!" என்று ஆச்சரியப்பட்டதோடு போய்விட்டார்.

பாஜகவின் கர்நாடக எஸ்சி பிரிவு தலைவர் பரமானந்தா இந்தத் தீர்ப்பை வரவேற்றுள்ளார். பின்கதவு வழியாக எஸ்சி எஸ்டி சலுகை பெறுவது தடுக்கப்பட்டுள்ளது. உண்மையான எஸ்சி எஸ்டி மக்களுக்கு இது பலனளிக்கும் என்று அவர் சொல்லியிருக்கிறார்.

ஜார்கண்டில் மதமாற்றம் செய்த கேரள

**அரசியல் சாசன உத்தரவு இந்து, சீக்கிய, பௌத்த மதங்களைப் பின்பற்றுவோர் மட்டுமே சாதி அடிப்படையிலான அங்கீகாரங்களுக்கு தகுதியானவர்கள். மற்ற மதங்களுக்கு மாறினால் சாதி அடிப்படையிலான அங்கீகாரமோ சலுகையோ கொடுக்க அடிப்படையில்லை என்று சொல்கிறது.**

கன்னியாஸ்திரிகள் அப்பாவிகள் என்று சான்றுரைத்து அவர்களைக் காப்பாற்றப் போராடிய கேரள பாஜக தலைவர் ராஜீவ் சந்திரசேகர் இந்த விஷயத்தில் முக ஸ்டாலினின் பழைய பேச்சைக் காப்பியடித்து "முக்கியப் பிரச்சனை டெவலப்மண்ட், டெவலப்மண்ட், டெவலப்மண்ட் ஒன்லி. விகசித கேரளம், விகசித கேரளம், விகசித கேரளம் மாத்ரம்" என்று சொல்லிவிட்டார். தீர்ப்பைப் பற்றிப் பேசவேயில்லை.

ஜார்கண்ட் மாநில எதிர்க்கட்சித் தலைவர் (பாஜக) பாபுலால் மாரண்டி "அரசியல் சாசனம் யாருக்குச் சலுகை கொடுத்ததோ அவர்களுக்குத் தான் சலுகை. மற்றவர்கள் சுற்றிவளைத்தெல்லாம் சலுகை பெறுவது தவறு. இந்தத் தீர்ப்பு சரிதான்" என்று சொல்லிவிட்டார்.

ஆந்திர பாஜகவில் நிலைமை கொஞ்சம் பற்றி எரிகிறது. தீர்ப்பை வரவேற்கிற அதே வேளையில் ரகுராம கிருஷ்ண ராஜுவைக் கைவிட்டது தவறு என்று போர்க்கொடி உயர்ந்திருக்கிறது. ரகுராம கிருஷ்ணராஜு என்பவர் ஆந்திரத்தின் துணை சபாநாயகர். இவர் மேற்கு கோதாவரி அக்கிவீடு என்ற இடத்தில் சிதிலமடைந்தராமர்கோவிலுக்குச் சமீபத்தில்வழிபடச் சென்றார். அங்கே கோவில் சீரமைக்கப்பட்டுக் கட்டி முடிக்கப்படும், வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்வோம் என்றார். அங்கிருந்த சிலர் எஸ்சி என்று கூறிக்கொண்டு கூட்டம் சேர்ந்து ரகுராம கிருஷ்ணராஜுவையும் அவரது ஆதரவாளர்களையும் அடிக்கத் தொடங்கினர். காவல்துறை மேலும் படையை இறக்கி தலைவர்களை மீட்டு அனுப்பியது. கலவரக்காரர்களை அடக்கி அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்தது. அப்போது தாக்கியவர்கள் மதம் மாறிய கிறிஸ்தவர்கள் என்று தெரியவந்தது. என்னவானாலும் கோவில் கட்டுவோம் என்று ரகுராம கிருஷ்ண ராஜு அறிவித்துள்ளார். இவருக்கு 2024 பாராளுமன்றத் தேர்தலில் சீட் தருவதாக இருந்து பின்னர் பின்வாங்கியது பாஜக. சந்திரபாபு நாயுடு இவரது செல்வாக்கைக் கருதி சட்டசபைக்கு சீட் கொடுத்து துணை சபாநாயகராக்கினார். இப்போது தீர்ப்புக்குப் பிறகு ராஜுவை விட்டது தப்பு என்று பாஜகவில் உள்ள ஹிந்துத்வர்கள் கொடி தூக்கியுள்ளனர்.

தெலுங்கானா பாஜக தலைவர் ராமச்சந்திர ராவ் "வரலாற்றுச்சிறப்பு மிக்க தீர்ப்பு. இது அரசியல் சாசனத்துக்குக் கிடைத்த வெற்றி" என்று கூறியிருக்கிறார்.

மற்ற கட்சிகள் தேர்தல் இல்லை என்பதால் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. தேர்தல் இருக்கும் மாநிலங்களில் வாக்குறுதிகள் அனல் பறக்கின்றன.

அதிமுக மதம்மாறினாலும் சலுகை கொடுக்க வலியுறுத்துவோம் என்று சொல்கிறது. திமுக கிறிஸ்தவ லாபிக்காக முழங்குகிறது. விஜய் வழக்கம் போல் வாய்திறக்கவில்லை. விவரம் தெரியவில்லை பாவம். தமிழக பாஜகவுக்கு எண்ணம்தான் முக்கியம் என்றாலும் அதை வெளியே சொன்னால் தானே தெரியும்? சரி தேசிய பாஜக என்ன செய்கிறது? அரசியல் கட்சி அவியலா செய்யும்? அருமையாக அரசியல் செய்கிறது.

2007ல் ரங்கநாத் மிஷ்ரா கமிஷன் "இந்த எஸ்சி, எஸ்டி தகுதியை மதசார்பற்றதாக அனைத்து மதங்களுக்கும் பொருந்துவதாக வைக்க வேண்டும் என்று அறிக்கை கொடுத்தது. 2008ல் சச்சார் கமிட்டி மதம் மாறினாலும் சமூக மதிப்பு மாறுவதில்லை என்று சொன்னது. இது போதாதென்று 2022ல் முன்னாள் தலைமை நீதிபதி கேஜி பாலகிருஷ்ணன் தலைமையில் அப்போதைய பாஜக அரசு ஒரு குழு அமைத்து மதம் மாறிய தலித்களுக்கு சலுகை கொடுக்கவேண்டுமா கூடாதா என்று அறிக்கை தரச் சொன்னது. Constitution (Scheduled Castes) Order, 1950, பிரிவு 3ன் படி தானே பாராளுமன்றத்தில் பேசுகிறார்கள். அதை மீறி எதற்கு ஒரு கமிட்டி, ஆய்வு, அறிக்கை? அரசியலில் முக்கியமான பால பாடம் "When you cannot commit on something, form a committee" என்பதே.

அந்தக் கமிட்டி நீட்டிப்புகள் பல பெற்று இந்த ஏப்ரலில் அறிக்கை தர உள்ளதாகத் தகவல். இந்தத் தீர்ப்புக்குப் பிறகு அந்த அறிக்கை வந்தால் அதை அரசு ஆராய்ந்து, அரசியல் சாசனக் கருத்துக் கேட்கிறோம் என்று "கனம் கோர்ட்டார் அவர்களே! இப்படி ஒரு கருத்து முன்னாள் தலைமை நீதிபதியின் குழுவால் சொல்லப்பட்டுள்ளது. இதற்கு என்ன சொல்கிறீர்கள்" என்று போய் நின்று, நீதிமன்றம் அரசியல் சாசன விவகாரமாக்கும் என்று அதற்கான பெஞ்சு போட்டு ஆய்வு செய்து தீர்ப்பை அரசியல் சாசனத்துக்கு உட்பட்டு ஏற்கனவே சொன்னது தான் என்று சொல்லி முடிக்கவே வாய்ப்புகள் அதிகம். இவ்விஷயத்தில் பீட்சாவில் போட்ட சீஸ் போல சில பல ஆண்டுகளுக்கு இழுத்துக்கொண்டு போவதற்கே வாய்ப்பு அதிகம்.

அதுவரை? இருக்கும் தீர்ப்பின்படியே செயல்படுவோம். தேவைப்பட்டால் மேற்கொண்டு சில கமிட்டிகள் போடப்படலாம்.

**வாழ்க ஜனநாயகம். வந்தே மாதரம்.**




- நா.பாஸ்கரன்

கேரளாவில் ரூ.3,000 குடும்பநல ஓய்வூதியம்னு பினராயி அறிவிச்சி சும்மா அதிர வச்சிட்டாரே ?

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

திருமங்கலம் ஹுணிஹுட்தடுச் போல், இந்த formula வும் நாடு முழுவதும் திராவிட மாடல் குறித்து பேசும். பக்கத்துல இருக்குற கேரளாவுக்கு போகும்போதே திராவிட மாடல் திட்டம் 3000 ஆயிரம்ன்னா, தில்லி போயி சேரும்போது, தில்லி மக்கள் குடுத்து வச்ச வங்க....

மத்திய உள்துறை செயலருக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தை, மணிப்பூர் ஆளுநர் பெயர் போட்டு விஜய் நிர்வாகிகள் அனுப்பிருக்காங்களே ?

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

இது என்ன பிரமாதம், இத விட ஸ்பெஷல் ஐட்டம் சொல்றேன் கேளு...
UN» போய் வேற நாட்டோட குறிப்பை இந்தியானு நினைச்சு படிச்ச கூட்டத்தோட தொடர்ச்சி தான் இது,

ஆ.ராசா திமுக குடும்பத்தைப் பற்றி பேசிய ஏதோ ஆடியோ லீக் ஆகிருக்காம்ல...

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

PTR ஆடியோ போலின்னு அவங்க மட்டும் சொல்லிகிட்டாங்க.. ஆ.ராசா ஆடியோ எடிட்டிங் முன்ன பின்ன நடந்திருக்குனு சொல்றாரு. இந்த இரண்டு ஆடியோவும் அந்த குடும்பத்துக்கு உண்மைனு தான் தெரியுமே..

பாளையங்கோட்டை திமுக ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த கனிமொழியை 'வருங்கால முதல்வரேசு என தொண்டர்கள் கோஷம் எழுப்புனத கேட்டியா பங்கு ?

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

திமுக வரலாற்றில் முதல் பெண் முதல்வர் என்ற பெயர் அவருக்கு போய் சேர, இப்போ தும்முனாதா சரியா இருக்கும்னு அக்கா ஆதரவாளர்கள் முடிவு பண்ணிட் டாங்க போல. சமூக நீதி கட்சி ஆச்சே !

திமுக வில்லிவாக்கம் வேட்பாளர் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட சபரீசன்னு செய்தி வந்திருக்கே பாத்தியா? உனக்கு எதுவும் புரியுதா பங்கு ?

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

என் குடும்பத்தில் இருந்து யாரும் அரசியலுக்கு வரமாட்டார்கள் - ஸ்டாலின்
அப்பா அரசியலில் இருப்பதால் நானும் அரசியலுக்கு வரவேண்டும் என்ற அவசியம் இல்லை - உதய்னா
ஸ்ரீ தமிழ் வாசகர்கள் புத்தி கூர்மை உள்ளவர்கள். நிச்சயம் புரிந்திருக்கும்.

திரிணமூல் காங்கிரஸை வங்காள விரிகுடாவில் தூக்கி எறிவீர்னு மம்தா தொகுதியில போய் கெத்தா அமித் ஷா பேசிட்டு வந்திருக்காரே ?

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

இந்த வேகம், தமிழ்நாட்டுக்கு வரும்போது இல்லாத மாதிரியே இருக்கு. ஒரு வேளை எனக்கு மட்டும்தான் அப்டியா ?

என்ன பங்கு, தேர்தல் வந்திருச்சு, இனி கன்டென்ட்க்கு பஞ்சம் இருக்காது. இந்தா content வந்துருச்சுல... 24ஆம் தேதி வரை நாம் எதற்கும் செவி சாய்க்க வேண்டாம்னு நிர்வாகிகளுக்கு அமைச்சர் சேகர்பாபு அறிவுரை சொல்லிருக்கிறாராம்.....

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

அவிங்க ஆட்சிக்கு வந்ததுலேந்தே எதுக்கும் செவி சாய்க்குறது இல்ல. இப்ப என்ன புதுசா 24 வரைக்கும்.... வைகோவுக்கு தமிழக அரசின் உயர்ந்த விருது ஒன்று பார்சல் !

காங்கிரஸ்ல் அனுபவம் இல்லாதவர்களுக்கு சீட், ஜோதிமணி அதிருப்தினு நியூஸ் வருதே ?

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

அனுபவம் இல்லாத ராகுல பி.எம் ஆக்கனும்னு அக்கா பாராளுமன்றத்தில சேட்டை எல்லாம் செய்யுதே, சீட் கிடைச்ச வேட்பாளர்கள் எம்.எல்.ஏ ஆனவுடன் நிச்சயம் ஹுச்ஞினு ஞுணி ஹுச்ஞினு கேட்பாங்கனு நம்புவோமாக....

# எஸ்விசேகர், பொன்ராஜ் ஆபாசப் பேச்சு - மன்னிப்பே கிடையாது

-வெள்ளய்யன்




விளாத்திகுளத்தில் ஒரு பெண்குழந்தை இயற்கை உபாதைக்காக ஒரு இடத்தில் ஒதுங்கிய போது பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் தமிழகத்தில் ஏற்படுத்திய அதிர்ச்சி இன்னும் இருக்கிறது. மக்கள் வெறுப்பின் உச்சத்தில் சுட்டுத்தள்ளினாலும் தகும் என்று கொந்தளிக்கும் அளவுக்கு சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. இதைக் கண்டித்துப் பலரும் பேசிவரும் வேளையில் தமிழ் நாடகம்/சினிமாவின்கவர்ச்சிக் காமெடியன் எஸ்வி சேகர் அரசுக்கு ஆதரவாகப் பேசுகிறேன் பேர்வழி என்று மக்களின் கோபத்தைக் கிளறியிருக்கிறார். பெண்பிள்ளைக்குப் பாதுகாப்பில்லை என்று பலரும் பதறும் வேளையில் இவர் பெரிய யோக்கிய சிகாமணி போல புதருக்குள்ள போற பொண்ணுக்கெல்லாம் போலீஸ் கூடவே போக முடியுமா என்று கேவலத்தின் உச்சமாகக் கேட்டிருக்கிறார். (இப்படிப் பேசியவருக்கு அர் விகுதி தேவையில்லை என்றாலும் ஆகிற வயதுக்காகப் போட்டிருக்கிறோம்.)

இந்நிலையில் எஸ்வி சேகர் வழக்கம் போல என் பேச்சு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டது என்று சொல்லி மன்னிப்புக் கேட்டுள்ளார். இவர் பேசியது வீடியோவில் தெளிவாகப் பதிவான நிலையில் என்ன தவறான புரிதலைக் கண்டுவிட்டார் அனைத்துக் கட்சி அல்லக்கை எஸ்வி சேகர்? ஏற்கனவே வேறொருவர் பேசியதை வெட்டி ஒட்டித் தன் கருத்துப் போலப் பதிவிட்டு சிக்கல் எழுந்த பின் இன்னொருவர் கருத்து என்று ஜகா வாங்கிய சூரன் தான் இந்த எஸ்வி சேகர். விசாரணையில் இன்னொருவர் கருத்து என்றாலும் தவறான முறையில் அதைத் திரித்துப் பகிர்ந்தது குற்றம் என்று தண்டனை பெற்றவர். சிறை செல்வதில் இருந்து தப்பிக்கலாம் என்றும் மேலும் வேறேதோ ஆதாயம் கருதியும் திமுகவின் சொம்பாக மாறியுள்ள எஸ்வி சேகர் இனியும் திருந்தப் போவதில்லை என்றாலும் கண்டனங்களுக்குக் கண்டிப்பாக உரித்தானவர்.

சிறை செல்வதில் இருந்து தப்பிக்கலாம் என்றும் மேலும் வேறேதோ ஆதாயம் கருதியும் திமுகவின் சொம்பாக மாறியுள்ள எஸ்வி சேகர் இனியும் திருந்தப் போவதில்லை

இந்தப் பேச்சுக்காக அவர் நெற்றி நிலம்பட விழுந்து மன்னிப்புக் கேட்டாலும் போதாது என்பதே நியாயம்.

இது போல இன்னொருவர் பொன்ராஜ் என்ற நபர். விஞ்ஞானி என்றும், அப்துல்கலாமின் உதவியாளர் என்றும் கூறித்திரியும் இவர் எங்கும் விஞ்ஞானம் பேசி யாரும் பார்த்ததில்லை. (கவுண்டமணி எருமைப் பால் பசும்பால் இவற்றை வைத்து விஞ்ஞானம் என்று திரைப்படத்தில் காமெடி செய்தது போலக்கூட ஏதும் பேசியதில்லை இந்தப் பொன்ராஜ்.) சட்டியில் இருந்தால் தானே ஆப்பையில் வரும் என்ற கேள்வி எழத்தான் செய்கிறது. இவர் தன்னை அப்துல்கலாம் அளவுக்குத் தானே நினைத்துக்கொண்டு வலம் வந்தவர். யாரும் மதிக்கவில்லை என்றவுடன் அரசில் இருப்பவர்களின் கவனத்தை ஈர்க்கப் பதினாறாம் வாய்ப்பாடெல்லாம் சொல்லிப் பார்த்தார். கணக்கில் ஜித்தர்களான மத்திய அரசினர் எவரும் கண்டுகொள்ளவில்லை. நம்பர்கள் வரிசையாகச் சொல்வது கண்டு படித்தவர் போலிருக்கிறது என்று

திமுக தன் வசம் ஈர்த்துக் கொண்டது.

இந்தப் பொன்ராஜ் திமுகவில் சிவாஜி கிருஷ்ணமூர்த்திக்குப் போட்டியாக வளர விரும்புகிறார் போலிருக்கிறது. சமீபத்தில் விஜய்யின் தவெக கட்சியின் பெண்கள் குறித்துப் பேசும்போது அக்கட்சியின் விபச்சாரிகள் என்று பேசினார். இவர்கள் விஜய்க்கு அக்கா, தங்கை, மனைவி என்று எல்லா உறவுகளும் தாங்களே என்று பேசினார்கள். இந்தப் பெண்களை வேறெப்படிப் பேச முடியும் என்று கேட்டார் பொன்ராஜ். விஜய் கட்சியினர் உள்ளிட்ட பலரும் கண்டித்த போதும் அதெல்லாம் அப்படித்தான் பேசுவேன் என்று திமிர் காட்டினார். இதைக் கண்டித்துப் புகாரளிக்க விஜய் காவல்துறைத் தலைவர் அலுவலகம் வந்து புகாரளித்து பொன்ராஜ் மீது நடவடிக்கை கோரினார்.

பொன்ராஜ் திமுகவுக்காகப் பேசும் கைக்கூலி என்று குறிப்பிட்ட விஜய் அவர் மீது கடும் நடவடிக்கை எடுத்துப் பெண்களின் கண்ணியத்தைக் காக்க வேண்டும் என்று ட்விட்டரில் கூறினார். அனால் பொன்ராஜ் மசிவதாக இல்லை. இப்படிப் பேசும் பெண்களை வேறென்ன வார்த்தை சொல்வதாம் என்று கேட்டு மன்னிப்பெல்லாம் கேட்க முடியாது என்று மறுத்துவிட்டார். யாரோ ஒரு பெண் பேசினார் என்பதற்காக அக்கட்சியில் உள்ள பெண்கள் அனைவரையும் தவறான சொல்லால் குறிப்பது என்ன நியாயம்?

ஆனால் பொன்ராஜின் திமிர்த் தனமான பேச்சுக்குக் கண்டனங்கள் வலுத்த நிலையில் தான் தவெகவில் குறிப்பிட்ட வகையில் பேசிய பெண்களைத் தான் அவதூறுச் சொல்லால் பேசியதாகவும் எல்லாப் பெண்களையும் பேசவில்லை என்றும் அதனால் மன்னிப்புக் கேட்பது முடியாது என்றும் கூறினார். இது விஜய் தங்களுக்குப் போட்டியாக கிறிஸ்தவ ஓட்டுக்களைப் பிரிப்பார் என்ற திமுகவின் அச்சத்தை ஊர்ஜிதப்படுத்துவதாகவும், அதனால் தங்கள் கைவசம் உள்ள ஆட்களை விஜயையும் அவர் சார்ந்தவர்களையும் இழிவுபடுத்திப் பேசுவதைச் செய்ய ஏவியிருப்பதாகவும் அரசியல் வட்டாரங்களில் பேச்சு எழுவதைத் தவிர்ப்பதற்கில்லை.

திமுகவின் தரம் என்பது பெண்ணோடு தொடர்பா என்றால் தான் முனிவனுமல்ல அவள் பத்தினியுமல்ல என்று சொன்னதில் தொடங்கி திராவிட நாட்டை நாடாவை அவிழ்த்துப் பாவாடையில் தேடுவதில் திகழ்வது. மேலும் தீப்பொறி ஆறுமுகம், வெற்றிகொண்டான் என்று போனதில் திமுக வரலாறு அனைவரும் அறிந்ததே. ஆனால் அப்துல்கலாமின் உதவியாளர் என்று அந்தப் பண்பாளரின் பெயர் சொல்லிக்கொண்டு இப்படித் தீப்பொறி ஆறுமுகத்துக்குப் போட்டியாக இந்தப் பொன்ராஜ் பேசுவது அப்துல்கலாம் ஐயாவுக்கு அவமரியாதை. அதனால் அவர் இனி கலாமின் உதவியாளர் என்று சொல்வதை நிறுத்திக்கொண்டு திமுகவின் தரத்துக்குத் தன்னை ஆக்கிக் கொள்வதைத் தொடரட்டும். இந்தப் பேச்சுக்காக பொன்ராஜும் நெற்றி நிலம்பட விழுந்து மன்னிப்புக் கேட்டாலும் போதாது என்பதே நியாயம். ஆனாலும் திமுககாரன் அப்படித்தான் என்று போவது தவிர வேறு வழியில்லை.


# வாசகர் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

**ஸ்ரீதமிழ் இதழ் மேலும் மேம்பட உங்கள் கருத்து எங்களுக்கு உதவும்.**

**தேர்ந்தெடுக்கப்பட்ட வாசகர் கருத்துக்கள் பிரசுரிக்கப்படும். வாட்ஸ் ஆப்பில் டெக்ஸ்ட் பண்ணுங்க; அல்லது, வாய்ஸ் நோட் அனுப்புங்க....**

**வாட்ஸ் அப் எண்: 7010281932**

**உண்மை நின்றிட வேண்டும் என்ற கொள்கையின் படி செய்திகளை வழங்கி வரும் ஸ்ரீ தமிழ் இதழுக்கு சந்தாதாரர்களும் , விளம்பரதாரர்களும் வரவேற்கப்படுகிறார்கள்**

# மமதையின் உச்சத்தில் மமதா

மீனாக்ஷி

SIR விவகாரத்தில் மேற்கு வங்காளத்தில் உச்சநீதிமன்றம் நியமித்த நீதிபதிகளையே சிறைபிடித்தது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

மேற்கு வங்க எல்லையோர மாவட்டங்களில் மிகப்பெரிய அளவில் ஊடுருவல் நடந்திருக்கிறது. ஒவ்வொரு 5 வருட தேர்தலிலும் 25% அளவிற்கு வாக்காளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. முர்ஷிதாபாத், மால்டா, 24 வடக்கு பர்கனா, தெற்கு பர்கான இந்த ஊர்கள் அனைத்தும் இந்தியாவின் மேற்கு வங்காளத்தில் உள்ள பங்களாதேஷ் எல்லையை ஒட்டிய பகுதிகள். இந்த பகுதிகள் இந்தியாவின் எல்லைக்குள் இருந்தாலும் இங்கு வாழக்கூடிய பெரும்பான்மை பங்களாதேசத்துக்கு ஆதரவான காட்டுமிராண்டி கூட்டங்கள். SIR நடத்தியதன் மூலம் சட்டவிரோத முஸ்லிம் குடியேறிகள் கண்டறியப்பட்டு, அவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு வருகிறது. மமதாவின் ஓட்டுவங்கிக்கு பெரிய சேதாரம் ஏற்படுவதால், கடுமையான எதிர்ப்பை வெளிக்காட்டுகிறார் மமதா.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகும் மமதா விடுவதாக இல்லை.

SIR -ல் விடுபட்ட பெயர்களைச் சேர்க்க உச்சநீதிமன்றமே 150 மாவட்ட நீதிபதிகளை நியமித்திருக்கிறது. பெயர் விடுபட்டவர்கள் இந்த சிறப்பு முகாமில் கலந்து கொண்டு நீதிபதியிடம் தங்களது ஆவணங்களை கொடுக்கலாம் என்று உத்தரவிட்டது. இதன்படி பிரச்சினைக்குரிய இடங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகிறது. அப்படி மால்டா மாவட்டத்தில் 5 நீதிபதிகள் சென்ற பொழுது அங்கிருந்த முஸ்லிம்கள் அவர்களை சிறை பிடித்து வைத்தனர். கிட்டத்தட்ட 9 மணிநேரம் கழித்தே அவர்களை மீட்க முடிந்தது. அப்போது கூட செங்கற்களாலும்,தடிகளாலும் அவர்களது வாகனங்களை தாக்கி உள்ளனர் இந்த காட்டுமிராண்டிகள்.

ஆனால் இதைப் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என கூறிய மமதா மேற்கு வங்காளத்தில் ஜனாதிபதி ஆட்சி அமைக்க பாஜக செய்யும் சதி இது என்று அறிக்கையும் விட்டிருக்கிறார்.

கோல்கட்டா ஹைகோர்ட் தலைமை நீதிபதி இதுபற்றி கடிதம் எழுதியதைத் தொடர்ந்து சுப்ரீம்கோர்ட் தலைமை நீதிபதி சூர்யகாந்த் அமர்வு தாமாக முன்வந்து விசாரணை நடத்தியது. ஒரு நடுநிலையான விசாரணையை உறுதி செய்வதற்காக, சிபிஐ அல்லது என்ஐஏ-வில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை தேர்தல் ஆணையத்திற்கு நீதிமன்றம் வழங்கியது. அதனைத் தொடர்ந்து தேர்தல் ஆணையம் என்ஐஏ-வைத் தேர்ந்தெடுத்தது. என்ஐஏ குழு ஏப்ரல் 6-ஆம் தேதிக்குள் உச்ச நீதிமன்றத்தில் ஒரு பூர்வாங்க அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். தாமதமாகப் பதிலளித்ததற்காக மேற்கு வங்க டிஜிபி மற்றும் மால்டா மாவட்ட ஆட்சியர்/காவல்துறை கண்காணிப்பாளரைக் கண்டித்த அவர். “இடமாற்றங்கள் தண்டனை அல்ல” என்று கூறியதோடு அல்லாமல் பாதுகாப்பு உடனடியாக பலப்படுத்தப்படாவிட்டால் மிகவும் கடுமையான ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார். மேற்கு வங்க சட்டமன்றத் தேர்தலின் முதல் கட்டம் ஏப்ரல் 23-ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், தேர்தல் ஆணையம் தேர்தல் செயல்பாட்டில் எந்தவொரு தலையீட்டையும் சகித்துக்கொள்ளாத அணுகுமுறையைக் கடைப்பிடிக்கிறது என்பதை இந்த நடவடிக்கை உணர்த்துகிறது.


மேற்கு வங்க சட்டமன்றத் தேர்தலில் மக்கள் அச்சமின்றி வாக்களித்து திரிணமூல் காங்கிரஸ் கட்சியை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வலியுறுத்தி உள்ளார்.

மேலும், சட்டப்பேரவைத் தேர்தலில் பிரச்சாரம் செய்வதற்காக, தான் 15 நாட்கள் மேற்கு வங்கத்திலேயே தங்கியிருப்பதாகவும் அமித் ஷா அறிவித்தார்.

இதுவரை இந்திய வரலாற்றில் எந்த மாநிலத்திற்கும் தேர்தல் பணிக்காக இவ்வளவு படைகளை அனுப்பியது இல்லை. சுமார் 2,40,000 ராணுவ வீரர்கள் மேற்கு வங்காளத்தில் குவிக்கப்பட்டுள்ளார்கள். இனி கலவரத்தில் ஈடுபட்டால் ராணுவம் சரியான பரிசை கொடுக்கத் தயாராக இருக்கிறது. ராணுவத்திற்கு முழு சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேர்தல் முடிந்தவுடன் மத்திய அரசு மேற்கு வங்க மாநிலத்திற்கு மிகப் பெரிய முடிவை தயாராக வைத்திருக்கின்றது. தேசத் துரோகிகளும் எதிரிகளும் மண்ணோடு மண்ணாக அழிக்கப்பட வேண்டியவர்கள்.

# பஞ்சாபில் போதை சர்வே- தமிழகம் பாடம் கற்குமா

வெள்ளய்யன்




பஞ்சாப் அரசு ஒரு வித்தியாசமான கணக்கெடுப்பைத் தொடங்கியுள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள 65 லட்சம் குடும்பங்களிடையே வீடு வீடாகச் சென்று ஆய்வு நடத்த சுமார் 28,000 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். போதைப்பொருள் பழக்கம் மற்றும் அதன் காரணமாக சமூக-பொருளாதார நிலையில் ஏற்படும் பாதிப்புகள் குறித்த துல்லியமான, குடும்ப அளவிலான கணக்கெடுப்பு இது.

பஞ்சாப் முதல்வர் பகவந்த்மான் வெளியிட்டுள்ள அறிக்கையில், போதைப்பொருள் பிரச்சனையை விரிவாகப் புரிந்துக் கொள்வதும், போதைக்கு அடிமையானவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் வருமானம், கல்வி மற்றும் ஒட்டுமொத்த சமூக-பொருளாதார நிலையை மதிப்பிடுவதும் இந்த ஆய்வின் நோக்கம் என்று உறுதிபடத் தெரிவித்தார். இந்தத் தரவுகள், சிறந்த விளைவுகளுக்காக சிகிச்சை மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் இலக்கு சார்ந்த கொள்கை உருவாக்கத்திற்கு உதவும் என்றும் அவர் கூறினார். 2027 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் திட்டமிடப்பட்டுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கு இன்னும் ஓராண்டே உள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வை முடிக்க மாநில அரசு மூன்று மாத காலக்கெடுவை நிர்ணயித்துள்ளது. இதற்காக 2026-27 நிதியாண்டில் 250 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்விற்காக 28,515 உயர்தர 5G ஸ்மார்ட்போன்களை மாநில அரசு ஒதுக்கியுள்ளது. இந்த போன்கள் மத்திய அரசின் 'மிஷன் சக்காம் அங்கன்வாடி மற்றும் போஷன் 2.0' திட்டத்தின் கீழ் வாங்கப்பட்டவை. கணக்கெடுப்பு முடிந்ததும், இந்த போன்கள் அங்கன்வாடி ஊழியர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலத்தில் போதைப்பொருள் பயன்பாட்டின் அளவைக் கண்டறிய இந்தக் கணக்கெடுப்பு உதவும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், போதைக்கு அடிமையானவர்கள் எந்த வகையானப் பொருட்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பதுடன், வயது, கல்வி மற்றும் வருமான அளவுகள் உள்ளிட்ட சமூக-பொருளாதாரக் குறிகாட்டிகள் பற்றிய தகவல்களையும் இது வெளிப்படுத்தும்.

பாரதநாட்டின் களஞ்சியமாகவும், நம் இராணுவத்தில் ஆர்வமுடன் பணி செய்ய முன்வரும் எல்லை மாநிலமான பஞ்சாப் இன்று போதையாலும், பிரிவினைவாதத்தாலும், பிரச்சினைக்குரிய பகுதியாக மாறிவிட்டது. இந்த ஆபத்தை உணர்ந்து முன்பே அரசு செயல்பட்டிருந்தால் இன்று இந்த நிலை வந்திருக்காது. நம் நாட்டின் வளமான, வலிமையான பகுதிகளை, நம் எதிரி நாடுகளும், எதிரிகளும் குறி வைத்துக் கெடுத்து வருகிறார்கள். பாகிஸ்தான் வழியாக நம் நாட்டிற்குள் வரும் போதைப் பொருட்கள், பஞ்சாபிலிருந்து தமிழகம் வழியாக பல நாடுகளுக்குச் செல்கிறது. இந்தக் கண்ணியில் அடுத்த பிரதான மாநிலம் தமிழகம். இப்போது நம் தமிழகத்தில் போதைப் பழக்கம் அதிகரிப்பது, பஞ்சாப்பைப் போல் தமிழகம் அழிவுப் பாதையில் செல்வதையேக் காட்டுகிறது.

இன்று பஞ்சாப் மாநிலத்தின் அரசுப் பணியாளர்கள் வேறு வேலையை விட்டுவிட்டு போதையிலிருந்து மீட்கும் பணியை முழு நேரமாகச் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழகப் பள்ளிகளில், ஆசிரியர்கள் மாணவர்களைத் தட்டிக்கேட்க முடியாத நிலையும், கொலைகள், கற்பழிப்புகள், பொது ஒழுங்கை செயல்படுத்த முடியாமல் தவிக்கும் காவல்துறை என்று சட்டம் ஒழுங்கு இல்லா மாநிலமாகத் தமிழகம் மாறி வருகிறது. பஞ்சாபைப் போல், தமிழகத்திலும் பிரிவினைவாதமும், பயங்கரவாதமும் பெருகி வருகிறது. இந்தியாவிலிருந்து காஷ்மீர், பஞ்சாப், தமிழகம், வடகிழக்கு மாநிலங்களைப் பிரிப்போம் என்று பாகிஸ்தானின் முன்னாள் இராணுவ அதிகாரி டைம்ஸ் நெள சேனலில் 12 ஆண்டுகளுக்கு முன் பேசினார். தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகள் ஒன்றிய அரசு என்று சொல்வதும், இந்தச் சதிக்கு உதவுவதாகத் தெரிகிறது. பாரதத்தின் காவலனான பஞ்சாபை வீழ்த்தியதுபோல், பாரதப் பண்பாட்டின் தொட்டிலான தமிழகத்தை வீழ்த்தாமல் பாதுகாக்க, அரசு சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளுமா?

# செய்
# சிந்த

**செய்தி:**

**மயிலையில், திருஞானசம்பந்தரின் பூம்பாவைத் திருப்பதிகம் நோட்டீஸை விநியோகித்தோர் மீது HR-CE குண்டர்கள் தாக்குதல்**

**சிந்தனை**

ஹிந்து தர்மத்தை அழிக்கும் அதிகாரம் பொருந்திய அரசு நிறுவனம். ஏசுநாதர் உயிர்த்தெழுந்தார் ஆனால் நம் மகான்கள் பலரை உயிர்ப்பித்தனர் என்ற உண்மை வெளிவந்தால் மதமாற்றத்திற்கு பின்னடைவாகும் என்ற அச்சம்.

**செய்தி:**

**இந்தியாவில் எண்ணெய் கையிருப்பு பற்றி தவறான செய்திகளைப் பரப்பும் BBC**

**சிந்தனை**

பல நாடுகளில் ஆட்சி மாற்றத்தையும், ஜனநாயகத்தையும் குழிதோண்டிப் புதைத்த நிறுவனம். இந்தியாவில் பல தோல்விகளைக் கண்டபின்னும், சதியைத் தொடர்கிறது. ஊடக அந்தஸ்து ரத்து செய்யப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

**செய்தி:**

**ஒரு மதம் மட்டுமே உண்மைய**
**நீதிமன்றம் அதிரடி**

**சிந்தனை**

பாசிச மனப்பான்மை கொ
பன்முகத்தன்மைக்கும் ஆபத்
மதத்தவரை அடையாளப்பட
மதமாற்ற கும்பல்களின் ஹி
என்பதை உறுதிப்படுத்திய தீர்

**செய்தி:**

**சமயபுரம் கோயிலில் - மேற்கூரை சிமெண்ட் பூச்சு இடிந்து பக்தர் பலி.**

**சிந்தனை**

தென்காசி கோவிலில் கலசம் விழுந்தது. இங்கு மேல்பூச்சு. ஹிந்துக்களிடம் பண வசூல் செய்து, கும்பாபிஷேகம் என்ற பெயரில் ஊழல். ஹிந்துக்களின் உயிரையும், பாதுகாப்பையும் மதிக்காத அரசு. பக்தியை விற்று பக்தனைக் கொல்லும் அரசு

**செய்தி:**

**தாவூத் இப்ராகிமை**
**கர்நாடகவில் சிறை**

**சிந்தனை**

சர்வதேச பயங்க
கும்பல்களின் புக
அரசின் ஆதரவே
கண்டுகொள்ளாம
விரோதிகளை,
செயல்.

# திகள்
# னைகள்

**செய்தி:**

**கொடைக்கானல் குறிஞ்சி ஆண்டவர் கோயிலில் நடத்தை விதி எனச் சொல்லி கந்த சஷ்டி கவச கல்வெட்டை மறைத்த HR-CE**

**சிந்தனை**

கோயிலுக்குள் இருக்கும் கந்த சஷ்டி கவசத்திற்குத் தடை. வீதி தோறும் எழுதப்பட்டிருக்கும் பைபிள் வசனங்களுக்கும், ஈ.வே.ராவின் அவதூறுகளுக்கும் அனுமதி. தேர்தல் விதிமுறை என்ற பெயரில் ஹிந்து வெறுப்பைக் கக்கும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பானது - ஏற்புடையது அல்ல,**

ண்ட மதங்கள், ஜனநாயகத்திற்கும், து. பாவிகள், காஃபிர்கள் என்று பிற த்துவதே பாசிசத்தின் ஊற்றுக்கண். ந்து வெறுப்புப் பிரச்சாரம் குற்றம் ப்பு.

**செய்தி:**

**சர்ச் விவகாரங்களில் தலையிடும் சிவில் நிர்வாகம், சர்ச்சுகளை கையகப்படுத்த உயர்நீதிமன்றம் உத்தரவிட முடியாது - கேரள உயர்நீதிமன்றம்**

**சிந்தனை**

ஹிந்துக் கோயில்களில் நிர்வாகச் சீர்கேடு என்று சொல்லி கோயில்களை அரசு கையிலெடுக்க அனுமதிக்கும் சட்டம் கிறிஸ்தவர்களுக்குப் பொருந்தாது. நீதிமன்றத் தீர்ப்பை அவமதித்தாலும்,சர்ச்களை அரசு கையகப் படுத்தக்கூடாது. மதச்சார்பற்ற சட்டம் ஹிந்துக்களுக்கு பாதகம்.

**ம போற்றும் தமிழக பஸ் - றபிடிப்பு**

ரவாத, பிரிவினைவாத, போதை லிடமாக தமிழகம் மாறியுள்ளது. வாடு நடக்கும் சதிச் செயலை ல் இருக்கும் மத்திய அரசு. தேச முன்மாதிரிகளாக மாற்றும் சதிச்

**செய்தி:**

**திமுக கூட்டத்தை படம் பிடித்த பறக்கும் படை கேமிராமேனுக்கு அடி உதை**

**சிந்தனை**

சபாநாயகர் அப்பாவு பகுதியில் நடக்கும் இந்த கனிமக் கொள்ளையை கண்டுகொள்ளாமல் இருக்கும் சூழியலாளர்கள். இதே தொகுதியில் உள்ள கூடங்குளத்திற்காக குரல் கொடுத்தவர்கள் காணாமல் போய்விட்டார்கள்! நிலத்தடி நீர்மட்டம், விவசாயம் என்று அனைத்தையும் ஒழித்து தமிழகத்தை பாலைவனமாக மாற்றும் திமுக அரசு!

# படம் சொல்லும் பாடம்

- தொகுப்பு : சி.பாண்டிக்குமார்






# இந்தியாவைப் பிளக்க கிறிஸ்தவ சதி - பிரிவினைக்கு உதவும் தமிழகம்

இராமகிருஷ்ணன்

இந்தியாவிற்கு எதிராக பயங்கரவாத நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிட்டதாகக் கூறி தேசிய புலனாய்வு முகமை , மார்ச் 13, 2026 (என்.ஐ.ஏ) 6 உக்ரைன் நாட்டவர்கள் மற்றும் ஒரு அமெரிக்கர் உட்பட 7 வெளிநாட்டினரைக் கைது செய்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த மேத்யூ ஆரோன் வான்டைக் கொல்கத்தா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். மேலும் 3 உக்ரைன் நாட்டவர்கள் லக்னோவிலும், 3 நபர்கள் டெல்லி விமான நிலையத்திலும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் முறையான விசாக்களுடன் இந்தியா வந்திருந்தாலும், கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான அனுமதியின்றி மிசோரம் மாநிலத்திற்குச் சென்றதாக தகவல் வெளியாகியுள்ளது. அதுமட்டுமல்லாமல், அவர்கள் இந்தியாவிற்கு எதிராக செயல்படும் குழுக்களை சந்தித்து ஐரோப்பாவிலிருந்து பல ட்ரோன்களை வழங்கியதாகவும் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. என்.ஐ.ஏ வால் கைது செய்யப்பட்டவர்கள் ஐரோப்பாவிலிருந்து மியான்மருக்கு சக்திவாய்ந்த ட்ரோன்களை இயக்க பயிற்சி அளித்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இந்தியாவில் பயங்கரவாதம் மற்றும் பிரிவினைவாதச் செயல்களில் ஈடுபடும் நாச கார அமைப்புகள் மியான்மரிலிருந்து இயங்குவதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

**யார் இந்த மேத்யூ ஆரோன் வான்டைக்?**

46 வயதான வான்டைக் பால்டிமோரில் பிறந்து, ஜார்ஜ்டவுன் பல்கலைக்கழகத்தில் பயின்று, உலகம் முழுவதும் பிரிவினைவாத, பயங்கரவாதக் குழுக்களுடன் பல போர்களில் ஈடுபட்டுள்ளார்.



வான்டைக் முதன்முதலில் லிபிய உள்நாட்டுப் போரின்போது வெளிச்சத்திற்கு வந்தார். 2011-ல், அவர் அனுமதி இன்றி லிபியாவிற்குள் நுழைந்து, கடாபிக்கு எதிராகப் போராடும் கிளர்ச்சிப் படையில் இணைந்தார். லிபிய அரசால் கைது செய்யப்பட்ட வான்டைக், சுமார் ஆறு மாதங்கள் தனிமைச் சிறையில் வைக்கப்பட்டார். திரிப்போலி அரசு வீழ்ச்சியடைந்தவுடன், திரிப்போலி சிறை உடைக்கப்பட்டது. இதை பயன்படுத்தி லிபியாவிலிருந்துத் தப்பினார்.

லிபியாவிற்கு முன்பு, அவர் உளவுத்துறையின் அதிகாரப்பூர்வ உலகில் நுழைய முயன்றார். ஜார்ஜ்டவுனில் பாதுகாப்பு ஆய்வுகள் படிக்கும் மாணவராக இருந்தபோது, அவர் மத்திய புலனாய்வு முகமையின் (CIA) ஆட்சேர்ப்பு செயல்முறையின் கடினமான தேர்வுகளில் வெற்றி பெற்று முன்னேறினார். அவர் பல கட்டங்களைத் தாண்டினாலும், பாலிகிராஃப் (பொய் கண்டறியும் சோதனை) தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. அவர் அந்த முகமைக்காகப் பணியாற்றியதற்கான எந்தப் பொது ஆதாரமும் இல்லை என்றாலும், அந்தத் தோல்வியே பல ஊகங்களுக்கு அடிப்படையாக அமைந்தது. இவரை அமெரிக்க சி.ஐ.ஏ வெளியிலிருந்து இயக்குகிறதோ என்ற சந்தேகம் பலமாக உள்ளது.

2008 மற்றும் 2010-க்கு இடையில், உளவு பார்த்தல் அல்லது போராளிகளுடன் தொடர்பு வைத்திருந்த சந்தேகத்தின் பேரில் ஈராக் படைகளால் வேன்டைக் பலமுறை கைது செய்யப்பட்டார். இவரை சிறையிலிருந்து பல முறை விடுதலை செய்ய உதவியவர்கள் யார் என்பது மர்மமாகவே உள்ளது. சிரியாவில், ஒரு ஆவணப்படம் பிடிக்கும்போது கிளர்ச்சிக் குழுக்களுடன் இணைந்து பணியாற்றினார், இதன் காரணமாக அசாத் அரசாங்கம் அவரை ஒரு பயங்கரவாதி என்று முத்திரை குத்தியது.

2014-ல், ஐஎஸ்ஐஎஸ் (ISIS) அமைப்பால் பத்திரிகையாளர்கள் ஜேம்ஸ் ஃபோலி மற்றும் ஸ்டீவன் சோட்லாஃப் ஆகியோர் கொல்லப்பட்ட பிறகு, அவர் "சன்ஸ் ஆஃப் லிபர்ட்டி இன்டர்நேஷனல்" (Sons of Liberty International) என்ற அமைப்பை நிறுவினார். இந்த அமைப்பு சர்வாதிகார ஆட்சிகளுக்கு எதிராகப் போராடும் குழுக்களுக்குப் பயிற்சி மற்றும் ஆதரவை வழங்கும் ஒரு லாப நோக்கமற்ற அமைப்பாகத் தன்னை விவரிக்கிறது. நடைமுறையில், இது செயல்பாட்டாளர் (activism), இராணுவ



ஆலோசனை மற்றும் தனியார் தலையீடு ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு புள்ளியில் இயங்குகிறது.

2022 முதல், வான்டைக் உக்ரைனில் ரஷ்யாவிற்கு எதிரான போரில் அதன் படைகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வருகிறார். அவர் தன்னை ஒரு பயிற்சியாளராக மட்டும் நிறுத்திக்கொள்ளாமல், ஒரு போராளியாகவும் (combatant) சேர்ந்ததாகக் கூறப்படுகிறது. 2025-ன் பிற்பகுதியில், அவரது பொது அறிக்கைகள் ரஷ்யாவின் கூட்டாளிகளை எதிர்கொள்வதில் அதிக கவனம் செலுத்துவதாகத் தெரிவித்தன. இப்போது, இவருடன் உக்ரைன் நாட்டினர் 6 நபர்கள் கைது செய்யப்பட்டிருப்பது, பயங்கரவாதக் குழுக்களுக்கு பயிற்சியளிக்கும் இவர் செயல்பாட்டின் அங்கமாகத் தெரிகிறது. இப்போது நடக்கும், ஈரான் போரில் கூட, ட்ரோன் போர் முறையை மேற்கொள்ள, உக்ரைனிலிருந்து நிபுணர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**இப்படிப்பட்ட சர்வதேச பயங்கரவாதிக்கு, மிசோராமில் என்ன வேலை ?**

செப்டம்பர் 2024-ல் அமெரிக்காவில் மிசோரம் முதலமைச்சர் லால்டுஹோமா ஒரு சர்ச்சையை ஏற்படுத்தினார். அதில் இந்தியா, மியான்மர் மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகளில் பரவிக் கிடக்கும் 'சோ' (Zo) இன மக்களை ஒன்றிணைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். தற்போதைய சர்வதேச எல்லைகளை 'செயற்கையானவை' என்று வர்ணித்த அவர், இந்த மக்கள் 'தேசியம்' எனும் பொதுவான விதியைத் பகிர்ந்து கொள்வதாகக் குறிப்பிட்டார். நம் நாட்டின் ஒரு மாநிலத்தின் முதல்வராக இருந்து கொண்டு, நம் நாட்டின் இறையாண்மைக்கு எதிராக பேசியதற்கு இவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது வருத்தத்திற்குரியது.

இவரது அமெரிக்கப்பயணம் செப்டம்பரில், ஆனால் மணிப்பூரில் கலவரம் நடந்தது மே 2023ல். இந்தக் கலவரத்தில் பாதுகாப்புப் படையினர் மீது பெரும்பாலும் தாக்குதல் நடத்தியது, கூக்கி பயங்கரவாதிகள். இவர்கள், மிசோராம் முதல்வர் குறிப்பிடும் சோ இனக்குழுவில் இடம் பெறுபவர்கள் என்பது கவனிக்கத்தக்கது. இந்தக் கலவரம் தொடங்கும் முன், வடகிழக்கு மாநிலத்தில் கலவரம் ஏற்படும் என்று முன்னரே அறிவித்தார் காங்கிரஸ் கட்சித் தலைவர் ராகுல் காந்தி. இந்தக் கலவரத்தைத் தொடர்ந்து, இந்தியாவிற்கு எதிரான பிரச்சாரத்தை மனித உரிமை மீறல் என்று பிரபலப்படுத்தியது, அமெரிக்காவிலுள்ள அமைப்புகளும், அரசியல் கட்சிகளும். அதே நேரத்தில், மணிப்பூரை வைத்து பல போராட்டங்கள் நடந்த மாநிலம், தமிழகம். இதை முன்னின்று நடத்திய கட்சி, தி.மு.க. தமிழக துணை முதல்வரான உதயநிதியின் மகன் இன்பநிதி, மணிப்பூர் NEROCA கால்பந்து அணியில் விளையாட 2021ல், ஒப்பந்தம் செய்து கொண்டார். மணிப்பூர் கலவரம் ஏற்பட்டபோது, மணிப்பூர் கால்பந்து அணி பயிற்சி மேற்கொள்ள, தமிழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

**தி.மு.க வின் மணிப்பூர் பாசத்தின் பின்னணி என்ன ?**

மே 2024-ல், தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு வங்கதேசத்திலிருந்து வெளியேறுவதற்கு சில மாதங்களுக்கு முன்பு, அப்போதைய பிரதமர் ஷேக் ஹசீனா ஒரு பரபரப்பான குற்றச்சாட்டை முன்வைத்தார். வங்கதேசம் மற்றும் மியான்மரின் சில பகுதிகளை இணைத்து புதிய "கிறிஸ்தவ நாடு" ஒன்றை உருவாக்குவதற்கு ஒரு வெளிநாட்டு சதி நடப்பதாக அவர் குற்றம் சாட்டினார். இந்தப் பகுதியில் தான் மிசோராம் , மணிப்பூர் மாநிலங்கள் வருகின்றன. இந்தக் கிறிஸ்தவத் தனி நாடு சதியின் பின்னணியில் அமெரிக்கா இருப்பதை மறைமுகமாக தெரிவித்திருந்தார். இன்று, இதே பகுதியில் கைது செய்யப்பட்ட வேன்டைக் அமெரிக்கர். இவர் சென்ற பகுதி, ஷேக் ஹசீனாவால் தனி கிறிஸ்தவ நாடாக பிரிவினைவாதிகளின் துணையுடன் அன்னிய நாடு சதி செய்யும் பகுதி. இந்தக் காலகட்டத்தில் தான் மணிப்பூர் கலவரம் நடந்தது. கிறிஸ்தவர்களின் தூண்டுதலின் பெயரில் நாடு முழுவதும் அரசியல் கட்சிகள் போராட்டம் நடத்தினர்.

இன்று கைது செய்யப்பட்ட அமெரிக்கரின் பின்னணியும், உக்ரைன் நாட்டவரின் தொடர்பும், கிறிஸ்தவப் பின்னணியும், அரசியல் கட்சிகளின் போராட்ட முனைப்பும், இந்தியாவைத் துண்டாடும் சர்வதேச சதிக்கு உடந்தையாக, தி.மு.க- காங்கிரஸ் கூட்டணி செயல்படுவதை உறுதி செய்துள்ளது. இந்தப் போராட்டங்கள் தமிழகத்தில் அதிகமாக நடந்ததாலும், அதை தமிழகத்தில் விரிவாக இந்தக் கட்சிகள் பரப்புரை செய்ததைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, தமிழகமும் பிரிவினையை நோக்கிச் செல்லும் அபாயத்தில் உள்ளது.

# பொருளாதாரம்


கோ. ரமேஷ், பொருளாதார நிபுணர்.

**சார்ட் அமைப்புகள் (பேட்டர்ன்)**

விற்பவர்கள் மற்றும் வாங்குபவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அளிப்பு (சப்ளை) மற்றும் தேவை (டிமாண்ட்) இரண்டும் மாறி மாறி வரும். இந்த நிலையில் சார்ட் அமைப்பு (Chart Pattern) முறையை பயன்படுத்தி பங்குச் சந்தை வர்த்தர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் அவர்களாவே வாங்கும் மற்றும் விற்கும் முடிவை எடுக்கலாம்.

பேட்டர்ன்கள் என்பதை தமிழில் அமைப்புகள் என்று சொல்லலாம்.

அதற்கு கீழ்க்கண்ட சார்ட் பேட்டர்ன்கள் தொழில்நுட்ப ஆய்வில் முக்கியமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.




**முக்கியமான பேட்டர்ன்கள்**

வால்யூம் அமைப்பு (Volume Pattern)

இடைவெளிகள் அமைப்பு (Gaps Pattern)

ஹெட் அண்ட் ஷோல்டர் அமைப்பு (Head & Shoulder Pattern)

கேண்டில் ஸ்டிக் அமைப்பு (Candle Stick Pattern)

கப் வித் ஹேண்டில் அமைப்பு (Cup with Handle Pattern)

டபுள் டாப் அமைப்பு (Double Top Pattern)

டபுள் பாட்டம் அமைப்பு (Double Bottom Pattern)

டிரிபிள் டாப் அண்ட் பாட்டம் அமைப்பு (Triple Top & Bottom Pattern)

ஃபிளாக் பேட்டர்ன் அமைப்பு (Flag Pattern)

இந்த பேட்டர்ன்கள் பற்றி தனித் தனியாக வரும் அத்தியாங்களில் சார்ட் விளக்கத்துடன் விரிவாக பார்க்கப் போகிறோம்.

**பெட்டி செய்தி**

**எச்சரிக்கை..!**

வரைபடங்கள் மற்றும் சார்ட்களின் அடிப்படையில் முடிவு எடுக்கும்போது சுற்றுச்சூழலை அவசியம் கவனிப்பது நல்லது. அப்போதுதான் நட்டப்படாமல் தப்பிக்க முடியும்.

இதை ஓர் உதாரணம் மூலம் பார்த்தால் எளிதில் விளங்கும்..!

ஒரு பங்கின் விலை இதற்கு முன்னர் பல தடவை 200 ரூபாயிலிருந்து இறங்கி 150 ரூபாய்க்கு வந்துவிட்டு பிறகு வேகமாக ஏறி மீண்டும் 200 ரூபாய்க்குச் செல்கிறது. இதை பல முதலீட்டாளர்கள் கூர்ந்து கவனித்து வந்திருக்கிறார்கள் என்றால் அடுத்த தடவை அதன் விலை 150 ரூபாய்க்கு கீழ் இறங்கி வந்தால் பலரும் வேக வேகமாக வாங்குவார்கள். அவர்களின் கணிப்பு எல்லாம் அது 200 ரூபாய்க்கு போகும். அப்போது விற்று லாபம் பார்த்து விடலாம் என்பதாக இருக்கும்.

வாங்குவதற்கு முன் ஒரு முக்கிய விஷயத்தை கவனிக்க வேண்டும். எந்த காரணத்துக்காக என்பது தான் அது. அந்த நிறுவனத்துக்கு திடீரென இயற்கை சீற்றத்தால் பெரும் இழப்பு, காப்பீடு பணமும் பெரிய அளவில் உதவாது என்கிற நிலை இருந்தால் அந்த நிறுவனம் மீண்டு வர பல ஆண்டுகள் ஆகும். அது வரை பங்கின் விலையில் பெரிய ஏற்றத்தை எதிர்பார்க்க முடியாது.

**வால்யூம் அமைப்புகள்**

வர்த்தகமாகும் பங்குகளின் எண்ணிக்கையை குறிப்பிடும், வர்த்தக அளவு (வால்யூம்) இரு முக்கிய காரணங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது.

**1.விலை மாற்றத்தை உறுதிப்படுத்துதல்:**

பங்கின் விலை அதிகரிக்கத் தொடங்கும் போது கூடவே வர்த்தக அளவு அதிகரிக்கவில்லை என்றால் பலவீனமாக மற்றும் இலக்கை நிறைவேற்றுவது தடைப்பட்டிருக்கிறது என்று பொருள்.

**2. விலை மாற்றத்தை எதிர்பார்த்தல்:**

வர்த்தக அளவு அடிக்கடி அதிகரித்தால் விலையில் மாற்றம் வரும் என எதிர்பார்க்கலாம்.

**வர்த்தக சிக்னல்கள்**

வர்த்தக (டிரேடிங்) சிக்னல்கள் என்பது குறுகிய காலம், டிரெண்ட் பலவீனம், நீண்ட காலம் என்பதாக இருக்கிறது.

**குறுகிய காலம்**

டிரெண்ட் உறுதிப்படுத்தப்படுகிறது.

விலை மற்றும் வர்த்தக அளவு அதிகரிப்பு என்பது ஆரோக்கியமான உயர்வை காட்டும் குறியீடு (சிக்னல்).

விலை குறைவு மற்றும் வர்த்தக அளவு அதிகரிப்பு என்பது ஆரோக்கியமான இறக்கத்தை காட்டும் குறியீடு.

**டிரெண்ட் பலவீனம்**

விலை அதிகரிப்பு மற்றும் வர்த்தக அளவு குறைவு என்பது பலவீனமான போக்கை காட்டும் குறியீடு.

விலை குறைவு மற்றும் வர்த்தக அளவு குறைவு என்பதும் பலவீனமான போக்கை காட்டும் குறியீடு

விலை அல்லது புள்ளிகள் இடையே அதிக வித்தியாசம் (ரேஞ்ச்) இருந்து வர்த்தக அளவும் குறைவாக இருந்தால், விற்பவர்களிடம் (விலை அதிகரிக்கும்பட்சம்) அல்லது வாங்குபவர்களிடம் (விலை இறங்கும்பட்சத்தில்) அதிக ஆர்வம் இல்லை என்று பொருள்.

**நீண்ட காலம்**

**டிரெண்ட் உறுதிப்படுத்துதல்:**

அதிகபட்ச விலைகளில் அதிக வர்த்தக அளவு என்பது அதிகபட்ச விலையில் ஆரோக்கியமான உயர்வை காட்டும் குறியீடு.

குறைந்தபட்ச விலைகளில் அதிக வர்த்தக அளவு அதிகரிப்பு என்பது குறைந்தபட்ச விலையில் ஆரோக்கியமான இறக்கத்தைக் காட்டும் சிக்னல்.

**டிரெண்ட் பலவீனம்**

அதிகபட்ச விலைகளில் குறைவான வர்த்தக அளவு என்பது அதிகபட்ச விலையில் பலவீனமான அப் டிரெண்டை காட்டும் குறியீடு.

குறைந்தபட்ச விலைகளில் குறைவான வர்த்தக அளவு என்பது குறைந்தபட்ச விலையில் பலவீனமான டவுண் டிரெண்டை காட்டும் குறியீடு.

**அக்குமுலேஷன் மற்றும் டிஸ்ட்பியூஷன்**

சந்தையை யார் கட்டுப்படுத்துகிறார்கள் என்பதை சுட்டிக் காட்டுவதாக அக்குமுலேஷன் மற்றும் டிஸ்ட்ரிபியூஷன் (Accumulation and Distribution) இருக்கிறது. இது அடிக்கடி சந்தையின் போக்கு அல்லது பங்கின் விலை போக்கு அதன் தற்போதைய நிலையிலிருந்து மாறப் போகிறது என்பது குறிப்பதாக இருக்கிறது.

அக்குமுலேஷன் என்கிற சொல் பங்குகளை வாங்கி குவிப்பதை குறிக்கும்.

**அக்குமுலேஷன்**

சந்தையானது வாங்குபவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தால் அது 'அக்குமுலேஷன்' நிலை.

இறங்குமுகத்தில் வர்த்தக அளவு மிகவும் அதிகமாக இருந்தால் வாங்கிக் குவிக்கப் போகிறார்கள் (அக்குமுலேஷன்) என்பதற்கான குறியீடாக எடுத்துக் கொள்ளலாம். அப்போது விற்பவர்கள் தங்களின் சந்தைக் கட்டுப்பாட்டை வாங்குபவர்களிடம் இழப்பது நடக்கும். இதற்கு மாறாக வாங்குவபர்கள் தங்களின் சந்தைக் கட்டுப்பாட்டை விற்பவர்களிடம் இழப்பதும் நடக்கும்.

ஒரு நாளில் அக்குமுலேஷன் நடக்க வேண்டும் என்றால், வர்த்தக அளவு அதிகரித்திருக்கும் (முன் தினத்தை விட) மற்றும் முடிவு விலை மேலே செல்லும் அல்லது இறங்குமுகம் என்றால் விலை சிறிது அதிகரிக்கும் அல்லது விலையில் மாற்றம் இருக்காது மற்றும் வர்த்தக அளவு அதிகரிக்கும்

**டிஸ்ட்ரிபியூஷன்**

சந்தை விற்பவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தால் அது டிஸ்ட்ரிபியூஷன் நிலை.

ஏறுமுகத்தில் வர்த்தக அளவு மிகவும் அதிகமாக இருந்தால் டிஸ்ட்ரிபியூஷன் நடக்கப் போகிறது என்பதற்கான அறிகுறியாக எடுத்துக் கொள்ளலாம். அப்போது வாங்குபவர்கள் தங்களின் சந்தை கட்டுப்பாட்டை விற்பவர்களிடம் இழப்பது நடக்கும். இதற்கு நேர்மாறாக விற்பவர்கள் தங்களின் சந்தை கட்டுப்பாட்டை வாங்குபவர்களிடம் இழப்பதும் நடக்கும்.

ஒரு நாளில் டிஸ்ட்ரிபியூஷன் நடக்க வேண்டும் என்றால், வர்த்தக அளவு அதிகரித்திருக்கும் (முன் தினத்தை விட) மற்றும் முடிவு விலை கீழே இறங்கும் அல்லது ஏறுமுகம் என்றால் விலை சிறிது குறையும் அல்லது விலையில் மாற்றம் இருக்காது மற்றும் வர்த்தக அளவு அதிகரிக்கும்

**பிரேக் அவுட்கள்**

பங்கின் விலை ஒரு வரம்புக்குள் (ரேஞ்ச்) வர்த்தகமாகும் போது, பங்கின் போது எந்த திசையில் இருக்கப் போகிறது என்பதை வர்த்தக ளவு சுட்டிக் காட்டுவதாக இருக்கும்.

உச்சத்தை அடையும் முன் அதிக வர்த்தக அளவு இருந்தால், பங்கின் விலை அந்த வரம்பை உடைத்துக் கொண்டு மேலே செல்ல அதிக வாய்ப்பு இருக்கிறது.

குறைந்தபட்ச விலை அடையும் முன் அதிக வர்த்தக அளவு இருந்தால், பங்கின் விலை அந்த வரம்பை உடைத்துக் கொண்டு கீழ் இறங்க அதிக வாய்ப்பு இருக்கிறது.

பிரேக் அவுட்ஐ உறுதிப்படுத்த இவ்விதமாக வர்த்தக அளவை பயன்படுத்திக் கொள்ளலாம்.

அதிக வர்த்தக அளவைத் தொடர்ந்து வரும் பிரேக் அவுட் என்பது ஆரோக்கியமான பிரேக் அவுட்டைக் குறிக்கும்.

குறைந்த வர்த்தக அளவைத் தொடர்ந்து வரும் பிரேக் அவுட் என்பது பலவீனமான பிரேக் அவுட்டைக் குறிக்கும்.

# வெற்றியும் தோல்வியும்

**- வெங்கட் பிரசாத், D.**
அரசியல் மற்றும் விளையாட்டு ஆய்வாளர்

**முயற்சி திருவினையாக்கும்!**

வில் என்றாலே அர்ஜுனர், ராமர் என்று ஆண்களை மட்டுமே உதாரணம் சொல்லிக் கொண்டிருந்த காலம் போய், வில் என்றாலே சீத்தல் தேவி என்று ஒரு பெண்ணை முதல்முறையாக உதாரணம் சொல்லும் அளவிற்குப் பெருமை தேடித் தந்திருக்கிறார் வில்வித்தை வீராங்கனை சீத்தல் தேவி. இரு கைகளும் இன்றித் துல்லியமாக வில் எய்யும் அவரது திறமையைப் பார்த்து, 2025-ஆம் ஆண்டுக்கான சிறந்த மாற்றுத்திறனாளி வில்வித்தை வீராங்கனை என்ற பெருமைமிகு பட்டத்தை உலக வில்வித்தை சம்மேளனம் இவருக்குக் கொடுத்துள்ளது. 19 வயதிலேயே இந்தப் பெருமையைப் பெற்றுள்ளார்.

**அருணாச்சலப் பிரதேசத்தில் கால்பந்து மைதானம்:**

அருணாச்சலப் பிரதேசத்தில் இந்தியாவின் மிகச்சிறந்த பிபா (FIFA) அளவிலான தரம் கொண்ட கால்பந்து மைதானத்தை அமைக்கும் பணி இந்த வருடம் தொடங்கிவிடும் என்று அம்மாநிலத்தின் முதல்வர் பெமா கந்து கூறியுள்ளார். இதற்காகப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து 200 கோடி ரூபாய் நிதி அனுமதி பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

**விடை பெற்றார் குர்ஜந்த் சிங்:**

இந்திய ஹாக்கி அணியின் அதிசிறந்த விளையாட்டு வீரர் குர்ஜந்த் சிங். இந்திய ஹாக்கி அணி, 2020 மற்றும் 2024 ஒலிம்பிக்கில் வெண்கலம் ஜெயிக்க இவர் முக்கியக் காரணம். அவர் முதுகில் ஏற்பட்ட காயம் மற்றும் வலியின் காரணமாகத் தான் ஓய்வு பெறுவதாக அறிவித்த இவருக்கு, அர்ஜுனா அவார்டும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.




**உபி அரசின் விளையாட்டு முக்கியத்துவம் :**

நமது தமிழ்நாட்டைப் பல விஷயங்களுக்கு உத்தரப் பிரதேசத்துடன் ஒப்பிடுவதுண்டு. ஆனால், விளையாட்டுத்துறையில் சாதித்தவர்களைப் பெருமைப்படுத்துவதில் திரு. யோகி தலைமையிலான உத்தரப் பிரதேசமே முதலிடம்.

மாற்றுத்திறனாளிகளுக்கான ஓட்டப்பந்தயத்தில் ஒரே ஒலிம்பிக்கில் இரண்டு தடகள மெடல் ஜெயித்த முதல் இந்திய மாற்றுத்திறனாளி வீராங்கனை என்ற பெருமையைப் பெற்ற ப்ரீத்தி பால் அவர்களுக்கு, பிளாக் டெவலப்மெண்ட் ஆபிசர் என்னும் அரசாங்க வேலைக்கான பணியமர்த்தும் கடிதத்தைத் திரு. யோகி அவர்களே வழங்கினார்.

கிரிக்கெட் வீரர் ரிங்கு சிங் அவர்களுக்கு வட்டார விளையாட்டு அலுவலர் பணிக்கான பணியமர்த்தும் கடிதத்தையும் திரு. யோகி அவர்கள் வழங்கினார். நமது தமிழ்நாட்டைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் பதக்க வீராங்கனைகளான துளசிமதி, மனிஷா, நித்யஸ்ரீ ஆகியோருக்கு இதுவரை எந்த அரசாங்க வேலையும், எந்த ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை என்பதே நிதர்சனமான உண்மை.

**ஐபிஎல் யுத்தம் 2026:**

டி20 உலகக்கோப்பையை அடுத்து, பெரும் சுவாரசியமாகப் பலரால் பார்க்கப்படும் இந்தியன் பிரிமியர் லீக் தொடங்கியுள்ளது. சென்ற முறை 14 போட்டிகளில் வெறும் நான்கு போட்டிகளை மட்டுமே வென்ற சிஎஸ்கே, இந்த முறை இளம் வீரர்கள், மேலும் இந்தியாவிற்காக விளையாடிய சர்பராஸ் கான், டி20 உலகக் கோப்பை 2026 இன் தொடர் நாயகன் சஞ்சு சாம்சன் ஆகியோர் இடம் பெற்றிருப்பதால் மீண்டும் எழுச்சி பெறுமா என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

ஆயினும், இந்திய டி20 அணியைப் போலவே மூன்று வேகப்பந்து வீச்சாளர்கள், ஒரு வேகப்பந்து வீச்சு ஆல்ரவுண்டர், ஒரு சுழற்பந்து வீச்சு ஆல்ரவுண்டர், இரண்டு சுழற்பந்து வீச்சாளர்கள், கிட்டத்தட்ட ஆறு பிரத்தியேக பேட்ஸ்மேன்களைக் கொண்டிருக்கும் ஆர் சி பி அணி, கோப்பையைத் தக்க வைத்துக் கொள்வதற்கு 95% வாய்ப்புள்ளது என்பதே நமது கணிப்பு. அதற்குப் போட்டியாகப் பஞ்சாப் கிங்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணியும் மிகவும் வலுவாக உள்ளன. பஞ்சாப் கிங்ஸ் அணியும் கோப்பையை வெல்லும் திறன் கொண்டுள்ளது. குழந்தைகளுடன் குடும்பம் யாவரும் பார்க்கக்கூடிய ஒரு நிகழ்வு ஐபிஎல் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

# சங்கத் தமிழில் சனாதனம்



— பத்மன்

## அத்தியாயம் 9 : வேள்வி வளர்த்த வேந்தர்கள்

வேள்விகள் செய்வது தமிழருக்குப் புறம்பான ஆரியப் பண்பாடு என்னும் கதை, சங்க இலக்கியங்களில் செல்லுபடியாகவில்லை. சங்க காலத்தில் மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்களோடு இதர குறுநில அரசர்களும் வேதநெறியைப் பின்பற்றிப் பல வேள்விகளைச் செய்துள்ளனர். அந்த மன்னர்களில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த செந்தமிழ் நாடாகிய பாண்டிய நாட்டு மன்னனான முதுகுடுமிப் பெருவழுதி குறிப்பிடத் தக்கவர். அவரது வேள்விச் சிறப்பு குறித்து மதுரைக்காஞ்சி கூறுகின்ற வர்ணனை இதோ:

**பல் சாலை முது குடுமியின்,**
**நல் வேள்வித் துறை போகிய**
**தொல் ஆணை நல் ஆசிரியர்**
**புணர் கூட்டு உண்ட புகழ் சால் சிறப்பின்,**
**நிலம் தரு திருவின் நெடியோன் போல,**
**வியப்பும், சாலும், செம்மை சான்றோர்**
**பலர்வாய்ப் புகர்அறு சிறப்பின் தோன்றி,**

(மது. 759-765)

“வேள்விகளுக்கு உரிய பல்வேறுத் துறைகளிலும் நல்ல விதமாகப் பல வேள்விகளை நடத்தி முடித்து, வீடுபேறு அடைவதற்கான பல்வேறு தத்துவங்களையும் தொன்மை வாய்ந்த நல் ஆசிரியர் தலைமையிலான அவையில் (சத்சங்கத்தில்) விவாதித்துக் கேட்டறிந்த புகழ் மிகுந்த சிறப்பை உடையவன் பல்சாலை முதுகுடுமி. வேள்விகளைச் செய்தவர்களுக்கு நிலங்களைத் தானமாகத் தந்ததால் நிலந்தரு நெடியோன் என்றும் புகழப்பட்டுள்ளான். அந்தப் புகழ், சான்றோர் பலரால் குற்றம் குறை அற்றது என வியந்து போற்றக்கூடிய அதிசயமும், பெருமையும் வாய்ந்தது. (நெடுஞ்செழியனே) உனது முன்னோரான அந்தப் பெருவழுதியைப் போல, நீயும் நல் ஆசிரியரிடம் தத்துவம் பயின்று நல்வேள்விகளைச் செய்வாயாக!” என்று பாண்டியன் நெடுஞ்செழியனைப் புலவர் மாங்குடி மருதனார் வாழ்த்தி அறிவுறுத்துகிறார்.

பிற்காலத்தில் வேள்விக்குடி என்ற இடத்தில் கிடைத்த, கடந்த 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வரகுண பாண்டிய மன்னன் செப்பேடுகளும், பாண்டியன் பெருவழுதி பல யாகங்களை (வேள்விகளை) செய்து பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்று பெயர் பெற்றான் எனவும், வேள்வி நடத்தியவர்களுக்கு நிலங்களைத் தானமாக வழங்கியுள்ளான் எனவும் தெரிவிக்கின்றன. அதிலே ஒரு செப்பேடு, “கொல்யானை பலஓட்டிக் கூடாமன்னர் குழாந்தவிர்த்த பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டியாதிராஜன்” என்று குறிப்பிடுகிறது. கொல்லும் திறனுடைய யானைப் படையோடு சென்று, தன்னுடன் நட்பில்லாத பகை மன்னர் கூட்டத்தை வென்றவன் பாண்டிய மன்னனான பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்று இதற்குப் பொருள்.

வேள்விக்குடி சாஸனம் என்றும் அழைக்கப்படும் அந்தச் செப்பேட்டில், “கொற்கைக்கிழான் நற்கொற்றன் கொண்ட வேள்வி முற்றுவிக்கக், கேள்வியந்தணாளர் முன்பு கேட்க வென்றெடுத்துரைத்து, வேள்விச்சாலை முன்புநின்று வேள்விகுடி யென்றப் பதியைச், சீரோடுதிருவளரச்செய்தார்வேந்தனப் பொழுதேநீரோடட்டிக் கொடுத்தமையான்” (வேள்விக்குடிச் சாஸனம், Epigraphia Indica Vol. 17, No. 16) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம், வேள்வி செய்தவர்களுக்கு நிலங்களை, கொற்கையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த முதுகுடுமிப் பெருவழுதி தானமாக வழங்கியுள்ளார் என்பதும் அதில் ஒரு நிலம்தான் வேள்விக்குடி என்று அழைக்கப்படும் இந்தப் பகுதி என்பதும் உறுதியாகிறது. நமது சடங்குகளில் தீயைப் போலவே வருண பகவானின் அம்சமாகப் போற்றப்படும் நீரும் முக்கியமானது, அந்த நீரைக் கொண்டுதான் தாரை வார்த்துக் கொடுத்தல் என்னும் சடங்கு நடைபெறுகிறது என்பதை நீரோடு அட்டிக் கொடுத்தான் என்ற பதம் விளங்க வைக்கிறது.

அரசர்களின் வீரத்தைப் புகழ்ந்து பாடும் புறநானூற்றில் பாண்டிய மன்னன் பெருவழுதியின் போர் வெற்றிகளைப் புகழ்ந்துபாடியிருக்கும் புலவர் நெட்டிமையார், அந்தப் பாண்டியனால் வெல்லப்பட்ட பகையரசர்களின் எண்ணிக்கை அதிகமா? இல்லையேல் பல்வேறு யாகங்களை நடத்திய பெருமையை நிலைநிறுத்துவதற்காக நிறுவிய யூபத்தூண்கள் நடப்பட்ட வேள்விச்சாலைகள் அதிகமா? என்று வியக்கிறார். புறநானூற்றில் 15-ஆவதாக அமைந்துள்ள அப்பாடல் கூறும் பெருவழுதியின் சிறப்புகளைக் காண்போம்:

**விளங்கு பொன் எறிந்த நலங்கிளர் பலகையொடு**
**நிழல்படு நெடுவேல் ஏந்தி ஒன்னார்**
**ஒண்படைக் கடுந்தார் முன்புதலைக் கொண்மார்,**
**நசைதர வந்தோர் நசைபிறக்கு ஒழிய,**
**வசைபட வாழ்ந்தோர் பலர்கொல்? புரையில்**
**நற் பனுவல் நால் வேதத்து**
**அருஞ் சீர்த்திப் பெருங் கண்ணுறை**
**நெய்ம்மலி ஆவுதி பொங்கப், பன்மாண்**
**வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி,**

யூபம் நட்ட வியன்களம் பலகொல்?

(புற. 15. 12-21)

"தங்கப் பூண்கள் பொறிக்கப்பட்ட கேடயங்களோடு, தரையிலே பெரிய நிழல் விழும்படியான நீண்ட வேல்களை ஏந்திய படைவீரர்களைத் திரட்டிக் கொண்டு, உன்னை எதிர்த்து வெல்ல வேண்டும் என்ற ஆசையோடு வந்த பகைவர்களின் படைகளை நீ சிதறடித்ததால், உன்னால் இகழ்ச்சிக்கு ஆளாகி வாழ்ந்த பகைவர்களின் எண்ணிக்கை அதிகமா? (இல்லையேல்), குற்றமில்லாத நன்மை தரும் நூலாகிய நான்கு வேதத்திலும் சொல்லப்பட்ட வகையில், எய்துவதற்கு அரிய மிகுந்த புகழை உடைய, சமித்துகள், பொரிகள் ஆகியவை நிரப்பப்பட்ட பெரிய (யாகக்)குழிகளில், மிகுந்த நெய் மென்மேலும் பொங்குமாறு, பல மாட்சிமைப்பட்ட குறையாத புகழை உடைய வேள்விகளைச் சிறப்பாக நடத்தி முடித்து, அதனைக் குறிக்கும் வகையில் நீ யூபத்தூண்களை (வேள்வித் தூண்களை) நட்டுவைத்த யாக சாலைகளின் எண்ணிக்கை அதிகமா?"என்று வியந்து கேட்கிறார் புலவர் நெட்டிமையார்.

வேத காலத்தில் அரசர்கள் வீரம் நிறைந்த போர்களை நடத்தி, கேளிக்கை இன்பங்களில் மூழ்கியிருந்ததோடு, அறத்தின் பாற்பட்ட வேள்விகளையும் நடத்தினார்கள் என்பதையும், குறிப்பிட்ட காலத்துக்குப் பின் நுகர்ச்சி யைத் தளர்த்தி அறச்செயல்களிலும், வேள்விகளிலும் மிகுந்த நாட்டம் செலுத்தினார்கள் என்பதையும் இதிகாசங்களிலும் புராணங்களிலும் வருகின்ற பல்வேறு மன்னர்களின் வரலாறுகளும், அவர்கள் பற்றிய கதைகளும் தெரிவிக்கின்றன. அதேபோன்ற வாழ்க்கையைத்தான் பழந்தமிழகத்து அரசர்களும் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு, திருமாவளவன் என்ற சிறப்புப் பெயர் பெற்ற கரிகால் சோழனின் மறைவின்போது கையறுநிலையில் புலவர் கருங்குழல் ஆதனார் பாடியிருக்கும் இரங்கல்பாவும் சான்று தருகிறது. புறநானூற்றில் 224-ஆவது பாடலாக இடம்பெற்றுள்ள அப் பாடலில் கரிகால் சோழன் செய்த வேள்விகள் குறித்துக் கூறப்படும் தகவலைக் காண்போம்:

**அருப்பம் பேணாது அமர்கடந் ததூஉம்;**
**துணைபுணர் ஆயமொடு தசும்புடன் தொலைச்சி,**
**இரும்பாண் ஒக்கல் கடும்பு புரந்ததூஉம்;**
**அறம்அறக் கண்ட நெறிமாண் அவையத்து,**
**முறைநற்கு அறியுநர் முன்னுறப் புகழ்ந்த**
**பவியற் கொள்கைத் துகளறு மகளிரொடு,**
**பருதி உருவின் பல்படைப் புரிசை,**
**எருவை நுகர்ச்சி, யூப நெடுந்தூண்,**
**வேத வேள்வித் தொழில்முடித் ததூஉம்;**
**அறிந்தோன் மன்ற அறிவுடை யாளன்**
**இறந்தோன் தானே; அளித்து இவ்வுலகம்**

(புற. 224. 1-11)

"பகைவர்களின் அரிய பெரிய அரண்மனைகளைப் பாதுகாவல்களை மீறி, போரின் மூலம் அழித்தவன். துணையாகக் கூடிய நண்பர் குழுவினரோடு சேர்ந்து மதுக்குடங்களை ஒருசேர நுகர்ந்து, பெரிய அளவில் சுற்றியிருந்த சுற்றத்தாரைப் பாதுகாத்தவன். அறத்தைத் தெளிவாக உணர்ந்த, ஒழுக்கத்தால் மாட்சிமைப்பட்ட அந்தணர்கள் கூடிய அவைக்களத்தின்கண், வேள்விச் சடங்குகளுக்கு உரிய முறைகளை நன்றாக அறிந்த ஆசிரியர்கள் (ஆசார்யர்கள்) அம்முறையை முன்னின்று காட்ட, பலராலும் புகழப்படுகின்ற தூய இயல்பை உடைய குற்றம் குறையற்ற குல மகளிரோடு, வட்டமான வடிவில் பல படையாகச் செய்யப்பட்ட மதிலால் சூழப்பட்ட வேள்விச்சாலையுள், வேள்விக்குப் பின் படைக்கப்படும் படையலைப் பருந்து உண்பதற்காக நாட்டப்பட்ட யூபம் (ஸ்தூபம்) எனப்படும் நீண்ட வேள்வித் தூணின் அருகே, வேதத்தால் சொல்லப்பட்ட வேள்விகளை நிறைவாகச் செய்து முடித்தவன். இவற்றுக்குரிய பயன்களை நன்கு அறிந்த அறிவினை உடையவன். அத்தகைய அறிவாளன்தான் (கரிகால் சோழன்தான்) தற்போது இறந்து கிடக்கிறான். அவனது மறைவு உலகத்தாரால் இரங்கத்தக்கது" என்று இதற்குப் பொருள்.

பழந்தமிழர் வாழ்வு வேதநெறியோடு ஒன்றியிருந்தது என்பதற்கு அடையாளமாக, பல்வேறு அரசர்கள் வேள்விகளைச் செய்து அவற்றின் சிறப்பைப் பறைச ாற்றும் வகையில் வேள்வித்தூண்களை நாட்டியுள்ளனர் என்பதற்கான சான்றை, சோழன் நலங்கிள்ளியைப் போற்றி, புலவர் கோவூர்க் கிழார் பாடியுள்ள புறநானூற்றின் 400-ஆவது பாடலும் நிலைநாட்டுகிறது.

**கேள்வி மலிந்த வேள்வித் தூணத்து,**
**இருங்கழி இழிதரும் ஆர்கலி வங்கம்**
**தேறுநீர்ப் பரப்பின் யாறுசீத்து உய்த்துத்,**
**துறைதொறும் பிணிக்கும் நல்லூர்,**
**உறைவின் யாணர், நாடுகிழ வோனே!**

(புற. 400. 19-23)

"கேள்வி எனப்படும் வேதம் நிறைந்த வேள்விச் சாலைகளில் நிற்கும் தூண்களையும், கரிய கழிமுகப் பகுதி வழியாக வந்திறங்கும் படகுகளை, தெளிந்த நீர்ப்பரப்புடைய ஆறுகளைச் செம்மைப்படுத்தி அவற்றிலே கொண்டு செலுத்தி, துறைதோறும் அவற்றைப் பிணித்து நிறுத்தும் படகுத்துறைகளோடு கூடிய நல்ல ஊர்களையும், தங்கி வாழ்வதற்கு இனிய வகையில் புதிய வருவாயையும் உடைய நாட்டுக்கு உரியவன் சோழன் நலங்கிள்ளி " என்பது இதன் பொருள். சோழனின் ஊர்கள், நல்ல வாணிகத்தையும் புதிய வருவாயையும் தருகின்ற நல்லூர்கள் என்பதோடு அங்கே வேள்வித் தூண்கள் மிகுந்திருந்தன என்ற தகவலையும் இந்தப் பாடல் தருகிறது.

வேந்தர்களின் வேள்வித் தீ மேலும் வளர்கிறது...

(தொடரும்)

# நமக்கான USER MANUAL



இரா. முகுந்த கிருஷ்ணன்,
Wellness Centre for Yoga & Holistic Yogic Healing.

மற்ற ஞானேந்திரியங்களான, கண், காது, நாசி, நாக்கு ஆகியவை அவற்றுக்கான வேலைகளை மட்டுமே செய்ய இயலும். கண்ணால் கண்ட காட்சி காதை பாதிக்காது. காதால் கேட்ட ஓசை கண்ணை பாதிக்காது. ருசி வாசனையை பாதிக்காது. வாசனை ருசியை பாதிக்காது. கண், காது, நாக்கு, மூக்கு ஆகியவை ஒன்றின் வேலையை மற்றொன்று செய்ய இயலாது. ஆனால், தோல் மட்டுமே தனது வேலையான தொடுவுணர்ச்சியோடு சேர்த்து மற்ற நான்கு புலன்களின் வேலைகளையும் செய்யும் திறன் படைத்தது. ஒருவன் கோவப்படுவதாக வைத்துக்கொள்வோம். அப்போது கண்கள் சிவக்கும், மூச்சு பதட்டமடைந்து சூடேறும். காதுகள் சூடாகும். தோல் மட்டும் தலையிலிருந்து கால்வரை உஷ்ணமாகி உடல் முழுவதும் தகிக்கும் அல்லது சூடேறும். பயம் ஏற்பட்டாலும் உடல் முழுவதும் சூடாகும் அல்லது வியர்த்து குளிரும். காய்ச்சல் ஏற்பட்டாலும் உடல் முழுவதும் உஷ்ணமாகும். பயம், காய்ச்சல், கோபம் ஆகிய உணர்ச்சிகளுக்கு எப்படி உடல் முழுவதும் சூடாகிறதோ அவ்வாறே காம உணர்ச்சி ஏற்பட்டாலும் உடல் முழுவதும் சூடாகும். நாம் யாருமே கோபத்தால் ஏற்படும் உடல் சூட்டை விரும்புவதில்லை. ஆனால் ஆசை அல்லது காமத்தால் ஏற்படும் உடல் சூடு என்பது கோபத்தின் சூட்டைப் போல் வெறுத்து ஒதுக்கக் கூடியதாக இல்லாமல் மனதுக்கு பிடித்ததாக இருப்பதால் மனிதன் இதைப் பற்றி சரியாக புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் உண்மை.

கோபத்தால் ஏற்படும் உடல்சூட்டை கோபதாபம் என்றும் காமத்தால் ஏற்படும் சூட்டை விரகதாபம் என்றும் சொல்வதுண்டு. தாபம் என்றால் உஷ்ணம் அல்லது சூடு என்று பொருள். கோபதாபம் காமத்தால் ஏற்படும் விரகதாபத்தைப் போல் ஆபத்தானது அல்ல. தேவையில்லாமல் கோபப்பட்டுவிட்டோமே என்று உணர்ந்தவுடன் சில நிமிடங்களில் அடங்கிவிடும். தவிர அது உடலில் மேலோட்டமானதாகத்தான் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆனால் காமம் மட்டும்தான் தோலிலிருந்து எலும்புவரை, கண், காது, நாக்கு, மூக்கு, மனம், அறிவு, மற்றும் உடலின் அனைத்து பகுதிகளிலும் ஊடுருவி மனிதனை ஆட்டிப்படைக்கின்றது. காமத்தால் ஏற்படுகின்ற இந்தவிதமான சூடு, ஆசையை அனுபவித்தாலும் அனுபவிக்காவிட்டாலும், உடலின் எலும்புக்குள் ஊடுருவி கெட்டியான நிலையிலிருக்கும் மஜ்ஜையை கரைத்து சிறுநீர் வழியாக ஒழுகி ஓட வைத்துவிடும்.

எலும்புக்குள் இருக்கின்ற மஜ்ஜையிலிருந்துதான் விந்துவும் ரத்தமும் உற்பத்தியாகின்றன. ஒருசொட்டு விந்து சேகரிக்கப்படுவதற்கு மூன்று வாரகால உணவு தேவைப்படுகிறது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட விந்து கெட்டியான கொழுப்புநீர் வடிவத்தில் எலும்பு மஜ்ஜைகளிலும், முதுகுத்தண்டிலும், தலையிலும், விதைப்பைகளிலும் நிறைந்திருக்கும். நமது உடலுக்குள்ளேயே ஒருவிதமான Coolant or Heat Resistantஆக செயல்பட்டு நோய்களால் தாக்கப்படாமல் காப்பது இந்த விந்துசக்திதான்.

உடலுக்கு பலம், சக்தி, ஆண்மை, பொலிவு, அழகு, வசீகரம், நினைவாற்றல், படிக்கின்ற விஷயங்களை நன்கு புரிந்துகொள்வது, பலகாலத்துக்கு முன்னர் படித்ததையோ, நடந்ததையோ மறக்காமல் மீண்டும் நினைவுபடுத்திக்கொள்வது, இக்கட்டான சூழ்நிலைகளில் பிரச்சினைகளை நிதானமாக கையாள்வது, தேர்வுகளிலோ, போட்டிகளிலோ பதட்டமின்றி பங்கேற்பது, பலர் முன்னிலையில் மேடையேறி பயமின்றி தைரியமாகவும், நிதானமாகும் பேசவந்த விஷயத்தை தெளிவாகவும், சிறந்த வார்த்தைகளாலும் பேசுவது, இவையெல்லாமல் சாத்தியமாவது இந்த விந்துசக்தி நன்கு சேமிக்கப்படுவதால்தான்.

இவற்றையெல்லாம் விட மிக மிக முக்கியமான அம்சம் என்னவென்றால் இந்த விந்துசக்திதான் நமக்கு பிறக்கப் போகின்ற குழந்தைகளின் உயிர்களை நம்முள்ளே சுமந்துகொண்டுள்ளது. இளைஞர்கள் ஒவ்வொருமுறை தங்களுடைய ஆண்மைச் சக்தியை பலவித தீய சுயஇன்பப் பழக்கங்களினால் நிலத்தில் சிந்தி வீணாக்கும்போதும் தனது வம்சத்தை தானே அழித்துக்கொள்கிறார்கள் என்பதுதான் மிகவும் வேதனையான உண்மை. ஆண்மக்கள் தங்களது விந்துசக்தி அல்லது ஜீவசக்தியை கட்டிக்காக்க வேண்டும் என்று நமது பெரியோர்கள் வலியுறுத்தியதன் காரணம் நாம் ஆரோக்கியமாகவும் பலசாலிகளாகவும் வாழவேண்டும் என்பதோடல்லாமல் ஆரோக்கியமான குழந்தைகளை பெற்றெடுக்க வேண்டும் என்பதால்தான். தோலும் தோலும் உரசும் விதமாக உடலோடு உடல் சேர்ந்து சூடேறும்போது உடலில் எல்லா இடங்களிலும் கெட்டியான நிலையில் இருக்கும் இந்த விந்துநீர் உருகி ஆண்குறி வழியாக வெளியேறிவிடும்.

(தொடரும்)

# "ஆப்" பை மட்டும் நம்பினால் ஆப்புதான்

வ ரங்கநாதன்,
ஆளுமைத் திறன் பயிற்றுநர்



ஜன பலம் மன பலம் என்கிறது பழமொழி. எவன் ஒருவனுக்கு ஆள் படை இருக்கிறதோ அவன் பலம் நிறைந்தவன். ஆள் படை என்றால் அடியாள் கூட்டமல்ல. நிறைய மனிதர்களோடு நல்ல மதிப்பான தொடர்பில் இருப்பது. விரிவான நட்பு வட்டத்தை வைத்திருப்பது

தனிமரம் தோப்பாகாது என்பதை நாம் அறிவோம் என்றாலும் 21ம் நூற்றாண்டில் சக மனிதர்களோடு சகஜமாகப் பேசுவது என்பதே அரிதாகி வருகிறது.

திருமண நிகழ்வுகளில், பொது நிகழ்ச்சிகளில் பொது இடங்களில் முன்பெல்லாம் மக்கள் அறிமுகமில்லாத நபர்களிடமும் இயல்பாகப் பேசி பழகி வந்தனர். இப்போதோ அவரவர் கையில் உள்ள மொபைலில் தலையைப் புதைத்து தனி உலகிலேயே இருப்பதைக் கவனிக்கிறோம். இதனால் மனிதர்களிடையே பரிவர்த்தனை இருக்கிறதே அன்றி பழகுதல் இல்லை.

அணியணியாய் அன்னியப் படையெடுப்பு வந்த போதும் பாரத சமுதாயத்தை வேற்று மதத்தவர்களால் முழுமையாக மாற்ற முடியாததற்கு நம் மக்கள் சமூகமாக இணைந்து வாழ்ந்து வந்ததுதான் காரணம். இதை உணர்ந்த ஆங்கிலேயன் நம்மை மிஷ நரித்தனத்தால் பிரித்தான். அதன் பாதிப்பு இன்னும் தொடர்கிறது. கூடவே மொபைல் வந்து நம்மை "இம்மொபைல்"; ஆக்கிவிட்டது கல்யாணப் பத்திரிக்கையை வாட்ஸப்பில் அனுப்பி தகவல் தெரிவிக்கிறோம். நேரில் சென்று அழைப்பது என்பதே குறைந்து வருகிறது.

வளர்ந்த நாடுகளில் சந்திக்கும் பெரிய சவால்களில் ஒன்று "முதுமையில் தனிமை". இந்த முதுமையில் தனிமையால் முதியோர்கள் பலப் பல வியாதிகளால் அவதிப்படுகிறார்கள், விரைவில் இறந்து விடுகிறார்கள் என்ற ஒரு ஆய்வு சொல்கிறது. அங்கே பேரன் பேத்திகள் சுற்றம் நட்பு என மகிழ்வோடு வாழும் முதியவர்கள் நீண்ட ஆயுள் பெற்றும் ஆரோக்யமாக இருப்பதாகவும் ஆய்வுகள் சொல்கின்றன.

பாரதத்திலோ "மூத்தோர் சொல் கேள்""பெரியவங்க சொன்னா பெருமாள் சொன்னா மாதிரி"ன்னு சொல்லிப் பழக்கி வந்தார்கள். பெரியவர்கள் காலில் விழுந்து ஆசி பெறுவது வழக்கமாக இருந்து வந்தது.

**"ஆப்" பை மட்டும் நம்பினால் ஆப்புதான்**

சக மனிதனைப் போல் "ஆப்" துணை நிற்காது. தகவல் தரும். அதன் பின் கிடைக்கும் சேவைகளுக்கு கட்டணம் செலுத்தியாக வேண்டும். அந்த சேவைகளைக் கூட மனிதர்கள் தான் செய்கிறார்கள். இயல்பாக பரஸ்பரம் செய்து வந்த பணிகள் சேவைகள் கூட பணத்துக்கு மட்டுமே கிடைக்கும் நிலைக்கு மேலை நாட்டு நாகரீகம் நம்மை தள்ளி விட்டது.

**உறவுகளே உத்தரவாதம் தரும்**

நல்லது கெட்டதுக்கு நமக்கு உதவியாக இருப்பது நாம் சம்பாதிக்கும் உறவுகளே ஆகும். ஆபத்து காலத்தில் இதை நன்கு உணர முடியும். எனவே நமது நட்பு வட்டத்தை விரிவாக்க மக்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள பழக்கிக்கணும்

**உங்கள் நட்பு பெருக-**

- ஏதேனும் சங்கத்தில் உறுப்பினர் ஆகலாம்
- பக்கத்தில் உள்ள கோயில் பக்தர்களுக்கு கைங்கர்யம் செய்யலாம்
- சமூக சேவை அமைப்புகளில் பங்கெடுக்கலாம்
- பஜனை வழிப்பாட்டுக் குழுக்களில் சேரலாம்

எத்தனைதான் தொழிலில் பிஸியாக இருந்தாலும் சகமனித உறவை வளர்க்க முயற்சி செய்வது ஆயுளுக்கும் நல்லது.

# ஆர்.எஸ்.எஸ். 100
# இந்த நாடு ஹிந்து நாடு (பகுதி 9)

இராம . வெங்கடாத்ரி

**வேற்றுமையில் ஒற்றுமை ஹிந்துதர்ம சாதனை**

நூற்றாண்டு விழா காணும் ஆர்.எஸ்.எஸ்.- ன் அடிப்படை சித்தாந்தம் இந்த நாடு ஒரு ஹிந்து ராஷ்ட்ரம் என்பதே. இமயம் முதல் குமரி வரை இந்த நாடு கலாச்சார அடிப்படையில், ஆன்மிக மரபுகளால் ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளது. பல வண்ண மணிகளைப் பிணைத்து இணைக்கும் நூல் போல ஹிந்துப் பண்பாட்டின் கூறுகள் பன்னெடுங்காலமாக இந்த கலாச்சார பாரதத்தை இணைத்து வருகின்றன. இந்த பகுதியில் நாகங்கள் எப்படி இந்த நாட்டை ஒருங்கிணைக்கின்றன என்று பார்ப்போம்.

**பாம்பாட்டிகளின் தேசமா?**

இந்த நாடு முழுவதும் பல இடங்கள் நாகங்களின் பெயர்களுடன் தொடர்பில் இருப்பதைப் பார்க்கலாம். உதாரணத்திற்கு - நாகபுரி (மகாராஷ்ட்ரா), அனந்த நாக் (காஷ்மீர்), நாகூர் (தமிழ் நாடு), நாகப்பட்டினம் (தமிழ் நாடு), நாகர்கோவில் (தமிழ் நாடு), நாகாலாந்து (வடகிழக்கு மாநிலம்), நாகேஸ்வரி (கர்னாடகா), நாகாபரணஹல்லி (கர்னாடகா), நாகமங்கலா (ஆந்திரா), நாகலாபுரம் (ஆந்திரா)... இப்படி நாகப்பாம்பின் பெயர் கொண்ட ஊர்கள் நாடு முழுவதும் எல்லா மாநிலங்களிலும் ஆயிரக்கணக்கில் விரவி இருப்பதைக் காணலாம். இடங்களின் பெயர்களில் மட்டுமல்லாமல் நாட்டின் ஒருமைப்படுத்தும் உணர்வுகளில் ஒன்றாக நாகங்கள் உள்ளன. இந்த தேசத்தை “பாம்பாட்டிகளின் தேசம்'' என்று வெள்ளையன் திரித்துக் கூறிய கிண்டல் செய்ததைத்தான் நாம் அறிந்திருக்கிறோமே தவிர இதில் உள்ள ஒருமைப்படுத்தும் உணர்வை மறந்து விட்டோம்.



**நாட்டை இணைக்கும் நாகங்கள்**

நாகங்களைக் குறித்த நம்பிக்கைகளும், நாகங்களைப் பற்றிய கதைகளும் பாரத நாடு முழுவதும் உள்ள எல்லா மொழி இலக்கியங்களிலும், வாய்மொழி மரபுகளிலும், சித்தரிக்கப்படும் எல்லா மொழி கதைககளிலும், வனவாசிகள் மத்தியிலும் கூட ஒருமித்து உள்ளதைக் காண முடிகிறது.

**பாரதப் பாரம்பரியத்தில் நாகம்**

நமது பாரம்பரியத்தில், நாகங்கள் வெறும் பாம்புகள் மட்டுமல்ல. அவை பாதாள லோகம் மற்றும் நாகலோகத்தில் வாழ்கின்ற தெய்வீக உயிரினங்கள்.

நாகங்கள் வனத்தின் தெய்வங்கள். விவசாயிகள் நல்ல விளைச்சல், போதுமான மழை, வறட்சி மற்றும் இயற்கை சீற்றங்களிலிருந்து பாதுகாப்பு, மற்றும் ஒட்டுமொத்த செழிப்பு ஆகியவற்றிற்காக நாகங்களை வழிபடுகின்றனர். பாம்புகளில் பல வகைகள் இருந்தாலும் Cobra எனப்படும் நல்ல பாம்பே பாரத நாடு முழுவதும் தெய்வமாக வழிபடப்படுகிறது. எந்தவொரு நாகத்தைக் கொல்வது அல்லது அதற்குத் தீங்கு விளைவிப்பது மிகக் கொடிய பாவங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. நாகங்களின் சீற்றம் தலைமுறை தலைமுறையாகத் தொடரும் என்று அஞ்சப்படுகிறது. புதையல்களைக் காக்கும் தெய்வம் நாகங்கள் என்று கருதப்படுகின்றன. கனவில் பாம்புகளைக் காண்பது, தோல் நோய்களால் பாதிக்கப்படுவது, நாள்பட்ட உடல்நலக்குறைவு, கடுமையான விபத்துகளைச் சந்திப்பது, திருமணத் தாமதம், குழந்தைப்பேறின்மை, கருச்சிதைவுகள் மற்றும் செல்வச் செழிப்பு, நல்வாழ்வு ஆகியவற்றின் குறைபாடு ஆகியவை ‘நாக-தோஷத்தின்’ அறிகுறிகளாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன.

மேலே சொன்ன நம்பிக்கைகள் அனைத்தும் நாடு முழுவதும், எல்லா மாநிலங்களிலும், ஒன்று போலவே உள்ளது.

**பாரத சிற்பக்கலையில் நாகங்கள்**

பாற்கடலில் (Kshirasagara) பள்ளி கொண்டிருக்கும் விஷ்ணுவிற்கு நிழல் தரும் ஆதிசேஷன் முதல், சிவபெருமானின் கழுத்தை அலங்கரிக்கும் வாசுகி பாம்பு வரை நாகங்கள் பாரதத்தின் தெய்வீகச் சிற்பக்கலையின் ஒரு பிரிக்க முடியாத அங்கமாக நாடு முழுவதும் இருக்கின்றன. கிபி 2-ஆம் நூற்றாண்டைச்

**காஷ்மீரின் நாட்டுப்புறக் கதைகளிலும் வரலாற்றிலும், நாகங்கள் மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. 'அனந்தநாக்' (Anantnag) என்ற இடத்தின் பெயர், "எண்ணற்ற நாகங்கள் வாழும் இருப்பிடம்" என்ற பொருளைத் தருகிறது.**

சார்ந்த நாக ஸ்தூபிகள் நாகார்ஜுனகொண்டா மற்றும் மதுரா ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் மாரியம்மனின் சிலைகளில், ஐந்து தலைப் பாம்பு அவருக்கு அரசக் குடையாக (சத்ரம்) அமைந்திருக்கிறது. புத்தரின் சிலைகளில் 'முசலிந்தா' எனும் நாகங்களின் அரசன் அவருக்குக் குடையாக அமைந்திருக்கிறார். 'மூலாதாரச் சக்கரத்தின்' அதிபதியாகிய விநாயகர் நாகாபரணத்துடன் காட்சி அளிக்கிறார். ஜைனர்களின் 23-வது தீர்த்தங்கரரான பார்சுவநாதருக்குப் பின்னால் ஐந்து தலைகளைக் கொண்ட 'தரனேந்திரன்' எனும் ஐந்து தலை நாகம் இருக்கும். யோகக் கலைகளின் மூலவராகவும் திகழும் பதஞ்சலி முனிவர், தனது சிலைகளில் பாதி நாகமாகவும் பாதி மனிதனாகவும் சித்தரிக்கப்படுகிறார். நாடு முழுவதும் உள்ள பல கோயில் சிற்பக்கலையின் ஒரு அங்கமாக நாககன்னிகள் இருக்கிறார்கள்

**பின்னிப்பிணைந்த நாகர் வழிபாடு**

பின்னிப்பிணைந்த நிலையில் உள்ள ஒரு ஜோடி பாம்புகளின் உருவம், நமது தெரு முனையில் உள்ள அரச மரப் பிள்ளையார் கோவிலில் இருந்து, எல்லா பாரத நாட்டுக் கோவில்களிலும் காணப்படும். இந்தப் பாம்பு ஜோடியானது சூரியன் மற்றும் சந்திரன் ஆகிய ஆற்றல்களையும்; ஆண்மை மற்றும் பெண்மை ஆகிய தத்துவங்களையும்; மனித உடலில் உள்ள 'இடை' மற்றும் 'பிங்கலை' ஆகிய நாடிகளையும் குறிக்கிறது.

**பாரத நாட்டில் பரவலான நாக வழிபாடு**

பாம்புகளை வழிபட்ட தொல்லியல் ஆதாரங்கள் சிந்து சமவெளி அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ளன.

காஷ்மீரின் நாட்டுப்புறக் கதைகளிலும் வரலாற்றிலும், நாகங்கள் மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. 'அனந்தநாக்' (Anantnag) என்ற இடத்தின் பெயர், 'எண்ணற்ற நாகங்கள் வாழும் இருப்பிடம்சு என்ற பொருளைத் தருகிறது. முஸ்லிமாக மாறிவிட்ட இன்றைய காஷ்மீர மக்களிடையேயும் நாகங்கள் மீதான மரியாதை உள்ளூர் மரபுகளின் வாயிலாக இன்றும் தொடர்ந்து வருகிறது.

கேரளத்திலும், மலபார் கடற்கரைப் பகுதிகளில் 'சர்ப்பக் காவு' (Sarpa Kavu) என்று அழைக்கப்படும் புனிதத் தோப்புகளில் நாகங்களைப் பேணிப் பாதுகாத்து வழிபடும் மரபு உள்ளது. கேரளத்தைச் சேர்ந்த நாயர் குலப் பெண்கள், 'நாக பட தாலி' அணிகின்றனர்.



துளு-நாடு (தட்சிண கன்னடா மற்றும் உடுப்பி) வீடுகளில் எந்தவொரு மங்கல நிகழ்வைத் தொடங்குவதற்கு முன்பும், முதல் பூசையானது நாக தேவதைக்குத்தான் செய்யப்படுகிறது. துளு-நாட்டைச் சேர்ந்த 'பண்ட்' (Bunt) சமூகத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் (Tharavad) ஒரு நாகக் காடு அமைந்திருக்கும். நாகங்களைப் வழிபடும் இம்முறை 'நாகாராதனை' என்று அழைக்கப்படுகிறது.

மேற்கு வங்கம் மற்றும் ஒடிசா மாநிலங்களில், நாக ராணியாக மானசா தேவியை வழிபடுகின்றனர். தமிழகத்தில் நாகமானது முருகனுடன் ஒன்றிணைத்து வழிபடப்படுகிறது.

தமிழகத்தின் நாகர்கோவில் போல் பாரத நாடு முழுவதும் பல கோவில்கள் நாகக் கடவுள்களுக்கென்றே அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாத ஆயில்ய நட்சத்திரத்திலும் நாடு முழுவதும் நாக தேவதை உள்ள கோவில்களில் சிறப்பு வழிபாடு நடந்து வருகிறது. நாட்டின் பல்வேறு மாநிலங்களில் சிராவண (ஆவணி) மாத பஞ்சமி திதி அன்று நாக பஞ்சமியாகக் கொண்டாடப்படுகிறது.

குஜராத், மகாராஷ்ட்ரா, தமிழ்நாடு, ஆந்திரா என எல்லா மாநிலங்களிலும், வனவாசிகள் வாழும் காட்டுப் பகுதிகளிலும் கூட பாம்புப் புற்றுக்குப் பெண்கள் பால் வார்த்து வணங்கும் வழக்கம் காலம் காலமாக உள்ளது.

மகாபாரதத்தின் ஆதிபர்வத்தில் 657 முதல் 2197 வரையிலான சுலோகங்கள் நாகங்களைப் பற்றி விவரிக்கிறது. நாகராஜன், நாகராணி, நாகேஸ்வரன், நாகேஸ்வரி போன்ற பெயர்களைக் கொண்டவர்களை நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இன்றும் காணலாம்.

வாட்ஸ் அப், இன்ஸ்டா, இன்டர்நெட் போன்ற நவீன கால தகவல் தொடர்புகள் இல்லாத காலம் தொட்டே ஒரே மாதிரியான நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் இந்த நாட்டை ஹிந்து ஆன்மீக மரபுகளால் இணைத்து வந்திருக்கின்றன. இந்த ஆன்மீக ஒருங்கிணைப்புப் பணியில் நாகங்களுக்கும் ஒரு தனி இடம் இருக்கிறது.

# இரண்டாம் பாரதியின் எழுச்சி கீதங்கள் –

- ஏழுமலை



**இரண்டாவது பாரதியார்**

“மகாகவி சுப்ரமணிய பாரதியாருக்குப் பிறகு, சுதந்திர பாரதத்திலே தமிழிலே அதிகமான தேசபக்திப் பாடல்களை எழுதிய தேசியக் கவி, இரண்டாவது பாரதி என்று அழைக்கப்படுபவர் இந்து முன்னணி நிறுவனர் வீரத்துறவி இராம.கோபாலன்ஜி அவர்கள்.

**இரவு கழிந்தது இரவி எழுந்தான்**

அவர் எழுதிய பாடல்களிலே இரவு கழிந்தது இரவி எழுந்தான் என்ற பாடல் வரிகளைப் பற்றி கடந்த சில தொடர்களில் பார்த்து வருகிறோம். நமது நாடு சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் அவர் எழுதியது இந்தப் பாடல். சுதந்திர பாரதம் எப்படி இருக்க வேண்டும் என்ற தனது அபிலாஷைகளை அந்தப் பாடலில் வரும் ஒவ்வொரு வார்த்தைகளிலும், வரிகளிலும் வெளிப்படுத்தியிருக்கிறார் இராம கோபாலன் ஜி. அந்தப் பாடலில் வரும்

**சங்கரன் மேதை வள்ளுவன் கவிதை**

என்ற பாடல் வரிகளைப் பற்றி இன்று விரிவாகக் காண்போம்.

சுதந்திரம் அடைந்த பாரதம் சங்கரரின் ஞானத்தாலும், வள்ளுவரின் வாழ்வியலாலும் நிறைந்திருக்க வேண்டும் என்று வீரத் துறவி விழைகிறார்.

**சங்கரர் பற்றி பாரதியார்**

கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும் என்ற பாடலில்

“**இம்பர் வாழ்வின் இறுதிகண்டு உண்மையின்
இயல்பு உணர்த்திய சங்கரன் ஏற்றமும்**”

என்ற வரிகளின் மூலம், “மானிட வாழ்வின் இறுதி உண்மையை உணர்த்திய மாமேதை சங்கரர்” என்று பாரதியார் குறிப்பிடுகிறார்.

**வேற்றுமையில் ஒற்றுமை சங்கரரின் சாதனை**

பாரத சமஸ்தானங்களை இணைத்த சர்தார் படேலுக்கு முன்னதாகவே பாரத நாடு முழுவதும் பயணித்து இந்த ஒருங்கிணைப்புப் பணியைச் செய்தவர் ஆதி சங்கரர். மத்தியப் பிரதேசத்தின் ஓம்காரேஷ்வரில் நிறுவப்பட்டுள்ள ஆதி சங்கரரின் சிலை, ‘ஒருமைப்பாட்டுச் சிலை’ (Statue of Oneness) என்று அழைக்கப்படுகிறது.

கேரளாவில் பிறந்த சங்கரர் மத்தியப் பிரதேசத்தில் நர்மதை நதிக்கரையில் அமைந்துள்ள ஓம்காரநாத் திருத்தலத்தில் இருந்த ஸ்ரீ கோவிந்தபாதரின் சீடர் ஆனார். அக்காலகட்டத்தில் பல்வேறு பிரிவுகளாகச் சி தறிக்கிடந்த இந்து சமூகத்திற்குள் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தினார். தனது 32-வது வயதிற்குள்ளாக முழு பாரதத்தையும் மூன்று முறை நடந்தே சுற்றி வந்தார். தேசத்தைக் கிழக்கிலிருந்து மேற்கு வரையிலும், வடக்கிலிருந்து தெற்கு வரையிலும், சனாதன தர்மத்தின் வாழ்க்கை நெறிகளால் ஒருங்கிணைத்தார். நாட்டின் நான்கு மூலைகளில் நான்கு மடங்களை நிறிவினார். ஒன்றுக்கொன்று முரண்பட்டுச் சண்டையிட்டுக்கொண்டிருந்த சமயப் பிரிவுகளை சைவம், வைணவம், காணபத்தியம், சௌரம், கௌமாரம், சாக்தம் ஆகிய ஆறு பிரிவுகளாகத் தொகுத்தார்; இதன் காரணமாகவே அவர் ‘சண்மத ஸ்தாபன ஆச்சாரியார்’ என்று அழைக்கப்படுகிறார்.

பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களைப் புதுப்பிக்கும் பணியை அவர் முன்னெடுத்தார். இந்தப் பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களுக்கும், 52 சக்தி பீடங்களுக்கும் தீர்த்தயாத்திரை மேற்கொள்ள வேண்டும் எனும் பேராவல், அனைத்து சனாதனிகளின் இதயங்களிலும் இன்றும் உயிர்ப்புடன் திகழும் ஒரு உன்னத விருப்பமாகத் தொடர்கிறது. பிரிக்கப்படாத பாரததேசம் முழுவதும் பரவியுள்ள இந்த ஜோதிர்லிங்கத் தலங்களும் சக்தி பீடங்களும், நமது கலாச்சார ஒற்றுமையின் அடையாளங்கள்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பிரம்மாண்டமான கும்பமேளாக்களின் போதும், ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் அர்த்த கும்பமேளாக்களின் போதும் பல்வேறு பிரிவுகள் மற்றும் மரபுகளைச் சார்ந்த துறவிகள், மடங்களின் தலைவர்கள் மற்றும் தசநாமி சன்னியாசிகளுக்கு இடையே உரையாடல்கள், விவாதங்கள் மற்றும் பரஸ்பர உடன்பாடுகளுக்கான வழிமுறைகளை அவர் ஏற்படுத்தினார். இத்தகைய அசாதாரணமான முயற்சிகளின் விளைவாகவே, ஒவ்வொரு கும்பமேளாவின் போதும், மிகப்பிரம்மாண்டமான பாரதத்தின் ஒரு குறுவடிவம் அங்கே வெளிப்படுகிறது. அங்கே, மொழி, சாதி, பிராந்தியம் மற்றும் பிரிவுகள் சார்ந்த அனைத்துப் புறத் தடைகளும், அரசியல் உள்நோக்கம் கொண்ட செயற்கைச் சுவர்களும் இயல்பாகவே தகர்ந்து விழுகின்றன. அதற்குப் பதிலாக, பரஸ்பர ஒற்றுமை, நல்லெண்ணம், ஒத்துழைப்பு மற்றும் அன்பு ஆகியவை உயிருடன் துடிக்கும் ஒரு காட்சியாகத் தெளிவாகப் புலப்படுகின்றன.

இப்படி இந்த நாட்டை சனாதன தர்மத்தின் வாழ்க்கை நெறிகளால் ஒருங்கிணைத்த சங்கரரின் அருள் கடாட்சத்தால் பாரதத்தில் ஒருமை நிலை வலிவு பெற வேண்டும் என்பது வீரத் துறவியின் அவா.

**வள்ளுவன் பற்றி பாரதியார்**

கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும் என்ற

பாடலில்
**"தெய்வ வள்ளுவன் வான் குறள் செய்ததும்"**
என்றும்,
செந்தமிழ் நாடென்னும் போதினிலே என்ற பாட்டில்
**"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"**

என்றும் வள்ளுவர் குறித்துப் பாடும் பாரதியார் தெய்வத்துக்கு நிகராகத் திருவள்ளுவரைக் குறிப்பிடுகிறார். வள்ளுவர் பிறந்ததால் வான் உயரத்துக்குப் புகழ் பெற்றது தமிழ்நாடு என பாரதி கூறி மேலும் அவரைச் சிறப்பிக்கிறார்.

**வள்ளுவம் காட்டும் வாழ்வியல்**

திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல். மானுட வாழ்வைச் செம்மைப்படுத்தும் எத்தனையோ நூல்கள் இருக்கையில் திருக்குறளுக்கு அப்படி என்ன தனிச் சிறப்பு? சங்ககாலத்தில்வாழ்ந்த மிகவும் புகழ் பெற்ற புலவர்களில்ஒருவரான "பாரதம்பாடிய பெருந்தேவனார்","திருவள்ளுவமாலை"என்ற நூலில் திருக்குறளைப் பற்றி கூறும்போது

**"எப்பொருளும்யாரும்இயல்பின்அறிவுறச்செப்பிய**
**வள்ளுவர்தாம்செப்பவரும்- முப்பாற்குப்**
**பாரதஞ்சீராம கதை மனுப்பண்டை மறை**
**நேர்வன மற்றில்லை நிகர்"**

என்ற பாட்டின் மூலம், "எந்த பொருளானாலும் யாரும்இயல்பாக அறிந்து தெளியும்படி திருவள்ளுவர்சொல்லால்வரைந்த திருக்குறளுக்கு இணையானவை பழமையான வேதங்கள், மனுஸ்மிருதி, மகாபாரதம், இராமாயணம்ஆகியவை ஆகும்"என்கிறார்.

**"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்**
**மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை**
**திருவா சகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவா சகம்என்று உணர்."**

என்ற பாடலில், "திருக்குறள் கூறும் உறுதிப் பொருள், வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களின் உபதேசப் பொருள், சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரின் தமிழாகிய தேவாரத்தின் உட்பொருள், முனியாகிய மணிவாசகரின் மொழிபாகிய திருக்கோவையார், திருவாசகம் ஆகியவற்றின் உணர்பொருள், திருமூலர் சொல்லாகிய திருமந்திரம் கருதும் மெய்ப்பொருள் எல்லாம் ஒன்றே என்று உணர்க", என்கிறாள் ஔவையார் (நல்வழி, 40).

நான்கு வேதங்கள், உபநிடதங்கள், மனு ஸ்மிருதி, ராமாயணம், மகாபாரதம், தேவாரம், திருக்கோவையார், திருவாசகம், திருமந்திரம் இப்படி இந்த நாட்டில் உள்ள அத்தனை அறநூல்களிலும் சொல்லப்பட்ட கருத்துக்களையும் சாராம்சமாகச் சுருக்கித் தரும் திருக்குறள் ஒன்றைக் கற்றாலே மேற் சொன்ன அத்தனை நூல்களையும் கற்றுத் தேர்ந்ததற்குச் சமம் என்பது அதன் தனிச் சிறப்பு.

**சங்கரரும் வள்ளுவரும்**

இந்த நாட்டை ஆன்மிக மரபுகளால் ஒருங்கிணைத்த சங்கரரின் மேதையும், எல்லா அற நூல்களின் முடிந்த பொருளாக உள்ள வள்ளுவரின் கவிதையும் பாரத தேசத்திற்கு வழிகாட்டியாகின்றன என்பதை இந்தப் பாட்டின் வரிகள் மூலமாக வீரத்துறவி இராம கோபாலன் அவர்கள் நிறுவுகிறார்.

(தொடரும்)

**இரவு கழிந்தது இரவி எழுந்தான்**
**கிருதயுகக் கதிர்தூவிப் புரவி யமர்ந்தான்**
**வையகமே இனி புதுமைகள் காண்பாய்**
**பாரத சூரியன் மகிமைகள் காண்பாய்**

**ஆயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்த**
**ஹிந்து மஹாசக்தி எழுந்தது சீறி**
**நல்லோரை வாழ்த்திட தீயோரை வீழ்த்திட**
**போர்க்கோலம் பூண்டு எழுந்தது காண்பாய்**

**வேதமுழக்கம் ஞான விளக்கம்**
**நரவுருவில் நடமாடிடும் தெய்வம்**
**கதையல்ல மிகையல்ல கற்பனையல்ல**
**கண்ணாரக் காண்பாய் நீ சற்றே பொறுப்பாய்.**

**ஹனுமனின் பக்தி சீதையின் கற்பு**
**ராமனின் அறவர சாட்சியும் காண்பாய்**
**வீமனும் பார்த்தனும் தருமனும் கண்ணனும்**
**மீண்டும் இந்நாட்டினில் உலவுதல் காண்பாய்**

**சங்கரன் மேதை வள்ளுவன் கவிதை**
**சிவராஜன் வாளுமே மின்னிக் கிளம்பும்**
**ரஜபுத்ரர் வீரம் சோழர் சீராட்சி**
**பூமண்டலம் வெல்ல திக் விஜயம் செய்யும்**

**விஞ்ஞான விந்தையும் மெய்ஞ்ஞான மேன்மையும்**
**இன்பங்கள் கோடி இணைந்த நற்காட்சியும்**
**வீட்டுக்குப் பூட்டுப் போடாத நல் மாட்சியும்**
**புதுமைகள் பலவும் நீ விரைவினில் காண்பாய்**

**பற்பல ஆண்டுகள் மோனத் தவத்தால்**
**கேசவர் மாதவர் புண்ய பலத்தால்**
**அந்நியன் தீட்டிய அஞ்சனம் நீங்கி**
**தன்னை உணர்ந்த நல்பாரதம் காண்பாய்**

இந்தப் பாடலின் இசை வடிவத்திற்கு இந்த QRCODE SCAN செய்யவும்.

# வெளிச்சம் படாத வேர்கள்

## நீலகண்ட பிரம்மச்சாரி

யா.சு. கண்ணன்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்திய விடுதலைப் போராட்டத்தில் மிதவாதிகள், தீவிரவாதிகள் என இரு பிரிவினர் இருந்தனர். ஆனால், இவர்களுக்கு அப்பாற்பட்டு "ஆயுதம் ஏந்திய புரட்சி" மூலம் மட்டுமே ஆங்கிலேயரை விரட்ட முடியும் என்று நம்பிய ஒரு சிறு குழு தமிழ்நாட்டில் உருவானது. அந்தப் புரட்சிகரக் குழுவின் மூளையாகவும், தலைவராகவும் செயல்பட்டவர் நீலகண்ட பிரம்மச்சாரி.

**இளமைக்காலம் மற்றும் அரசியல் எழுச்சி**

நீலகண்ட பிரம்மச்சாரி 1889 டிசம்பர் 4-ஆம் தேதி தஞ்சை மாவட்டம் சீர்காழியை அடுத்த எருக்கூர் கிராமத்தில் பிறந்தார். இவரது தந்தை சிவராமகிருஷ்ண ஐயர். பள்ளிப் பருவத்திலேயே பிரிட்டிஷ் ஆட்சியின் கொடுமைகளைக் கண்டு அதிருப்தி அடைந்த நீலகண்டன், 1905-இல் நடந்த வங்கப் பிரிவினைக்குப் பிறகு தீவிர அரசியலில் ஈர்க்கப்பட்டார்.

1907-ஆம் ஆண்டு பிபின் சந்திர பால் சென்னைக்கு வந்து ஆற்றிய உரைகள் நீலகண்டனின் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின. அப்போது அவருக்கு வயது வெறும் 18 தான். வ.உ.சி தம்பரம்பிள்ளை மற்றும் சுப்பிரமணிய சிவா போன்ற தலைவர்களுடன் அவருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

**ரகசிய இயக்கங்களின் தோற்றம்**

தென்னிந்தியாவில் புரட்சிகரக் கருத்துகளைப் பரப்ப ஒரு வலுவான அமைப்பு தேவை என்பதை உணர்ந்த நீலகண்டன், 1907-இல் 'அபினவ பாரத சங்கம்' என்ற ரகசிய அமைப்பைத் தொடங்கினார். பின்னர் 1910-இல் புதுச்சேரியில் தங்கியிருந்தபோது, அங்கிருந்த புரட்சியாளர்களுடன் இணைந்து 'பாரத மாதா சங்கம்' என்ற அமைப்பை நிறுவினார்.

இந்த அமைப்பின் நோக்கம் மிகவும் துணிச்சலானது: பிரிட்டிஷ் அதிகாரிகளைக் கொல்வதன் மூலம் மக்களிடையே பயத்தைப் போக்கி, ஆயுதம் ஏந்திய புரட்சிக்கு அவர்களைத் தயார் செய்வது. இதற்காக அவர் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து சுமார் 20,000 இளைஞர்களைத் திரட்டினார். அவர்கள் ரத்தத்தால் கையெழுத்திட்டு, பாரத மாதாவின் படத்தின் முன் நின்று ஆங்கிலேயரை ஒழிக்கச் சபதமேற்றனர்.

**ஆஷ் கொலை வழக்கும் சிறைவாசமும்**

நீலகண்ட பிரம்மச்சாரியின் சீடர்களில் ஒருவர்தான் வாஞ்சிநாதன். 1911-ஆம் ஆண்டு ஜூன் 17-இல் மணியாச்சி ரயில் நிலையத்தில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் ராபர்ட் ஆஷ் என்பவரை வாஞ்சிநாதன் சுட்டுக்கொன்றார். இந்தச் சம்பவம் பிரிட்டிஷ் அரசை உலுக்கியது.

இந்தக் கொலைக்குத் தூண்டுதலாக இருந்தவர் நீலகண்ட பிரம்மச்சாரி என்று குற்றம் சாட்டப்பட்டு, அவர் முதல் குற்றவாளியாகக் (Accused No. 1) கைது செய்யப்பட்டார். இதுவே புகழ்பெற்ற 'திருநெல்வேலி சதி வழக்கு' ஆகும்.

இதில் அவருக்கு ஏழு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. பெல்லாரி மற்றும் கண்ணனூர் சிறைகளில் அவர் அடைக்கப்பட்டார். சிறையிலும் அவர் சும்மா இருக்கவில்லை; கைதிகளிடையே தேசபக்தியைப் புகட்டினார்.

**பாரதியாருடனான ஆழமான நட்பு**

மகாகவி பாரதியாரின் மிக நெருங்கிய நண்பர்களில் நீலகண்டனும் ஒருவர். பாரதியார் புதுச்சேரியில் வசித்தபோது, அவருடன் இணைந்து 'இந்தியா' பத்திரிகையில் பணியாற்றினார். ஒருமுறை நீலகண்டன் பசியால் வாடியதைக் கண்டே பாரதியார், "தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்" என்ற ஆவேசப் பாடலைப் பாடினார். 1921-இல் பாரதியார் காலமானபோது, அவரது பூதவுடலைச் சுமந்து சென்ற நால்வரில் நீலகண்டனும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**பொதுவுடமை மற்றும் பிற்கால வாழ்க்கை**

சிறையிலிருந்து விடுதலையான பிறகு, நீலகண்டன் 1920-களில் புரட்சிக்கரக் கருத்துகளைப் பரப்பியதற்காக மீண்டும் கைது செய்யப்பட்டு ரங்கூன் (மியான்மர்) சிறையில் அடைக்கப்பட்டார். அவரது வாழ்நாளில் சுமார் 15 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறையிலேயே கழிந்தது.

ஒரு காலகட்டத்தில், அரசியல் போராட்டங்கள் சலிப்பை ஏற்படுத்தியதோ அல்லது மனமாற்றம் நிகழ்ந்ததோ தெரியவில்லை, அவர் ஆன்மீகப் பாதைக்குத் திரும்பினார். துறவறம் பூண்டு 'சத்குரு ஓம்காரானந்தா' என்ற பெயரை ஏற்றுக்கொண்டார்.

மைசூருக்கு அருகில் உள்ள நந்தி மலை அடிவாரத்தில் ஒரு ஆசிரமத்தை நிறுவி, எஞ்சிய காலத்தை அமைதியாகக் கழித்தார்.

நீலகண்ட பிரம்மச்சாரி ஒரு சிறந்த எழுத்தாளரும்கூட. 'சூர்யோதயம்' என்ற இதழை நடத்தி புரட்சிகரக் கருத்துகளைத் தமிழில் எளிய மக்களிடம் கொண்டு சேர்த்தார். 'மெய் ஒப்புதல்' போன்ற அவரது நூல்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.

தமிழகத்தின் முதல் புரட்சியாளராகக் கருதப்படும் இவர், 1978-ஆம் ஆண்டு மார்ச் 4-ஆம் தேதி இயற்கை எய்தினார். வறுமை, சிறைவாசம், சித்திரவதை என அனைத்தையும் நாட்டின் விடுதலைக்காகத் தாங்கிக்கொண்ட நீலகண்ட பிரம்மச்சாரியின் பெயர், தமிழ்நாட்டு விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு வீர அத்தியாயமாக என்றும் நிலைத்திருக்கும். நீலகண்ட பிரம்மச்சாரி ஒரு சிறந்த புரட்சியாளர் மட்டுமல்ல, மிகச்சிறந்த எழுத்தாளரும் பத்திரிகையாளரும் ஆவார். மக்களிடையே விடுதலை உணர்வைத் தூண்டுவதற்குப் பத்திரிகைகளே சிறந்த ஆயுதம் என்று அவர் நம்பினார். அவரது பத்திரிகைப் பணிகள் குறித்த விவரங்கள் இதோ:

1. **சூர்யோதயம் (Suryodayam):**

இது நீலகண்ட பிரம்மச்சாரி நடத்திய மிக முக்கியமான இதழாகும். 1909-ஆம் ஆண்டு புதுச்சேரியிலிருந்து இந்த வார இதழை அவர் தொடங்கினார்.

- நோக்கம்: பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகத் தீவிரமான புரட்சிக் கருத்துகளைப் பரப்புவதே இதன் முக்கிய நோக்கமாக இருந்தது.
- தடை: இதில் வெளியான கட்டுரைகள் மிகவும் ஆவேசமாக இருந்ததால், ஆங்கிலேய அரசு இந்தப் பத்திரிகையை இந்தியாவில் விநியோகிக்கத் தடை விதித்தது. இதனால் இது ரகசியமாகத் தமிழகத்திற்குள் கொண்டு வரப்பட்டது.

2. **இந்தியா (India) இதழுடன் தொடர்பு:**

மகாகவி பாரதியார் புதுச்சேரியில் 'இந்தியா' பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்தபோது, நீலகண்டன் அதில் முக்கியப் பங்காற்றினார்.

- பாரதியாருடன் இணைந்து கட்டுரைகள் எழுதுவது, செய்திகளைத் திரட்டுவது போன்ற பணிகளைச் செய்தார்.
- புரட்சிகர இயக்கமான 'பாரத மாதா சங்கத்தின்' கருத்துகளை 'இந்தியா' இதழ் மூலம் மறைமுகமாகப் பரப்பினார்.

3. **தர்மம் (Dharmam):**

புதுச்சேரியிலிருந்து வெளிவந்த 'தர்மம்' என்ற ஆன்மீக மற்றும் அரசியல் கலந்த இதழிலும் இவர் பங்களிப்பு செய்துள்ளார். வ.வே.சு. ஐயர் மற்றும் பாரதியாருடன் இணைந்து இதில் பணியாற்றினார்.

4. **சிறைக்கால எழுத்துக்கள்:**

சிறையில் இருந்தபோது அவர் சும்மா இருக்கவில்லை. தனது போராட்ட அனுபவங்களையும், நாட்டின் அவலநிலையைப் பற்றியும் தொடர்ந்து எழுதினார். இவரது எழுத்துக்கள் பிற்காலத்தில் 'மெய் ஒப்புதல்' (The Confessions) என்ற பெயரில் தொகுக்கப்பட்டன. இது ஒரு புரட்சியாளரின் மனநிலையை விளக்கும் மிக முக்கியமான ஆவணமாகக் கருதப்படுகிறது.

1920-களில் அவர் தன்னுடைய சித்தாந்தங்களைப் பரப்பவும் சில சிறிய இதழ்களை நடத்தினார். இதன் காரணமாகவே அவர் ரங்கூன் சிறையில் அடைக்கப்பட்டார்.

நீலகண்ட பிரம்மச்சாரியின் எழுத்து நடை மிகவும் எளிமையாகவும், அதே சமயம் படிப்பவர் நரம்புகளில் ரத்தம் கொதிக்கச் செய்யும் அளவிற்கும் வீரியமாக இருந்தது

நீலகண்ட பிரம்மச்சாரி பற்றிய சில கூடுதல் மற்றும் சுவாரசியமான தகவல்கள் இதோ:

- புரட்சிகரப் பயிற்சி: நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் இந்தியத் தேசிய ராணுவத்தை உருவாக்குவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே, தென்னிந்தியாவில் சுமார் 6,000 இளைஞர்களுக்குத் துப்பாக்கி சுடும் பயிற்சி அளித்தவர் நீலகண்ட பிரம்மச்சாரி.
- பெயர்க் காரணம்: சாதி அடையாளங்களைத் துறக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தனது பெயருடன் 'பிரம்மச்சாரி' என்ற சொல்லை இணைத்துக்கொண்டார். மேலும், தமிழகத்தில் முதன்முதலில் குடுமியை நீக்கி 'கிராப்' (Crop) செய்து கொண்ட இந்து இவராகத்தான் இருப்பார் எனக் கூறப்படுகிறது.
- பயங்கரமான சிறைவாசம்: ஆஷ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டபோது, பிரிட்டிஷ் அரசு இவரைக் கண்டு எவ்வளவு அஞ்சியது என்றால், கோவை சிறையிலிருந்த 21 அறைகளையும் காலி செய்துவிட்டு, இவரை மட்டும் ஒரு நடு அறையில் அடைத்து வைத்திருந்தனர். 1914-இல் சிறையிலிருந்து தப்பிச் செல்ல முயன்று பிடிபட்டதால், இவருக்குக் கூடுதல் தண்டனை வழங்கப்பட்டது.
- இரத்தப் பிரமாணம்: இவர் நிறுவிய 'பாரத மாதா சங்கத்தில்' உறுப்பினராகச் சேருபவர்கள், தங்கள் விரலை அறுத்து இரத்தத்தால் கையெழுத்திட்டு, "வெள்ளைக்காரர்களைக் கொல்லுவோம், சங்க ரகசியங்களை வெளியே சொல்ல மாட்டோம்" என்று பயங்கரமான சத்தியம் செய்ய வேண்டும்.

காந்தியுடனான சந்திப்பு: 1936-இல் நந்தி மலையடிவாரத்தில் இவர் தங்கியிருந்தபோது, மகாத்மா காந்தி இவரைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

- எழுத்துப் பணிகள்: இவர் 'சூர்யோதயம்' இதழைத் தவிர, 'இந்தியா' இதழில் பாரதியாருடன் இணைந்து உதவி ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இவர் எழுதிய 'மெய் ஒப்புதல்' (Confessions) என்ற நூல் அவரது போராட்ட வாழ்வின் முக்கிய ஆவணமாகும்.

மஹான்களின் தரிசனம்

# தர்மஸம்ஸ்தாபகர் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர்

- நிதீஸ்வரன்

பார் போற்றும் பாரத தேசம் தர்ம பூமி கர்ம பூமி. வேத நெறியும், விதிகளும், ஸநாதன தர்மமும் எக்காலத்தும் மங்காது தழைத்தோங்க, காலந்தோறும் ஈச்வர ஸங்கல்பத்தால் பல மஹான்கள் அவதரித்து லோகக்ஷேமத்திற்காகப் பாடுபட்டுள்ளனர். அத்தகைய மஹான்களின் வரிசையில், 16-ஆம் நூற்றாண்டில் சோழ வளநாட்டின் ஆன்மீகப் பெருமையை அகிலம் முழுதும் பரவச் செய்தவர், ராஜகுருவாகவும் மஹா மந்திரியாகவும் விளங்கிய மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் ஆவார். வித்யாரண்ய ஸ்வாமிகள் எவ்வாறு விஜயநகர சாம்ராஜ்யத்தை வேத மார்க்கத்தில் நிலைநிறுத்தினாரோ, அதேபோன்று தஞ்சை நாயக்கர் ஸாம்ராஜ்யத்தை தர்மத்தின் பாதையில் செலுத்திய பெருமை இவரையே சாரும்.

ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் கர்நாடக ஸ்மார்த்த அந்தணர் குலத்தில், வஸிஷ்ட முனிவரின் வழிவந்த 'வாஸிஷ்ட கோத்ரத்திலும்', 'ஆச்வலாயன ஸூத்ரத்திலும்' அவதரித்த மாபெரும் குரு. காயத்ரீ மஹா மந்த்ர உபாஸனையால், காயத்ரி தேவியின் ப்ரத்யக்ஷ தரிசனத்தைப் பெற்ற தபஸ்வி அவர். "அத்வைத வித்யாசார்யராகவும்," ஆறு சாஸ்திரங்களிலும் கரைகண்ட "ஷட் தர்சன வல்லபராகவும்" அவர் திகழ்ந்தார். இவருடைய தர்ம பத்னியின் பெயர் நாகமாம்பா. இவருக்கு இரு குமாரர்கள். யஜ்ஞ நாராயண தீக்ஷிதர் மற்றும் வேங்கடமகி.

தஞ்சையை ஆண்ட செவ்வப்ப நாயக்கர், அச்சுதப்ப நாயக்கர், ரகுநாத நாயக்கர் ஆகிய மூன்று தலைமுறை மன்னர்களுக்கும் இவர் குலகுருவாகவும், அமாத்யராகவும் (அமைச்சராக) இருந்து தர்ம ராஜ்யத்தை நடத்தினார்.மேலும் அச்சுதப்ப மஹாராஜாவின் புத்ரனான ரகுனாத மஹாராஜாவின் காலத்தில் இவருடைய பெருமையைப் பற்றி சொல்லும் போது ஒரு ஸ்லோகம் சொல்வது வழக்கம்.

**த்ரினாமாத்ய நாமானௌ மஹீக்ஷித் தீக்ஷிதாவுபௌ.**
**ஸஸ்த்ரே ஸாஸ்த்ரே ச குஸலௌ ஆஹவேஷு ஹவேஷு ச.**

"அச்சுத, அனந்த, கோவிந்த" என்னும் நாமாத்ரய மந்திரத்தின் முதலும் (அச்சுத) முடிவுமான (கோவிந்த) திருநாமங்களைக் கொண்டவர்கள் முறையே அரச னான அச்சுதப்ப நாயக்கரும், மந்திரியான கோவிந்த தீக்ஷிதரும் ஆவர். இவர்கள் இருவருள் அரச னானவன் ஆயுதங்களை (சஸ்த்ரம்) கையாள்வதிலும், போர்க்களங்களிலும் (ஆஹவம்) வல்லவன்; மந்திரியான தீக்ஷிதரோ வேத சாஸ்திரங்களிலும், வேள்விகளை (ஹவம்) செய்வதிலும் கரை கண்டவர். ஜலப்ரளய காலத்தில் ஸ்ருஷ்டியின் பீஜங்கள் அடங்கிய அம்ருத கும்பம் தங்கிய புண்ய க்ஷேத்ரம் குடந்தை எனப்படும் கும்பகோணம். சிவபிரானின் பாணத்தால் சிதைந்த குடமூக்கிலிருந்து பெருகிய அம்ருதமே மஹாமகத் தீர்த்தம். இத்தகைய அதீத மாஹாத்ம்யம் பொருந்திய மஹாமகக் குளத்தை ராஜா இவருக்கு அளித்த துலாபார ஸ்வர்ணத்தைக் கொண்டு சீரமைத்து, ஈச்வரனுக்குச் செய்யப்படும் ஷோடச (16) உபசாரங்களைக் குறிக்கும் வண்ணம், குளத்தைச் சுற்றி 16 சிவலிங்க மண்டபங்களை (ஷோடச லிங்கங்கள்) ஆகம விதிகளின்படி பிரதிஷ்டை செய்தார் கோவிந்த தீக்ஷிதர். இன்று அங்குள்ள ப்ரஹ்மதீர்தேஸ்வர மண்டபத்தில் இந்த துலாபார காட்சியைக் காணலாம்.

**வேத ஸம்ரக்ஷணமும் தர்ம அனுஷ்டானங்களும்**

அத்வைத ஸாஸ்த்ரத்தில் நிபுணரான இவர் கர்மானுஷ்டானங்களை விடாமல் அனுஷ்டானம் செய்து வந்தார். இவர் ஸர்வதோமுகம் போன்ற பெரிய யாகங்களைச்செய்துள்ளார். இன்றும் கும்பகோணத்தில்



யாகஸாலைத் தெரு என்று குறிக்கப்படுகிறது. மேலும் யாகம் செய்த இடத்தில் ஆசந்த்ர தாரகம் ச்ருதியைப் பாதுகாக்கும் பொருட்டு "ராஜா வேத காவ்ய பாடசாலை"யை அமைத்து மாண்யங்களை கொடுத்து வேத அபிவ்ருத்திக்கு வழி செய்தார். அதே போல் கோவில் திருப்பணிகளை நிறைய செய்துள்ளார். திருவையாறு, வெண்ணாற்றங்கரை, திருவலங்சுழி, கும்பகோணம் திருவிடைமருதூர் மாயவரம் முதலான இடங்களில் நதிக்கரைகளில் அமைந்துள்ள புஷ்ய மண்டபங்கள் இவரது திருப்பணியே. திருவிடைமருதூர் மஹாலிங்க ஸ்வாமிக்கு புஷ்யோத்ஸவ வெள்ளி ரதமும், வெள்ளி ரிஷப வாகனமும் இவருடைய ஒப்பற்ற சிவபக்திக்குச் சான்றுகளாகும். மேலும் கோவிந்தகுடி கோவிந்தபுரம் முதலான ஊர்களில் நந்தவனம் அமைத்து ஸ்வாமிக்கு தினமும் புஷ்ப கைங்கர்யம் நடைபெறச் செய்தார். அதனால் அவர் பெயரிலேயே அந்த ஊர்கள் விளங்குகின்றன. மேலும் இவரை எல்லோரும் ஐயன் என்றே அழைப்பார்கள். அதன் சான்றாகவே இன்னும் ஐயன் தெரு ஐயன்பேட்டை ஐயன்குளம் முதலானவைகள் இவர் பெயரிலேயே வழங்கப்படுகின்றன.

**ஈச்வர கடாக்ஷமும் வைராக்யமும்**

மஹான்களின் வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு சம்பவமும் உலகத்தாருக்கு ஒரு பாடமாகும். ஒருநாள் தீக்ஷிதர் வைச்வதேவம் செய்துகொண்டிருக்கும் வேளையில், யமதர்மனின் கிங்கரன் அவர் முன் தோன்றி, "தர்மதேவனின் கணக்குப்படி தாங்கள் 'நந்தவனம் அமைத்து புஷ்ப கைங்கர்யம் செய்யும் தர்மத்தை' மட்டும் இன்னும் செய்யவில்லைசு என்று கூறினான். மேலும், கோபுரத் திருப்பணியில் ஈடுபட்டிருக்கும் தலைமைச் சிற்பியின் உயிர் விதியின்படி அன்று மாலை 4 மணிக்கு பிரியப் போகிறது என்றும் கூறினான்.

சிற்பியைக் காப்பாற்ற தீக்ஷிதர் அவனை




ஒரு அறையில் பூட்டி வைத்தபோதிலும், ஈச்வர ஸங்கல்பப்படியும் ப்ராரப்த கர்மாவின்படியும் சிற்பி சரியாக 4 மணிக்கு கோபுரத்திலிருந்து தவறி விழுந்து மரணமடைந்தான். கர்ம வினையின் மாபெரும் வலிமையையும், தெய்வச் செயலையும் உணர்ந்த தீக்ஷிதர், மறுகணமே தன்னுடைய சகல அரண்மனைகளையும் ஈச்வரனுக்குப் புஷ்ப கைங்கர்யம் செய்யும் நந்தவனங்களாக மாற்றிவிட்டு, மஹா வைராக்ய சீலராக ஒரு சிறு குடிசையில் வாழத் தலைப்பட்டார். இதுவே இன்றும் கும்பகோணத்தில் 'அரண்மனைத் தோட்டம்' என்று அழைக்கப்படுகிறது. நாதப் ப்ரம்மத்தின் உபாஸகராக விளங்கிய தீக்ஷிதர் 'ஸங்கீத ஸுதாநிதி' என்ற லக்ஷண நூலை வடமொழியில் இயற்றினார். இவருடைய தவப்புதல்வரான வேங்கடமகி என்ற வேங்கடேசு வர தீக்ஷிதரே, இன்று நாம் போற்றும் கர்நாடக சங்கீதத்தின் 72 மேளகர்த்தா ராகங்களை 'சதுர்தண்டி பிரகாசிகை' என்ற நூல் மூலம் வகுத்தளித்தவர். "சங்கரமுனிமத பிரதிஷ்டாபன கோவித கோவிந்தமகி" என்று வேங்கடமகி தன் தந்தையைத் தன் நூல்களில் நெக்குருகிப் போற்றுகிறார்.

**அத்வைதவித்யாவிபவாவலம்பான்**
**கோவிந்தயஜ்வேந்த்ரகுரூனுபாஸே |**
**நிர்மத்ய ஷட்டர்தசனனீரதீன் யே**
**தியைவ ஸாரான் தததே புதேப்ய: ||**

என்று இவருடைய பெருமை ஸாஹித்யரத்னாகரம் என்ற நூலில் வழங்கப்படுகிறது. இதன் பொருள் அத்வைத வித்தையின் இருப்பிடமான கோவிந்த தீக்ஷிதரை உபாசிக்கிறேன். அவரே ஆறு சாஸ்திரங்கள் என்னும் கடலைத் தனது புத்தியால் கடைந்து, அறிஞர்களுக்கு ஞானம் என்னும் அமிர்தத்தை அளிப்பவர்.

இவருடைய தூய்மையான வம்சத்தில் வந்தவரே, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 64-வது பீடாதிபதியாக விளங்கிய ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதீ சுவாமிகள். இவரது பிருந்தாவனம் இன்றும் கும்பகோணம் ஸ்ரீ மடத்தில் 'வடகோடி பிருந்தாவனம்' என்று வழிபடப்பட்டு வருகிறது.

அதிகாரம், செல்வம், ஞானம் என அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்றாலும், அணுவளவும் அகங்காரமின்றி, சிவபக்தியிலும் வேத தர்மத்திலும் தன்னை முழுமையாகக் கரைத்துக் கொண்டவர் அய்யன் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர். பட்டீஸ்வரம் மற்றும் ஆதிகும்பேச்வரர் ஆலயங்களில் இன்றும் அம்பாள் சந்நிதியில் தன் தர்மபத்தினி நாகமாம்பிகையுடன் கைகூப்பி ஈச்வரனை ஆராதிக்கும் நிலையில் அவர் நமக்குக் காட்சியளிக்கிறார். இத்தகைய தர்மஸம்ஸ்தாபகர்களை ஸ்மரணம் செய்வதே நமக்கு மாபெரும் சித்த சுத்தியையும் ஈச்வர கடாக்ஷத்தையும் பெற்றுத் தரும்.



# கொன்றை வேந்தன் கதைகள்

## எழில் வாங்கிய மதிப்பெண்

**கலாவதி**

திங்கள்கிழமை பள்ளி நேரம் தொடங்கியதும், "இந்த வாரம் சனிக்கிழமை நம்ம பள்ளியில சிறப்பு தேர்வு நடக்குது. எல்லாரும் கலந்துக்கணும். நல்ல மதிப்பெண் பெறும் 10 மாணவர்களுக்கு அடுத்த ரெண்டு வருஷத்துக்கு மாசா மாசம் உதவித்தொகை கிடைக்கும். அது மட்டுமில்லாம முதல் மதிப்பெண் வாங்கறவங்களுக்கு பள்ளி சார்பில் பாராட்டு விழாவும் நடக்கும்" என்று வகுப்பாசிரியை அறிவித்தார்.

அன்று இடைவேளையில் அதுதான் பேச்சு. "நம்ம வகுப்புல எப்பவும் அறிவழகன் தான் முதலிடம். இப்பவும் அவன்தான் பாராட்டு வாங்குவான் பாரேன்" என்றான் சரவணன். "ஆமாம்டா. தான் மட்டும் படிச்சா போதாதுன்னு நமக்கும் நிறைய கத்துக் கொடுப்பான்" என்று சர்மிளா தனது பங்குக்கு சொன்னாள். அறிவழகனைச் சுற்றி வகுப்பில் எப்போதுமே கூட்டம் இருக்கும்.

இதையெல்லாம் பார்த்து எழிலுக்கு பொறாமையாக இருந்தது. எழிலும் நன்றாக படிக்கும் பையனே. அவனுக்கு வீட்டில் எல்லா வசதிகளும் செய்துக் கொடுத்திருந்தார்கள். எவ்வளவு படித்தாலும் எழிலனுக்கு இரண்டாம் இடமே கிடைத்தது. முதலிடம் எப்போதும் அறிவழகனுக்குத்தான்.

இந்த முறை எப்படியாவது முதலிடம் வர நினைத்தான். அதனால், ஒரு திட்டம் தீட்டினான். பள்ளிக்கு சிறிது தூரத்தில் இருக்கும் கோயிலில் தினமும் மாணவர்கள் கும்பிட்டு விட்டு வருவார்கள்

தேர்வு நாளன்று வழக்கம் போல அறிவழகன் தனது மிதிவண்டியை நிறுத்திவிட்டு கோயிலுக்குள் சென்றிருந்தான். அதே நேரம், எழிலும் தனது மிதிவண்டியை நிறுத்திவிட்டு உள்ளே வந்தான். வெளியே வந்ததும் அறிவழகன் மிதிவண்டியை எடுத்தான். ஆனால், காற்று இறங்கியிருந்தது.

எழில் வெளியே வந்ததும், "சுடேய்... என் சைக்கிள் பஞ்சராயிடுச்சு போல" என்று அறிவழகன் சோகத்துடன் சொன்னான். உள்ளுக்குள் மகிழ்ந்த எழில், முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டு "பரவாயில்ல டா. பக்கத்து தெரு அண்ணா கடைக்கு போய் பஞ்சர் ஒட்டிட்டு வா" என்று வேகமாக புறப்பட்டான்,


எழில் வந்தபோது தேர்வு தொடங்கி கால் மணிநேரம் ஆகியிருந்தது. அவன் மிதிவண்டி பஞ்சரானதை எடுத்துச் சொல்லியும், முதலில் அவனை உள்ளே விடவில்லை. பிறகு தலைமை ஆசிரியர் தலையிட்டு, அவனை உள்ளே அனுப்ப வேண்டியிருந்தது. அதற்குள் 40 நிமிடங்களாகிவிட்டன.

"எப்படியும் இந்த முறை கோப்பை நமக்குத்தான்" என்று மகிழ்ச்சியில் எழில் வேக வேகமாக எழுதிவிட்டு, முப்பது நிமிடங்களுக்கு வெளியே வந்தான்.

அடுத்த நாள்... வகுப்பாசிரியர் வந்ததும், "தேர்வு முடிவுகள் வந்துருக்கு. வழக்கம் போல இந்த தடவையும் அறிவுக்குத்தான் முதல் மதிப்பெண். அவன் தாமதமா வந்ததால, இந்த தேர்வுல சர்மிளாவும் முதலிடம் வாங்கியிருக்கா. ரெண்டு பேருக்கும் பாராட்டுகள்" என்று சொல்ல வகுப்பறை கரகோஷத்தால் அதிர்ந்தது. "அப்போ நானு?" என்று அதிர்ச்சியுடன் பார்த்தான் எழில்.

அடுத்து ஒவ்வொரு மாணவராக ஆசிரியர் பெயர் சொல்லி அழைத்து, விடைத்தாளை நீட்டினார். எழில் முறை வந்தபோது. "என்ன இது? ரெண்டாவது இடத்துல இருந்து அஞ்சாவது இடத்துக்கு போயிட்டே. இப்படி இருந்தா கஷ்டம்" என்றார் கடுமையுடன்.

இப்போதுதான் எழிலின் மண்டையில் உரைத்தது. அறிவழகன் மேல் பொறாமையுடனே இருந்ததால், சரியாக படிக்கவில்லை என்று. தனது செயலை நினைத்து வெட்கி தலை குனிந்தான்.




ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு

# விழாக்களும் விரதங்களும்

-செல்வம்

***தமிழ்ப் புத்தாண்டு, பராபவ வருடம், சித்திரை மாதம் 1-ம் தேதி (14.04.2026) செவ்வாய்க் கிழமை அன்று பிறக்கிறது***

தமிழ் பஞ்சாங்கத்தின் அடிப்படையில் மொத்தம் 60 ஆண்டுகள் உள்ளன. இதில் ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒவ்வொரு பெயர் உள்ளது. நடப்பு ஆண்டின் பெயர் விசுவாவசு என்பது குறிப்பிடத்தக்கது. வரும் தமிழ் புத்தாண்டின் பெயர் பராபவ என்று அழைக்கப்படுகிறது. 60 ஆண்டுகளில் இந்த ஆண்டு 40வது ஆண்டாகும். இது வசந்த காலமாகச் சொல்லப்படுகிறது .

தமிழகத்தில் நெடுநல்வாடை, அகத்தியர் பன்னீராயிரம், புட்பவிதி, மலைபடுகடாம், பழமொழி நானூறு போன்ற தமிழ் நூல்கள் இளவேனில் தொடக்க காலமான சித்திரையே அந்த ஆண்டின் தலைநாளாக மலர்ந்தது என்று சொல்கின்றன .

புத்தாண்டு அன்று அதிகாலையில் வேப்பம்பூ, மாங்காய், பலாப்பழம், வாழைப்பழம், பொன், நகை, கண்ணாடி போன்ற மங்கலப் பொருட்களைக் கண்டு அன்றைய நாளைத் தொடங்குவது வழக்கம்.

தமிழ் புத்தாண்டு என்பது ஒரு புதிய நாளின் தொடக்கம் மட்டுமல்ல; அது மனித வாழ்வின் ஆழமான தத்துவத்தையும், பிரபஞ்சத்தின் ஒழுங்கையும் பிரதிபலிக்கும் ஒரு புனிதமான தருணமாகும். இதனை சில சாஸ்திரங்களில் "மஹா சங்கராந்தி" என்றும் குறிப்பிடுகின்றனர்.

இந்த நாள், காலத்தின் சுழற்சியில் ஒரு புதிய அத்தியாயம் திறக்கும் நேரமாகக் கருதப்படுகிறது. இயற்கை மாற்றம், ஆன்மீகம் , மனித வாழ்வின் புதுப்பிப்பு - இவை அனைத்தும் தமிழ் புத்தாண்டின் அடிப்படை உண்மைகளாகும்.

சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் "காலம்" ஒரு சாதாரண அளவுகோலாக இல்லை; அது ஒரு தெய்வீக சக்தி. விஷ்ணு புராணத்தில் கூறப்படுவது:

**"कालो हि दुरतिक्रमः"**

*(காலத்தை யாராலும் மீற முடியாது)*

இந்தக் கருத்தை மேலும் ஆழமாக விளக்கும் ஒரு முக்கியமான ச்லோகம் ஆதித்ய ஹ்ருதயம் நூலில் காணப்படுகிறது:

**"कालः कालकर्ता च कृतान्तः सर्वनाशनः
प्रभवः प्रलयः स्थानं निधानं बीजमव्ययम्"**

காலமே அவன்; காலத்தை உருவாக்குபவனும் அவனே. அவன் எல்லாவற்றுக்கும் முடிவையும் தருபவன்.

பிறப்பு, நிலை, அழிவு - அனைத்திற்கும் காரணமானவன்.

அவன் அழிவில்லாத மூல விதை.

இந்த ஸ்லோகம் சூரியனை "காலம்" என்ற அடையாளத்தில் காட்டுகிறது. இதன் மூலம் நாம் உணருவது - தமிழ் புத்தாண்டு என்பது காலத்தின் தெய்வீக ஓட்டத்தை உணரும் ஒரு நாள்.

சூரியன் இல்லாமல் உயிர் இல்லை. அதனால் தான் வேதங்களும் புராணங்களும் சூரியனை உயர்ந்த தெய்வமாகக் கருதுகின்றன. ஒரு புகழ்பெற்ற ஸ்லோகம்:

**'आदित्याय नमस्तुभ्यं प्रभाकर नमोऽस्तु ते
त्वं हि सर्वस्य लोकस्य साक्षी भवसि नित्यशः"**

சூரியன் உலகின் சாட்சியாக இருக்கிறான். அவன் அனைத்தையும் பார்க்கிறான்; அனைத்தையும் நடத்துகிறான். தமிழ் புத்தாண்டு நாளில் சூரியனை வணங்குவது, இந்த உண்மையை ஏற்றுக் கொள்வதையே குறிக்கிறது.

தமிழ் புத்தாண்டின் ஒரு முக்கிய அம்சம் "சுமாங்காய் பச்சடி". இது வெறும் உணவு அல்ல; அது ஒரு தத்துவம்.

***இனிப்பு - மகிழ்ச்சி, புளிப்பு - ஆச்சரியம்***
***கசப்பு - துக்கம், காரம் - கோபம்***
***உப்பு - சமநிலை***

இவை அனைத்தும் வாழ்க்கையின் பகுதிகள். இதை உணர்ந்து சமநிலையுடன் வாழ வேண்டும் என்பதே இந்த வழக்கத்தின் நோக்கம்.

தமிழ் புத்தாண்டு என்பது ஒரு நாட்காட்டி மாற்றம் அல்ல; அது ஒரு உள்ளார்ந்த மாற்றத்தின் அழைப்பு. ஆதித்ய ஹ்ருதயம் கூறுவது போல, காலம் தெய்வீகமானது; அது உருவாக்குகிறது, காப்பாற்றுகிறது, அழிக்கிறது.

அந்த கால ஓட்டத்தில் நாம் ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்து, நல்லதை வளர்த்துக் கொள்ள வேண்டும். நமது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்ற வேண்டும்.

இந்த புத்தாண்டு நமக்கு அறிவு, அமைதி, வளம், ஆனந்தம் ஆகிய அனைத்தையும் அளிக்கட்டும்.

***இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!***

**சித்திரை மாத சிறப்புகள் :**

சித்திரை மாதத்தை "இளவேனிற்காலம்", "வசந்த காலம்" என்று அழைக்கிறோம். கடும் வெயிலைத் தணிக்க இளநீர், பதநீர், பனை நுங்கு, தென்னங்கீற்று பந்தல் போன்ற இயற்கையான பொருள்கள் பெரிதும் மக்களுக்கு உதவுகின்றன. பல கோயில்களில் சிறப்பான திருவிழாக்களும், தேர்த் திருவிழாக்களும் நடைபெற்று, ஆன்மிகச் சிறப்புகள் கொண்ட மாதமாக சித்திரை விளங்குகிறது.

நாயன்மார்களின் வரலாற்றை எடுத்துக் கூறும் பெரிய புராணத்தை சேக்கிழார் சித்திரைத் திருவாதிரை நாளில் தொடங்கி, அடுத்த சித்திரை திருவாதிரையில் முடித்து அருளினார். ஞானசம்பந்தர் திருப்பதிகம் அருளிச் செய்யத் தொடங்கியதும் சித்திரை திருவாதிரை நாளாகும். "எண்ணுகேன் என் சொல்லி" என்று அப்பர் பதிகம் பாடி இறைவன் திருவடியை அடைந்ததும் சித்திரை சதய நாளாகும்.

ராமானுஜர் அவதரித்ததும் சித்திரைத் திருவாதிரை நாளாகும். மதுரகவி ஆழ்வார், நடாதூர் அம்மாள், உய்யக்கொண்டார் போன்ற வைணவ ஆச்சாரியர்கள், உமாபதி சிவாசாரியார், இசை ஞானியார், திருக்குறிப்புத் தொண்டநாயனார், திருநாவுக்கரசர், சிறுத்தொண்ட நாயனார், மங்கையர்க்கரசியார், விறன்மிண்ட நாயனார் போன்ற நாயன்மார்களின் திருநட்சத்திரங்களும் சித்திரை மாதத்தில்தான் வருகின்றன.

சோழ மன்னர்களில் கடற்கரைப் பட்டினமான பூம்புகாரில் "இந்திர விழா" எனும் சித்திரை விழா சிறப்புற நடைபெற்றதை மணிமேகலை எடுத்துக்கூறுகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்துக்கு உள்பட்ட திருவேங்கைவாசல் கோயிலில் சித்திரைத் திருவிழா நாளில் இறைவன் முன்பு "சாந்திக் கூத்து" நடத்த பெண்ணொருத்தி நிலம் அளித்ததாக விக்கிரமச் சோழன் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

கும்பகோணம் அருகேயுள்ள மானம்பாடி நாகநாத சுவாமி கோயிலில் சித்திரை மாதத்தில் "தமிழ் கூத்து" நடத்த விக்கிரமாதித்தன் திருமுதுகுன்றன் என்பவன் முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் நில தானம் அளித்துள்ளார்.

திருவாரூர் கோயிலில் சித்திரை மாதம் சதய விழா ஒன்று வீதிவிடங்கப் பெருமான் தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளியபொழுது "தியாக வினோத தலைக்கோலி" என்ற தலைசிறந்த ஆடல் மகள் ஒருத்தி நடனம் ஆடியதாக விக்கிரம சோழன் கல்வெட்டு அளிக்கும் செய்தியினால் நம்மால் அறிய முடிகிறது.



திருவாரூர் கோயிலில் நடைபெற்ற வசந்த விழாவின் சிறப்பைப் பற்றி பெரிய புராணம் கூறுகிறது. மயிலாப்பூர் கோயிலில் நடைபெற்ற வசந்த விழா பற்றி ஞானசம்பந்தர் பதிகத்தில் எடுத்துரைக்கின்றார். வசந்த விழாவின்போது இறைவன் வசந்த மண்டபத்தில் மாலை வேளையில் எழுந்தருளுவார். எழுந்தருளும் மண்டபத்தைச் சுற்றி தண்ணீர் நிரப்பப்பட்டு குளிர்ச்சியாக இருக்கும். திருவரங்கம் கோயிலில் வசந்த விழா சிறப்பாக நடைபெறுகிறது. வசந்தத் திருநாள் நடத்த தானம் அளிக்கப் பெற்றதாக பல கோயில் கல்வெட்டுகள் எடுத்துக் கூறுகின்றன.

கோடைகாலத்தில் அதிகமாகக் கிடைக்கும் மாம்பழத்தை இறைவனுக்கு அமுதாக படைத்தனர். சிதம்பரம் நடராஜர் கோயிலில் இரண்டாம் ராஜராஜ சோழன் காலத்தில் சித்திரை மாதம் முதல் ஆவணி மாதம் வரை மாம்பழம் தர நிபந்தம் செய்து கொடுத்ததாகக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. திருவரங்கத்துப் பெருமானுக்கு சித்திரை திருவிழாவில் பத்தாம் நாள் விழாவில் இளநீர் அமுது படைக்கும் வழக்கம் உள்ளது.

திருவிழாக்களுக்கு வருவோருக்கும், வழிநடையாகச் செல்வோருக்கும் வெயில் அதிகமுள்ள சித்திரை, வைகாசி மாதங்களில் தண்ணீர் பந்தல் வைத்து தாகத்தை தீர்க்க, நீர், மோர், பானகம் அளிக்கும் பழக்கம் உள்ளது. காஞ்சிபுரத்தை அடுத்த உக்கல், உத்திரமேரூர், திருச்சி அருகே திருச்செந்துறை, திருப்பராய்த்துறை போன்ற கோயில்களில் மண்டபங்களில் தண்ணீர்ப் பந்தல் இருந்ததை கல்வெட்டுகளில் அறியமுடிகிறது.

மதுரையில் மீனாட்சி சுந்தரேசுவரர் திருமண விழாவும், கள்ளழகர் ஆற்றில் இறங்கி சேவை சாதிக்கும் வைபவமும் சிறப்பானது. சமயபுரம் மாரியம்மன் கோயிலில் நடைபெறும் தேர்த் திருவிழா மிகவும் பிரசித்தி பெற்ற விழாவாகும். திருச்செங்காட்டங்குடி கோயிலில் நடைபெறும் சிறுத்தொண்டநாயனார் அமுது படையல் விழா மிகவும் சிறப்பான விழாவாகும். தஞ்சை அருகே திருவையாற்றில் நடைபெறும் "சப்தஸ்தான விழா" குறிப்பிடத்தகுந்த விழாவாகத் திகழ்கிறது.

# நல்ல தொண்டில் நல்ல உள்ளம்

## மகா சிவராத்திரியில் ஒரு மகத்தான பணி



மகா சிவராத்திரி ஆண்டுதோறும் மாசி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்ச (தேய்பிறை) சதுர்த்தசி திதி கூடும் இரவில் வழிபடப்படுகிறது. சென்னையில் உள்ள ஒரு சிவனடியார்கள் குழு ஒவ்வொரு வருட மகா சிவராத்திரி அன்றும், சென்னைக்கு வெளியே சில நூறு கிலோமீட்டர் சுற்றளவில் தொலைதூரக் கிராமங்களில் உள்ள 8 அல்லது 10 புராதன சிவன் கோவில்களைத் தேர்ந்தெடுத்து அந்தக் கோவில்களுக்குச் சென்று சிவராத்திரி வழிபாட்டினை அந்த கிராம மக்களுடன் சேர்ந்து கொண்டாடி வருகிறது.

2005 ஆம் ஆண்டு 15 பேர்களுடன் முதன்முதலில் தொடங்கப்பட்ட இந்த சிவராத்திரி புனிதப்பயணம் ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக வளர்ந்து இந்த வருடத்தில் 200 பெண்கள், 20 குழந்தைகள், 55 ஆண்கள் உள்பட 275 பேர் கலந்து கொண்டனர். மாலை 4 மணி அளவில் ஒரு இடத்தில் சந்தித்து வேன்கள் மூலம் கிளம்பும் இந்த சிவனடியார் கூட்டம், இரவு முழுவதும் வெவ்வேறு கோவில்களில் சிவ ஆராதனைகளை முடித்து மறு நாள் காலை கிளம்பிய இடத்திற்கே வந்து சேருகிறது. கலந்துகொள்ளும் ஒவ்வொரு சிவனடியாரும் பயணக்கட்டணம் (சுமார் 500 முதல் 600 வரை) மற்றும் பூஜைக்குரிய பூ, பழங்கள் மற்றும் அந்தக் கிராமக் கோவில்களில் அடுத்த ஒரு மாதம் விளக்கெரிய எண்ணெய் ஆகியவற்றையும் எடுத்து வருகின்றனர்.

இந்த ஆண்டு 17 வேன்கள் மூலம் சென்னையில் இருந்து கிளம்பிய குழு பின்வரும் திருக்கோவில்களில் சிவராத்திரி வழிபாடு நடத்தியது: விஜயநல்லூர் அகத்தீஸ்வரர் கோவில், சூரிய வழிபாட்டுத் தலமான ஆத்தூர் புண்யகோடீஸ்வரர், சுயம்பு லிங்கமான சோத்துப்பெரும்பேடு அரவேம்பீஸ்வரர், சோத்துப்பெரும்பேடு சோழிப்பாளையம் ஸ்ரீஅகத்தீஸ்வரர், புதூர் விருப்பாட்சீஸ்வரர், சுயம்பு லிங்கமான கொடிப்பள்ளம் சுந்தரேஸ்வரர், 28 நட்சத்திரத் தூண் உள்ள இளவம்பாக்கம் இளவபுரீஸ்வரர் ஆகிய கோவில்களில் சிவராத்திரி வழிபாடு நடைபெற்றது. முன்னதாக மாலை 6 மணி முதல் 8 மணி வரை அம்பத்தூர் விவேகானந்தா வித்யாலயா பள்ளியில் 12 ஜோதிர்லிங்க தரிசனம் நடைபெற்றது.

ஒவ்வொரு ஆண்டும் செல்ல வேண்டிய கோவில்கள் முன் கூட்டியே முடிவு செய்து, கோவிலுக்குச் செல்லும் வரிசைக்கிரமம், செல்லும் வழி ஆகியவை திட்டமிடப்பட்டு உத்தேசமான நேரம் கணக்கிடப்படுகிறது. அந்த நேரத்தில் கோவில் வழிபாட்டு நிகழ்ச்சிகள் அமையுமாறு கோவில் நிர்வாகிகளிடம் பேசி முடிவு எடுக்கப்படுகிறது. ஒவ்வொரு இடத்திலும் குடிக்கத் தண்ணீர் ஏற்பாடு பெண் பக்தர்களுக்கான கழிப்பிட வசதிகளும் முன் கூட்டியே திட்டமிடப்படுகின்றன. பக்தர்கள் அனைவருக்கும் இரவு உணவு ஏற்பாடு, அந்த சமயத்தில் செல்லும் கோவிலில் ஏற்பாடு செய்யப்படுகிறது. இதற்கு ஏற்றபடி பயணம் திட்டமிடப்படுகிறது. பயண நிறைவில் அனைவருக்கும் தேநீர் ஏற்பாடு செய்யப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் இது வரை போகாத புதிய கோவில்களே பயணத்திட்டத்தில் இடம் பெறுகிறது. இதுவரை தோராயமாக 200 கோவில்களில் இந்தக் குழு புனிதப் பயணம் மேற்கொண்டிருக்கிறது. 21 ஆண்டுகளுக்கு முன்பு பாபு அவர்களின் முயற்சியால் தொடங்கப்பட்ட இந்த புனித யாத்திரை, அசோக் நகர் ஆஞ்சநேயர் கோவில் மற்றும் வேத விஞ்ஞான ஆராய்ச்சி மையம் போன்ற அமைப்புகளின் ஆதரவுடன் சுந்தர், அருண், சிவகுமார், பார்வதி அம்மாள், சுப்ரமணி, வரதராஜன் ஆகிய தன்னார்வலர்களின் பங்களிப்புடன் தொடர்ந்து நடந்து வருகிறது.

இந்தப் பணியை முன்னெடுத்து நடத்தி வரும் பாபு, சென்னையின் பல இடங்களில் இலவச மாலை நேர வகுப்புகள் நடத்தி வரும் அனன்யா ஃபவுண்டேஷன் அறங்காவலர்களில் ஒருவர். ஒவ்வொரு ஆண்டும் அமர்நாத் மற்றும் சபரிமலை யாத்திரிகர்களுக்கான மருத்துவ முகாம்களில் 30 நாட்கள் தன்னார்வலராகவும் பாபு கலந்துகொள்கிறார். பாபு மற்றும் அவருடன் இணைந்து பணியாற்றும் தன்னார்வலர்களின் சீரிய தொண்டுப்பணிகளை ஸ்ரீதமிழ் வாழ்த்துகிறது.

# சினிமா சாரல்

- சேஷு

## வெப் சீரிஸ் : துரந்தர்

மூன்று மாதத்திற்கு முன்பு வெளியான துரந்தர் பாகம் 1 தியேட்டர்களிலும், ஓடிடி தளத்திலும் மக்களிடம் அமோக வரவேற்பை பெற்றது. Uri- The surgical Strike படத்தின் மூலம் பாலிவுட்டில் வெளிச்சம் பெற்ற இயக்குநர் ஆதித்ய தர்ரின் அற்புத படைப்பு தான் துரந்தர்.

பாகிஸ்தானில் லயாரி பகுதியில் யார் பெரிய தல என்ற போட்டியில் இரு சகோதரர்களுக்குள் போட்டி இருக்க இருவரையும் நேக்காக போட்டுத் தள்ளும் இந்திய உளவாளியின் கதையை ஒன் லைனில் சொல்லி விடலாம். இந்த ரவுடிக் கும்பல் இந்தியாவில் நடக்கும் பயங்கரவாதச் செயல்களுக்கு பாகிஸ்தான் ISI யுடன் இணைந்து செயல்படுவதை இந்திய உளவாளி கண்டறிய ரவுடிக் கும்பலின் குகைக்குள்ளேயே நுழைந்து அவர்களின் தவிர்க்க முடியாத டானாக உருவாகிறார். பின் இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானில் நடக்கும் சதித்திட்டங்கள், அதாவது பயங்கரவாத பயிற்சி, முஸ்லீம் இளைஞர்களுக்கு இந்திய எதிர்ப்பை விதைக்க மதவாத மூளைச்சலவை, ஆயுதக் கடத்தல், ஆயுதம் வாங்க போதைப் பொருள் கடத்தல், இந்திய கரன்ஸிகளை போலியாக அச்ச டித்து இந்தியாவில் உள்ள ஸ்லீப்பர் செல்கள் மூலம் பரவ விடுவது என அனைத்து பயங்கரவாத வலைப்பின்னலையும் இந்திய உளவாளி கண்டறிந்து ஒழிப்பது தான் துரந்தர் இரண்டு பாகத்தின் மொத்த கதையும் ஆகும்.




பாகிஸ்தானில் அரசியல் குழப்பங்கள் நேரும் போதெல்லாம் மக்களின் பார்வையை திசைமாற்ற இந்தியாவில் பயங்கரவாத செயல்களை நடத்த திட்டமிடும் ISI, பாகிஸ்தான் ராணுவம் இவர்களோடு பயங்கரவாத அமைப்புகள் ஆகியோரின் கூட்டுச்சதியை அந்த முகாமில் இருந்தே இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுக்கு தகவல் சொல்கிறார் இந்திய உளவாளி. அஜித் டோவலாக நடித்துள்ள ரா. மாதவன் தனது அசத்தலான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். டோவலின் மேனரஸித்தை நுணுக்கமாக பிரதி எடுத்துள்ள இயக்குநரை பாராட்டத் தான் வேண்டும். அஜித் டோவல் (மாதவன்) திரையில் வரும் காட்சிகளின் போது தியேட்டரில் விசில் பறக்கிறது.

ஒரு படத்தில் ஹீரோ, ஹீரோயின், சில முக்கியமான கதாபாத்திரங்கள் தங்களது கடுமையான உழைப்பின் மூலம் சிறப்பான நடிப்பை கொடுப்பதை பார்த்திருக்கிறோம். ஆனால் துரந்தரில் ஒவ்வொரு கேரக்டரும், அதில் நடிப்பதற்கான நடிகர்கள் தேர்விலிருந்து, அவர்கள் அந்த கேரக்டராகவே மாறும் அளவிற்கு தனது அசாத்திய உழைப்பை தந்துள்ளார் இயக்குநர் ஆதித்ய தர். பாகிஸ்தான் தில்லாலங்கடி அரசியல்வாதியாக வரும் ஜலீல், இந்தியாவால் தேடப்படும் குற்றவாளி தாவூத் இப்ராஹிம் கேரக்டரையெல்லாம் பார்த்து பார்த்து செதுக்கியுள்ளார் இயக்குநர். உயரத்தில் மட்டும் அல்ல தங்கள் நடிப்பின் மூலமும் மிக உயரத்தை அடைந்துள்ளனர் சஞ்சய் தத் மற்றும் ராம்பால்.

ஹிந்து,ஹிந்துத்துவ வெறுப்பு கலைஞர்களான பிரகாஷ் ராஜ், அமீர், வெற்றிமாறன், வசந்தபாலன் போன்றோர் அச்சப்படுவதற்கான காரணத்தை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. அது என்னவெனில் தேசியம் மற்றும் ஹிந்துத்துவம் சார்ந்து வெளிவரும் சில படங்கள் கிரிஞ்சியாக இருப்பதால், தங்களைப் போன்று மக்களின் மனதில் உணர்வைத் தட்டியெழுப்பும் படங்களை சங்கி கூட்டங்களால் எடுக்க முடியாது என்ற எண்ணத்தை தாண்டி, அது எக்காலத்திலும் வியாபாரம் ஆகாது என நினைத்துக் கொண்டிருந்தவர்கள் நினைப்பில் மண்ணள்ளி போட்டு விட்டது துரந்தர் என்றால் மிகையில்லை.

முஸ்லீம்களுக்கு எதிரான படமா? இல்லை இஸ்லாத்தை தங்கள் அரசியலுக்கு பாகிஸ்தான் எப்படி பயன்படுத்துகிறது என்பதையும், இது பிரச்சாரப் படமா? என்று கேள்வி கேட்போருக்கு, ஆம் இது பிரச்சாரப் படம் தான் என்று உரக்கச் சொல்லலாம்.

இந்திய, ஹிந்து விரோத, பாகிஸ்தான் ஆதரவு காங்கிரஸ் கட்சியினரின் துரோகச் செயலை நேரடியாகச் சொல்லாமல் பார்ப்பவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் மிக நேர்த்தியாக எடுக்கப்பட்ட படம். RRR, தி காஷ்மீர் ஃபைல்ஸ், தி கேரளா ஸ்டோரி, கலாச்சாரத்தை பேணும் காந்தாரா என அடுத்தடுத்த படங்கள் மேக்கிங்கில் மட்டுமல்லாமல் வசூலிலும் பட்டையை கிளப்புவதால் பாலிவுட், கோலிவுட் கலக்கத்தில் இருப்பது என்னவோ உண்மை தான்..

இது போன்ற படங்கள் தொடர்ந்து வெளிவந்தால் தான் ஜென்ஸி தலைமுறைகளுக்கு இந்தியாவில் இதுநாள் வரை கட்டமைக்கப்பட்ட பொய் வரலாற்றை புரிந்து தெளிந்துக் கொள்ள முடியும்..

Printed by Published by Padmapriya L on behalf of Padmapriya L, Published at 77/6, 10th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Printed at Chennai Offset Printers, No. 19/1 & 21/2, Kitabath Khan Bahadur Street, Ellis Road, Chennai - 600 002, Editor Padmapriya L.